திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

மீனுட்சி திருமணம்

மாலை 9] பராபவ-கார்த்திகை-டிசம்பர், 1966 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்



இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலையத் தொடக்க விழாவில், நமது தமிழக முதலமைச்சர் திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள், நமது அறநிலைய ஆணையர், சென்னைத் துணை ஆணையர், திரு. கே. ஆறுமுக நாவலர், திரு. க. வச்சிரவேல் முதலியார், திரு. டி. இராமகிருஷ்ண ஐயங்கார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

(6-10-1966)

199547
Q2m 211,N58
31K7

பொருளடக்கம்

1. பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்
2. அம்பிகையின் அருட் கண்கள்
3. திருச்சந்த விருத்தம்
4. சைவ-வைணவ சமரசம்
5. பரம காரணன் பரமசிவனே
6. ஞான சித்தர்களும் சித்த மருந்தும்
7. மதிப்புரைகள்
8. வைஷ்ணவ சமயாசிரியர்களின் விசேஷ நூல்கள்
9. திருவாசகத்தில் ஒரு பெருவாசகம்
10. விடை தெரியுமா?
11. விடை விளக்கம்
12. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை
13. களேபரம்

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 9] பராபவ-கார்த்திகை-டிசம்பர் '66 [மணி 3

பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்

முன்னுரை :

சிவ பெருமானின் மூன்று கண்களைப் போன்று, சிவநெறிப் புராணங்களுள் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்னும் மூன்றும் சிறப்புடையன என்பர். இவற்றுள், திருவிளையாடற் புராணத்தினை இயற்றி அளித்த ஆசிரியரே பரஞ்சோதி முனிவராவர். செல்லி நகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி, இலம்பூர் வீமநாத பண்டிதர், வாயற் பதி அனதாரி யப்பர் என்னும் வேறு பிறர் பலரும்கூட, ஆலவாய்ச் சொக்கரின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும், வியந்து புகழ்ந்து நூல்கள் இயற்றி யுள்ளனர். ஆயினும், இன்று, 'திருவிளையாடற் புராணம்' எனக் கேட்ட துணையானே எவரும் நினைவு கூரச் சிறந்து நிற்பது, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணமே யாகும். இதனால், அதனை இயற்றி யருளிய பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறன் எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பதனை எவரும் இனிதுணரலாம். பிற திருவிளையாடல் நூல்கள் எதுவும் பெறாத சிறப்பினை இந்நூல் பெற்றிருப்பதற்கு, வேறு பிற தெதனையும் விடப் பரஞ்சோதி முனிவரின் சிறந்துயர்ந்த பாடற்றிறனே காரணம் ஆகும்.

பாடற்றிறன் :

பரஞ்சோதியாரின் பாடற்றிறன் தனிப் பெரும் சிறப்பும் சுவையும் வாய்ந்து, பயில்வார் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் பான்மையிற் சிறந்து திகழ்கின்றது. பயில்வார் மனங்கவரும் பான்மைத்தாய்த் திகழ்தலே, சிறந்த பாடற்றிறனுக்குச் செவ்விய இலக்கணமாகும். இவ் வுண்மையினைப் பின்வரும் 'தண்டியலங்காரச் செய்யுள்' இரட்டுற மொழிதலாற் சுவைமிக விளக்குதல் உணர்ந்தின்புறற் பாலது.

> செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்பச்
> சந்தத் தொடையோ டணிதழுவிச்—
> செந்தமிழ்
> கற்றார் இயற்றும் கவிபோல், மனம்கவரும்
> முற்றா நலத்தாள் முகம்.

பரஞ்சோதி முனிவரின் பாடல்களிற் சொல் வளமும், கற்பனை நலமும்,

ஓசை நயமும் செறிந்தொன்றித் திகழ்கின்றன. தமக்கு முன்னர் விளங்கிய பண்டைப் பெருஞ் சான்ருேர்களின் நூல்களை யெல்லாம் முறையாகத்துறை போகக் கற்றுணர்ந்து, அவ்வுணர்வில் தோய்ந்து ஒன்றிய அருங்கலை யுள்ளத்தினராக நின்று, தாம் கற்றுத் தேர்ந்து சுவைத்து மகிழ்ந்த கலை நூல்களின் சாயல்கள் பலவும் ஆங்காங்கே நிழலாடித் திகழும் வண்ணம், பரஞ்சோதி முனிவர் தமது நூலைப் பாடியுள்ளார்! அதனுல், அவர் தம் பாடல்கள் சொற் பொருட் செறிவும் சுவையும் மிகுந்து, பயில்வார்க்கு நாவூறலை விளைக்கும் நலங் கெழுமிச் சுடர் விட்டொளிர்கின்றன!

பேராசிரியர் மனேன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள், பரஞ்சோதி முனிவரின் பாடல் நலங்களிற் பெரிதும் ஈடுபாடு கொண்டு, அதன்கண் ஒரு சில பாடல்களையேனும் நாடோறும் ஓதி மகிழும் பழக்கத்தினைப் பல ஆண்டுகளாகத் தாம் கடைப்பிடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.* இங்ஙனம் பேரறிஞர்கள் பற்பலரின் உள்ளங் கவர்ந்த் பாடற்றிறனுடையவர் பரஞ்சோதி முனிவர். சிறந்த கவிதைகளை இயற்றும் திறம்பெறவிழைவோர், பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணப் பாடல்களைப் பலகாற் பயின்ருேதி வந்தால், அத்திறத்தினை எளிதிற் கைவரப் பெறலாம் எனப் பெரியவர்கள் பலர் கூறுவதுண்டு. அத்தகைய பெருஞ் சிறப்பினராகிய பரஞ்சோதி முனிவரின் பாடல்களில் ஒரு சிலவற்றை ஈண்டுக் கண்டு சுவைத்தின்புறுவோம்.

இயற்கைப் புனைவு.

ஒரு நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை அளந்தறிந்து சுவைத்து மகிழ்தற்குப் பல வழிகள் உண்டு. அவற்றுள், அவர் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் எங்ஙனம் திறம்படப் புனைந்துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறிவதும் ஒரு வழியாகும். இயற்கையில் ஈடுபாடும், அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும் கவிஞர்கள்பாற் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும். 'கவிஞனின் கண்ணுனது, மிகச் சிறந்ததோர் உள்ளெழுச்சியினுல் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும் சுற்றிச் சுழன்று பார்வையிடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல்புகளைக் கவிஞனின் எழுதுகோல் எழில் கனிந்த கலையோவியங்களாக இனிது வடித்துக் கொடுக்கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப்படாமையில் இல்லனவாய் விளங்குவனவற்றிற்குக் கவிஞனின் கற்பனையுணர்வு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக்கின்றது'†

வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணெடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லதொன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்ருே?

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு

எனச் செகப்பிரியர், கவிஞர்களின் இயல்பினை இனி தெடுத்து விளக்குகின்ருர். அதனுல், கவிஞர்களின் கவித்திறனுக்கும் இயற்கைப் புனைவுக்கும் மிக்க பெருந் தொடர்புண்மை இனிது பெறப்படும்.

---

* "It is not possible in this connection to open an explicit discussion on the historical value of the Tiru Vilaiyadal Purana......I mean no disparagement to the Purana as a literary work. So charming is its diction and so great its powers of clear description that for years together I have been in the habit of reading a few stanzas of it every day."

—*Prof. P. Sundaram Pillai, M.A.*

† "The poet's eye, in a fiine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven
And as immagination bodies forth
The form of things unknown, the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name"

—*Shakespeare.*
"A Midsummer Night's Dream."

(1) மேகங்கள் திரண்டெழுதல் :

பரஞ்சோதி முனிவர் இயற்கை நலனைப் புனைந்து பாடுதலிற் சிறந்து திகழ்கின்றார். பண்டைச் சங்க காலப் புலவர்கள் எங்ஙனம் இயற்கைப் பொருள்களில் மிக்க ஈடுபாடு உடையராய் விளங்கி, அவற்றைத் தமது பாடல்களில் இனிதெடுத்துப் பாடினரோ, அங்ஙனமே பரஞ்சோதிமுனிவரும் பாடுகின்றார். பிற் காலப் புலவர் என்னும் காரணம் பற்றிப் பரஞ்சோதி முனிவரின் பாடற்றிறனை, நாம் எளிதாக எண்ணி விடுதற்கில்லை. 'ஒரு பொருளை அவர் புனைந்து பாடும்பொழுது, நாம் அதனை நேரே காண்பதைவிடக் கூட மிக விளக்கமாகக் காண்கின்றோம்; அது மட்டுமன்று, உற்றும் தொட்டுங்கூட உணரப் பெறுகின்றோம்'*.

ஒவ்வொரு புராணத்தின் தொடக்கத்திலும் நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்பு என்பனபற்றிப் பாடுவது கவிஞர்களின் மரபு. அங்ஙனம் நாட்டுச் சிறப்பைப் பாடுங்கால் மேகங்கள் திரளுதல், மழை பொழிதல், வெள்ளம் பெருகி ஆறுகளும் கால்வாய்களுமாகப் பாய்தல் போல்வனவற்றை, அழகுற வருணனை செய்து பாடுவது கவிஞர்களின் வழக்கம். அம்முறையில், மேகங்கள் கடலுக்குச் சென்று நீரை முகந்துமழை பொழிவதனைப் பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சிவபிரானின் திரு நீறு அணிந்த மேனியைப் போல வெண்மையான மேகங்கள் கடலுக்குச் சென்றன ; கடலில் நீரைப் பருகி, உமாதேவியைப் போலக் கருமை நிறம் அடைகின்றன; உயிர்களின் துன்பங்களைப் போக்குவதற்காக இறைவன் பொழிகின்ற திருவருளைப் போன்று, கோடை காலத்தின் வெப்பம் தணியும்படி மழையைப் பொழியஎழுந்தன.

தெய்வ நாயகன் நீறணி
மேனிபோற் சென்று,
பௌவம் மேய்ந்து உமை மேனிபோற்
பசந்து, பல் உயிர்க்கும்
எவ்வம் ஆற்றுவான் சுரந்திடும்
இன்னருள் என்னக்,
கௌவை நீர்சுரந்து எழுந்தன
கனைகுரல் மேகம்.

(2) கோடைமேற் பெரும்போர் :

இங்ஙனம் திரண்டெழுந்த மேகங்கள் இடி இடித்து, மின்னலை மின்னி, வானவில் இட்டு, மழை பெய்யத் தலைப்படுகின்றன. அக்காட்சி, இடி யிடித்தல் ஆகிய வீரப் பெரு முழக்கம் செய்து கொண்டு, மின்னலாகிய வாட்படையை விதிர்த்து, இந்திர வில்லை ஏந்தி, நீராகிய அம்பினைச் சொரிந்து, கோடை வெப்பமாகிய பகைவனை எதிர்த்து அடக்கி வெற்றி கொள்வதற்காக, மேகங்களாகிய வீரர்கள் திரண்டமை போலக் காணப்படுகின்றது.

இடித்து வாய்திறந்து, ஒல்லென
எல்ஒளி மழுங்கத்
தடித்து வாள்புடை விதிர்த்துநின்று,
இந்திர சாபம்
பிடித்து, நீள்அம்பு கோடைமேற்
பெய்து, வெம் பெரும்போர்
முடித்தும், நாம்என வருதல்போல்
மொய்த்தன கொண்மூ.

(3) பால் அருவி :

மேகம் மழை பொழிவதனால் மலைகளில் அருவிகள் பெருக் கெடுத்து ஓடி வருகின்றன. இக்காட்சியானது, கடலாகிய மேகலையை உடுத்துள்ள நிலம் என்னும் பெண்ணானவள், தன்னிடத்தில் தோன்றிய உயிர்களாகிய குழந்தைகளின்பால் இரக்கம்கொண்டு, தன் தனங்கள் ஆகிய மலைகளில்இருந்து பால் ஆகிய அருவி வெள்ளம் பெருகச் செய்தலைப் போன்றுள்ளது.

உடுத்த தெண்கடல் மேகலை
யுடைய பார்மகள், தன்
இடத்து உதித்த பல் உயிர்க்கெலாம்
இரங்கித் தன் கொங்கைத்

---

* "He was the man who of all modern, and perhaps ancient poets, had the largest and most comprehensive soul. All the images of Nature were still present to him, and he drew them, not laboriously, but luckily; when he describes anything, you more than see it, you feel it too......"

—*John Dryden, Shakespeare.*

தடத்து நின்றிழி பாலெனத்
தடவரை முகடு
தொடுத்து வீழ்வன, இழுமெனத்
தூங்குவெள் அருவி.

(4) பொருநை என்னும் பெண்மகவு :

பொதிய மலையிலிருந்து பொருநை யாறு தோன்றுகின்றது என்னும் செய்தியினைப் பரஞ்சோதியார் எத்துணைச் சுவையமையப் பாடுகின்றார். பார்மின்கள்!

கருநிற மேகம் என்னும்
கச்சுஅணி சிகரக் கொங்கை,
அருவியாம் தீம்பால் சோர,
அகன்சுனை என்னும் கொப்பூழ்ப்
பொருவில்வேய் என்னும் மென்தோட்
பொதியமாம் சைலப் பாவை
பெருகுதண் பொருநை என்னும்
பெண்மகப் பெற்றாள் அன்றே.

பொதிய மலை ஒரு பெண். அதன் சிகரங்கள் கொங்கைகள். மலைச் சிகரங்களில் மேகம் படிதல், அப்பெண் கச்சு அணிந்திருத்தல் போலக் காணப்படுகின்றது. மலையினின்று அருவிகள் பெருகுதல், தீம்பால் பெருகுதலை ஒத்துத் திகழ்கின்றது. சுனைகள் கொப்பூழை நினைவூட்டுகின்றன. மூங்கில்கள் தோள்களைப் போன்றுள்ளன. இத்தகைய மலையினின்று ஆறு தோன்றுதல், ஒரு தாய் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுப்பது போன்றுள்ளது!

(5) பொருநைப் பெண் வளர்ச்சி:

இங்ஙனம் பொதிய மலை பெற்ற பொருநை நதி என்னும் பெண் குழந்தையானது, 'கல்' என்ற ஒலியுடன் கரைந்து விழுந்து, காடுகளில் மெல்லெனத் தவழ்ந்து, இடையர்களின் தீம்பாலை உண்டு, உழவர்கள் தெழிக்கும் பம்பைப் பறையின் இனிய குரலைச்செவிமடுத்துக் கொண்டு, கால்வாய்களாக நடந்து, பயிர்ப் பண்ணைகள் தோறும் பாய்ந்து, விளையாடி மகிழ்கின்றது. தான் அடித்துக்கொண்டு வரும்வாழை மரங்கள் தொடைகளாகவும், மாந்தளிர்கள் தன் மேனியின் நிறமாகவும், தென்னம் குரும்பைகள் அழகிய முலைகளாகவும், வஞ்சிக்கொடி இடையாகவும், கூந்தற் பனையின் மடல் தலைமயிராகவும், தாமரை மலர் முகமாகவும் அமைய, மங்கைப் பருவம் நிரம்பிச் சிறந்து, நெய்தல் நிலத்தைச் சேர்ந்த சோலைகளில் சென்று, பொருநை நதிப் பெண் தங்குகின்றாள்!

கல்லெனக் கரைந்து வீழும்
கடும்புனற் குழவி, கானத்து
ஒல்லெனத் தவழ்ந்து, தீம்பால்
உண்டொரீஇத், திண்தோள்மள்ளர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத்
தீங்குரல் செவிவாய்த் தேக்கி,
மெல்லெனக் காலிற் போகிப்
பணைதொறும் விளையாட் டெய்தும்.

அரம்பைமென் குறங்கா, மாவின்
அவிர்தளிர் நிறமாத், தெங்கின்
குரும்பைவெம் முலையா, வஞ்சிக்
கொடிஇறும் நுசுப்பாக், கூந்தல்
சுரும்பவிழ் குழலாக், கஞ்சம்
சுடர்மதி முகமாக் கொண்டு,
நிரம்பிநீள் கைதை வேலி
நெய்தல்சூழ் காவில் வைகும்!

(6) கடலிற் கலத்தல் :

இங்ஙனமே, பொருநையாறு கடலிற் சென்று கலக்கின்றது என்னும் சுருங்கிய கருத்தினை, மிகவும் சுவை பொருந்தும்படி பரஞ்சோதியார் பாடியருள்கின்றார் :

பன்மலர் மாலை வேய்ந்து,
பால்நுரைப் போர்வை போர்த்துத்,
தென்மலைத் தோய்ந்த சாந்தம்
மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி ஆரம் தாங்கிப்
பொருநையாம் கன்னி, முந்நீர்த்
தன்மகிழ் கிழவன் ஆகம்
தழீஇக்கொடு கலந்த தன்றே.

கணவனை மணந்து சேரும் கன்னிப் பெண்கள், அழகுக்காக மலர் மாலைகள் சூடுவர்; நாணத்தால் முகம் மறையத் தலையிற் போர்வை போர்ப்பர்; சந்தனம் களபம் முதலிய நறுமணப் பொருள்களை உடலிற் பூசுவர்; பொன்னும் மணியும் முதலியவற்றால்

இயன்ற பலவகை விலையுயர்ந்த அணி வகைகளைப் பூண்டு கொள்வர். இம் முறையே, பொருநை ஆறாகிய கன்னிப் பெண்ணும் மாலை வேய்ந்து, நுரை ஆகிய போர்வை போர்த்துக்கொண்டு, சந்தனம் முதலியன பூசிப் பொன்மணி ஆரம் தாங்கிச் சென்று, கடலாகியதன் கணவனின் மார்பினைத் தழுவிக் கலந்து இன்புற்றது எனப் பரஞ்சோதியார் கூறும் திறம் எத்துணை அழகியதாக உள்ளது!

(7) சிவபிரான் வழிபாடு :

இங்ஙனம் பொருநை நதியானது வெள்ளமிட்டுப் பெருகி, தனது இரு கரைகளிலும் விளங்கும் சிவாலயங்களை நெருங்கி, முல்லை நிலத்தினின்று தான் கொணர்ந்த பால் தயிர் நெய் கோமயம் கோசலம் தேன் ஆகிய வற்றை, அலைகளாகிய கைகளால் முகந்து வீசியும், சந்தனத்தை அப்பி யும், மணமிக்க மலர்களைத் தூவியும் செல்லுகின்றது. இக்காட்சி சிவபிரானை வழி படுகின்ற சிவனடியார்களின் செயலை ஒத்துள்ளது.

வல்லைதாய் இருபால் வைகும்
சிவாலயம் மருங்கில் ஈண்டி,
முல்லை ஆனைந்தும் தேனும்
திரைக்கையால் முகந்து வீசி,
நல்ல மான்மதம் சாந்துஅப்பி,
நறுவிரை மலர்தூய், நீத்தம்
செல்லலாற் பூசைத் தொண்டின்
செயல்வினை மாக்கள் போலும்!

(8) செவிலித்தாயும் மகளும் :

பொருநை நதி பாய்ந்து, மருத நிலத்தினைச் செழிப்புடையதாக வளர்க் கின்றது. அம் முறையில் பொருநை யாறு செவிலித்தாயாகவும், மருத நிலம் அவளால் வளர்க்கப்படும் அழகிய கன்னிப் பெண்ணாகவும் அமை கின்றது. பெண்ணுக்குத் தாய் பல அணிகலன்களைப் பூட்டி, நறுமணப் பொருள்களைப் பூசி, சுவை மிக்க உணவுகளை உண்பித்து, அன்புடன் வளர்ப்பாள். அதுபோலவே, பொரு நையாறும் மலைகளிலிருந்து மணி, பொன் வைரம் குழை அகில் சந்தனம் ஆகியவற்றை அடித்துக்கொணர்ந்தும், பலவகை உணவுப் பொருள்களை விளை வித்தும், மருத நிலத்தினை வளம் படுத் துகின்றது.

வரைபடு மணியும் பொன்னும்
வைரமும் குழையும் பூட்டி,
அரைபடும் அகிலும் சாந்தும்
அப்பி, இன்னமுதம் ஊட்டிக்,
கரைபடு மருதம் என்னும்
கன்னியைப் பருவம் நோக்கித்,
திரைபடு பொருநை நீத்தம்
செவிலிபோல் வளர்க்கும் மாதோ!

(9) கலக்கமும் தெளிவும்:

இவ்வாறு பெருகி ஓடும் பொருநை நதியானது முதலில் மிகவும் கலங்கலாக இருந்தது; பின்னர் படிப்படியே கலங் கலின்றித் தெளிவு அடைந்தது; முத லில் கலங்கி இருந்த தன்மை, வேதா கமங்களெல்லாம் சிவபிரானே முழு முதல்வன், திருநீறு சிவமணி திருவைந் தெழுத்து என்பனவே வீடு பேறு அடை தற்குரிய சாதனங்கள் என்று முழங்கு வதை ஓதி உணர்ந்தும், அவற்றில் தெளிவு பெறாதவர்களின் அறிவைப் போல இருந்தது. பின்னர் அதுவே கலங்கலின்றித் தெளிவடைந்தமை, வேதாகமங்களை ஓதி வீடு பேற்றுக் குரிய மெய்யுணர்வைப் பெற்ற ஞானி களின் தெளிந்த உள்ளம் போலத் திகழ்ந்தது.

மறைமுதற் கலைகள் எல்லாம்
மணிமிடற் றவனே எங்கும்
நிறைபரம் என்றும், பூதி
சாதன நெறி வீடுஎன்றும்,
அறைகுவது அறிந்தும் தேறார்
அறிவுஎனக் கலங்கி, அந்த
முறையின் வீடு உணர்ந்தார் போலத்
தெளிந்தது மூரி வெள்ளம்!

(10) யோகியர் கைப்படும் பொருள் :

கடலின் உவர்ப்பு நீரை உண்டு, அவ்வுவர்ப்பை நீக்கித் தூய்மை செய்து மேகங்கள் பொழிந்த மழையானது, பொருநை நதியாகப் பெருகி, யாவரும்

பருகி மகிழும் அமுதமாகப் பயன்பட்டது. எதுபோல எனில், இழிந்த மாந்தரின் கைப்பொருளும், சிவஞானியர்களின் கையிற் சென்ருல் குற்றம்நீங்கித் தூய்மை அடைந்து, பெரும் பயனை விளைவிப்பது போல!

இழிந்த மாந்தர்கைப் பொருள்களும்
இகபரத்து ஆசை
கழிந்த யோகியர் கைப்படில்,
தூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறுபோல், உவரியுண்டு
உவர்கெடுத்து எழிலி
பொழிந்த நீர் அமுது ஆயின,
புவிக்கும் வானவர்க்கும்!

(11) அம்பிகையின் செயல் :

இவ்வாறு கடல் நீர் ஒன்றே, மேகமாக மாறி மழையாகப் பொழிந்து, பொருநை நதியாகப் பெருகிப் பல சிறிய ஆறு கால்வாய் குளம் கிணறு குட்டை அகழி கிடங்கு என வேறு வேறு பெயர் பெற்றுப் பயிர்களை எல்லாம் வளர்க்கின்றது. அதன் செயல் எதுபோல உள்ளது என்னில், ஈறிலாதவளாகிய அம்பிகை ஒருத்தியே பராசத்தி, ஆதிசத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனப் பல நிலைகளில் விளங்கி, ஆக்கல் காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை இயற்றி உயிர்களை எல்லாம் காப்பதைப் போல உள்ளது.

ஈறு இலாதவள் ஒருத்தியே,
ஐந்தொழில் இயற்ற
வேறு வேறுபேர் பெற்றென,
வேலைநீர் ஒன்றே
ஆறு கால்குளம் கூவல்
குண்டகழ் கிடங்கு எனப்பேர்
மாறி, ஈறில்வான் பயிர்எலாம்
வளர்ப்பது மாதோ!

(12) மரங்கள் மலர்தல் :

இளவேனிற் காலத்தின் இயல்புகளைப் பரஞ்சோதியார் பாடுவதற்குரிய ஓர் இடம் நேர்கின்றது. அங்கே தமது புலமை நலம் முற்றும் பொலிந்து திகழும்படி, பரஞ்சோதியார் பல பாடல்களால் இளவேனிற்கால நிகழ்ச்சிகளை இனிது பாடுகின்ருர்! இளவேனிற் காலத்தில் மாமரம் தளிர்க்கும்; பலாசம் காஞ்சி மரவம் காயா ஞாழல் புன்னை முதலிய மரங்கள் மலரும். இவ்வியற்கைத் திறனைப் பரஞ்சோதி முனிவர் பின்வரும் கருத்தமைய எழிலுறப்பாடுகின்ருர் :

தேவருலகிலுள்ள கற்பக மரத்தினையே சீறிச் சிவந்தெழுதல் போல, இனிய தேமா மரங்கள் சிவந்த தளிர்களை ஈன்று வானளாவ ஓங்கி உயர்ந்தன; பொற் காசுகள் கொண்டு பதித்துச் செய்த குண்டலத்தை அணிந்த பலாச (முள்முருக்க) மரங்கள் சூரியனைப் போலச் செந்நிறமாகவும், காஞ்சிமரங்கள் இந்திரனைப் போலக் கருநிறமாகவும், மரவ மரங்கள்சந்திரனைப் போல வெண்ணிறமாகவும், காயாஞ் செடிகள் திருமாலைப் போல நீல நிறமாகவும் பூக்களை மலர்ந்தன. வையை யாற்றங்கரை ஆகிய பெண், மணல் மேடாகிய தனது அல்குலில், மேகலையினை அணிந்ததுபோல், ஞாழல் மரங்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்தின. புன்னை மரங்கள் மரகதம் போலத் தழைத்து,வெண்முத்துப்போலஅரும்பி, பொன் போல மலர்ந்து, பவளக் காடு போல மகரந்தம் தூவின.

அண்டர்வான் தருமேற் சீறிச்
சிவந்தெழுந் தாங்குத், தேமாத்
தண்டளிர் ஈன்று வானந்
தைவர, நிவந்த; காசு
கொண்டிடை அழுத்திச் செய்த
குழையணி மகளிர் போல,
வண்டிறை கொள்ளப் பூத்து
மலர்ந்தன செருந்தி யெல்லாம்.

செங்கதிர் மேனி யான்போல்
அவிழ்ந்தன செழும்ப லாசம்;
மங்குலூர் செல்வன் போல
மலர்ந்தன காஞ்சி; திங்கட்
புங்கவன் போலப் பூத்த
பூஞ்சினை மரவம்; செங்கை
அங்கதிர் ஆழி யான்போல்
அலர்ந்தன விரிந்த காயா.

தரைகிழித் தெழுநீர் வைகைத்
தடங்கரை எக்கர் அல்குல்
அரவமே கலைசூழ்ந் தென்ன,
அலர்ந்துதா துகுப்ப ஞாழல்;
மரகதம் தழைந்து, வெண்முத்து
அரும்பிப், பொன் மலர்ந்து, வாங்கும்
திரைகடற் பவளக் காடு
செய்வன, கன்னிப் புன்னை.

(13) உலகியல் உவமைகள்:

இளவேனிற் காலம் தோன்றுவதற்கு முன்னே மரங்கள் இலையை உதிர்க்கும். இலையுதிர்ந்த பின்னரே மரங்கள் புதிதாகத் தளிர்விடும்; பசுமை நிறம் அடைந்து தழைக்கும்; தேன் மிக்க மலர்களைப் பூக்கும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பரஞ்சோதியார் உலகியல் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உவமை காட்டிச் சுவை துளும்ப பாடுகின்றார் :

கணவர்பால் ஊடல் கொண்ட பெண்கள் தம் அணிகலன்களை யெல்லாம் சினந்து கழற்றி எறிவர்; அதுபோல மரங்கள் இலை யுதிர்க்கின்றன. இலையுதிர்ந்த மரங்கள் பின்னர்க் குழைவரத் தழைக்கும்; அச் செயல், மகளிர் தமது கணவனை ஊடல் நீங்கிய பின்னர்க் குழைந்து புல்லி உவகையால் உடல் பூரிப்பது போன்றுள்ளது. கணவனைப் பிரிந்த பெண்கள் கண்ணீர் பெருக உடலிற் பசலையுற்று நிற்பர்; அதுபோல் மரங்கள் கள்நீர் பெருகப் பசுமை நிறம் எய்தித் திகழ்கின்றன. களவொழுக்கத்திற் காதல் கைம்மிக் குத்திளைக்கும் மகளிர் ஊரவரால் அலர் தூற்றப்படுவர்; அதுபோல மரங்கள் யாவும் இளவேனிலில் அலர் பூத்து நெருங்கி அடர்ந்துள்ளன.

ஊடினர் போல வெம்பி
இலையுதிர்ந்து; உயிர்அன் னாரைக்
கூடினர் போல எங்கும்
குழைவரத் தழைந்து; நீங்கி
வாடினர் போலக் கண்ணீர்
வாரமெய் பசந்து; மையல்
நீடினர் அலர்போற் பூத்து,
நெருங்கின மரங்கள் எல்லாம்.

(14) கற்புடை மகளிர்:

கோடை கால வெப்பத்தால் மரங்கள் இலையுதிர்ந்து வாடுகின்றன. பின்னர்த் தழைக்கின்றன. அச்சமயங்களில் மரங்களைச் சுற்றிப் படர்ந்துள்ள கொடிகளும் முறையே வாடியும்தழைத்தும் நிற்கின்றன. இக்காட்சி, கணவன் துன்புறுங்கால், தாமும்துன்புற்று, கணவன் மகிழுங்கால் தாமும் மகிழ்ந்து நிற்கின்ற கற்புடைய மகளிரின் செயலைப் போன்றுள்ளது.

விழைதரு காத லார்தாம்
மெலிவுற மெலிந்து, நெஞ்சம்
குழைவுறக் குழைந்து நிற்கும்
கோதிலாக் கற்பி னார்போல்,
மழையறும் கோடை தீப்ப
மரந்தலை வாட, வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற;
தழீஇயபைங் கொடிகள் எல்லாம்.

(15) நடனக்காட்சி:

இள வேனிலில் தென்றல் வீசுகின்றது. மலர்களில் தேன் நிறைந்து சிதறுகின்றது. தும்பிகள் தேனை யுண்டு இசை முரல்கின்றன. தென்றல் காற்று வீசுதலால் பூங்கொம்புகள் அசைந்து ஆடுகின்றன. இக்காட்சியானது, நடன ஆசிரியர் ஆட்டுவிக்க, முகத்தினின்று வியர்வைத் துளிகள் சிந்துமாறு, இசைபாடிக் கொண்டு, அழகிய பெண்கள் அசைந்தாடும் நடனக் காட்சியை நினைவூட்டுகின்றது.

சேட்டிகைத் தென்கால் தள்ளத்,
தெண்மதுச் சிதறத், தும்பி
நீட்டிசை முரலச் சாயா
நின்று, பூங் கொம்பர் ஆடல்,
நாட்டியப் புலவன் ஆட்ட,
நகைமுகம் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற
பாவைமார் போன்ற அன்றே.

(16) நல்லோர் வள்ளன்மை :

செவ்வந்தி மலர்களும், மகிழம் பூக்களும் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. ஆயினும், அவற்றில் இருக்கும் சிறிதளவு தேனை விரும்பி வந்து, வண்டு

கள் உண்டு களிக்கின்றன. அக் காட்சி, நல்லவர் செல்வம் குறைந்து வறுமை அடைந்தாலும், தமது வள்ளன்மையிற் குறைய மாட்டார் கள் என்னும் உண்மையைப் புலப்படுத் துகின்றது.

மலர்ந்தசெவ் வந்திப் போதும்
வகுளமும் உதிர்ந்து, வாடி
உலர்ந்துமொய்த் தளிதேன் நக்கக்
கிடப்பன; உள்ளம் மிக்க
குலந்தரு நல்லோர் செல்வம்
குன்றினும், தம்பால் இல்லென்று
அலந்தவர்க் குயிரை மாறி
யாயினும், கொடுப்பர் அன்றே?

(17) கலைகள் தேரும் அறிவன் :

சோலைகளில் தென்றல் வீசுகின்றது. அஃது அங்குள்ள பொய்கைகளில் மலர்ந்து திகழும் தாமரையைத் துழாவுகின்றது. இருவாட்சி முல்லை மல்லிகை முதலிய பூப் பந்தர்களிற் சென்று தாவி அம்மலர்களின் மணத் தினை நன்கினிது கூட்டுண்கின்றது. அத ைற் குளிர்ச்சியுற்று, மெல்லென்றுஇனி மையாக வீசி இயங்குகின்றது தென் றல்! தென்றலின் இந்தச் செய்கை யானது எங்கெங்கே அறிவு நூற் கலை கள் வளர்கின்றனவோ, அங்கங்கெல் லாம் சென்று அவற்றை ஆராய்ந்து கற்று மகிழும் ஒரு சிறந்த மாணவனின் செயல்போலக் காணப்படுகின்றது.

பொங்கரின் நுழைந்து, வாவி
புகுந்து, பங் கயம்து ழாவிப்,
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்,
கொங்கலர் மணம்கூட் டுண்டு,
குளிர்ந்துமெல் லென்று, தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல், இயங்கும் அன்றே.

(18) வேனிற் கோமகன் :

இத்தகைய இயற்கை நிகழ்ச்சிகள் யாவும்நடைபெறுதற்குக்காரணமாகத் திகழும் இளவேனிற் காலத்தின் சிறப் பை என்னென்பது? அதனை ஓர் அரச னுக்கு ஒப்பிட்டுச் சிறப்பித் துரைத் தலே பொருத்தமாகும். இளவேனிற் காலமாகிய அரசன் முடிசூடி வீற்றிருக் கும் திருவோலக்க மண்டபம், சோலை களே எனலாம். அரசனின் திருவோ லக்க மண்டபத்தில் ஏவலர் சிலர் களாஞ்சி ஏந்தி நிற்பர். முழவம் முத லிய இசைக் கருவிகள்ஒலிக்கும். பெண் கள் மங்கலப் பாடல்கள் பாடி வாழ்த் தெடுப்பர். வீரர்கள் வாளேந்தி நின்று காவல் புரிவர். அங்ஙனமே, இளவே னில் ஆகிய அரசனுக்குச் சோலையாகிய ஓலக்க மண்டபத்தில், தாமரைகள் களாஞ்சி தாங்குகின்றன. குயில்கள் முழவம் முதலியன போல ஒலிக்கின் றன. கிளிகள் மங்கலம் இயம்புகின் றன. தும்பிகள் இசை பாடுகின்றன. தாழை மலர்கள் மெய்காப்பாளர்களைப் போல வாளேந்தி நிற்கின்றன.

தாமரை களாஞ்சி தாங்கத்,
தண்குயில் முழவம் ஏங்க,
மாமருது அமருங் கிள்ளை
மங்கலம் இயம்பத் , தும்பி
காமரம் இசைப்ப, முள்வாய்க்
கைதைவாள் எடுப்ப, வேனிற்
கோமகன் மகுடம் சூடி,
இருப்பதக் குளிர்பூஞ் சோலை.

கவிதையின்பம் :

உலக இயற்கைப் பொருள்களிற் காணப்படும் பல திற அமைதியின்ப அழகினை ஆழ்ந்து ஆராய்ந்துணரும் சான்றோர்களுக்கும், மனித வாழ்க்கை யின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண் பொருள் களை நுனித்தறிய முயலும் அறிஞர் களுக்கும், சமயத் துறையிலும் தத் துவ நெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய் யுணர்வாளர்களுக்கும், ஒழுக்கத் தூய் மையிலும் இறையருள் உணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத் தினையே விழைந்து நிற்கும் அருளாளர் களுக்கும், நிலைத்த அழகுடையதாய் நெஞ்சம் கவரும் சிறப்பும் பயனும் வாய்ந்து, மிகவும் பேரின்பத்தினை விளை விக்கும் செயல், நலம் நிறைந்த சிறந்த கவிதைகளைப் படித்து மகிழ்தலேவிட

இன்பம் தருவது வேறு பிறிதொன் றில்லை. 'கவிதை இன்பமானது அரசாட்சி இன்பத்தினைவிட மிகப்பெரிதும் உயர்வுடையதாகும் என்று, சிவபெருமான் சான்றாக யான் துணிந்து கூறுவேன்' என்னும் பொருள் அமைய,

அரசாட்சி யாக அறைவேன்; கவியின்(பு)
அரசாட்சி இன்பின்உயர் வாம்

என முதுபெரும் புலவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கட்டுரைத்துச் சொல்கின்றார். (அரன் + சாட்சி; அரசு + ஆட்சி).

முடிவுரை :

அம் முறையில் ஆராய்ந்தால், பரஞ்சோதியாரின் பாடற்றிறன் நம்மனோர்க்குப் பேரின்பம் பயக்கவல்ல தென்பதில் ஐயமில்லை. அவரனைய சிறந்த பெருங் கவிஞர்களின் பாடல்களை யெல்லாம் பயின்று ஓதி, நாம் அனைவரும் நலம் பெற்றுய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்.

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித்து இன்புறு வோர்க்கும்,
மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்ததூ யவர்க்கும்
சிறந்தநற் கவிதையே இன்பாம்!

—ஆசிரியர்.





வடாற்காடு மாவட்டம்
திரு விரிஞ்சிபுரம்
ஸ்ரீ மார்க்கபந்து ஈசுவரர்
கோயிலின் தோற்றம்

அம்பிகையின் அருட்கண்கள்

முன்னுரை :

உலகத்திலுள்ள எண்ணில்லாத உயிர்களுக் கெல்லாம் ஒப்பற்ற பெருந் தாயாக விளங்குபவள் அம்பிகை. அவள் அருளே வடிவமானவள். ''அருளது சத்தியாகும் அரன்தனக்கு; அருளையின்றித் தெருள் சிவமில்லை; சிவமின்றி அந்தச் சத்தி யில்லை'' என்பது சிவஞான சித்தியார். ''அருள் உண்டாம் ஈசற்கு அது சத்தி அன்றே; அருளும் அவனன்றி இல்லை; அருள் இன்றி அவன் அன்றே இல்லை' என்பது சிவஞான போதம். இவற்றால் அம்பிகை அருள் வடிவினள் ஆதலை அனைவரும் உணரலாம்.

இங்ஙனம் அருள் வடிவமாகத் திகழும் அம்பிகை, தன் அருளை உயிர்களுக்குப் பல்லாற்றானும் வாரிவழங்கிப் பாதுகாத்துத் தண்ணளி புரிந்து வருகின்றாள். அம்பிகையின் அருட்பார்வையினால் ஆருயிர்கள் அனைத்தும் துன்பமெலாம் தீரப் பெற்று, இன்பமெலாம் எய்தி நலம் பெறுகின்றன. பொதுவாக இறைவன் அல்லது அம்பிகையின் திருவடிகளையே பெரிதும் சிறப்பித்துக் கவிஞர்களும் அடியார்களும் பாடுவதுண்டு. பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் தமக்கு ஒரு பெரும் துணையாக இருந்துதவித் துன்பங்களை நீக்கி இன்பங்களை அளித்தருள்வன திருவடிகளே என்று, கவிஞர்களும் அடியார்களும் கசிந்துருகிப் பாடிக் களித்து நிற்பர்.

கண்கள் :

எனினும், திருவடிகளைப் போலவே உயிர்களுக்குப் பல்லாற்றானும் நலம் விளைத்துப் பாது காத்தலில், அம்பிகையின் கண்களும் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. அம்பிகை தன் இனிய பார்வையால், அருள் பொழியும் கடைக்கண் நோக்கத்தால், ஆருயிர்கட்கெல்லாம் அளவிலாப் பெருங் கருணை பாலித்து, ஆறுதல் தந்து, ஆதரவு அளித்துக் காத்து வருகின்றாள். அடியார்களுக்கு அருள் புரிதலில், அம்பிகையின் திருவடிகளைப் போலவே, அவளது அழகிய அருட் கண்களும் ஈடு இணையற்றவையாக இலங்கி வருகின்றன. ஆதலின் அம்பிகையின் கண்களைச் சிறப்பித்துப் பல வகைகளில் கவிஞர்கள் கவின் மிகப் பாடியுள்ளனர். அம்பிகையின் சிறப்பினை அவளது கண்களின் மேல் ஏற்றி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி எனப் பல வகைகளில் உலகம் புகழ்ந்து போற்றித் துதித்து வருதலையும் காண்கின்றோம்.

சங்கரர் :

(1) இவ்வாறே அம்பிகையின் அருள் பெற்ற சான்றோர்களில் ஒருவராகிய ஆதி சங்கரர், அம்பிகையினுடைய கண்களின் சிறப்பை நினைந்து வியந்து பல வகைகளில் சிறப்பித்துத் துதித்திருத்தல் இங்கு நாம் அறிந்து மகிழ்தற்குரியது. அம்பிகையின் கண்களினுடைய சிறப்பைப் புகழ்ந்து போற்றமுற்படும் சங்கரர், கவிதைக் கலைக்கு உயிர் போன்று இன்றியமையாத கற்பனைத் திறம் பொலிய, பின்வரும் கருத்தமையப் பாடுகின்றார்.

ஏழு நகரங்கள் :

''பரத கண்டத்தில் புகழ்பெற்ற பழம் பெரும் நகரங்கள் ஏழு எனக் கூறுவர். அவையாவன: விசாலை (வைசாலி), கல்யாணிபுரம், அயோத்தி, மதுரை, போகவதி, தாரை, அவந்தி என்பன. இவ்வேழு நகரங்களின் இயல்பும் அம்பிகையின் திருக் கண்களில் அமைந்துள்ளது என்கின்றார் சங்கரர்!

அகன்று பரந்து விசாலமானவையாக விளங்குவதினல் விசாலையாகவும்; மங்கலமான சிறந்த நல்ல கல்யாண குணங்களை உடைமையால் கல்யாணிபுரமாகவும்; குவளை மலரால் வெல்லப்படாமல் அழகு மிக்குத் திகழ்வதால் அயோத்தியாகவும்; அடியார்களுக்குப் பேரின்பமாகிய மதுரம் விளைத்தலால் மதுரையாகவும்; வழிபடுவோர்க்குப் பலவகைப் போகங்களையும் கொடுத்தலால். போகவதியாகவும்; அமிழ்த தாரை போன்ற அருள் நோக்கம் பொழிவதனல் தாரையாகவும்; வந்தி எனும் மலடியைப் போல இல்லாமல் பெற்ற தாயைப் போன்ற பரிவுடன் தண்ணருள் புரிதலால் அவந்தியாகவும், அம்பிகையின் அழகிய கண்கள் விளங்குகின்றன'' எனச் சங்கரர் குறிப்பிடுகின்ருர்.

கோலநகர் விசாலையாய்,
நிரந்தர கல்யாணியாய்,
குவலயத்தால் அயோத்தியாய்,
குலமதுரை தானுய்ச்,
சாலவளர் போகவதியாய்,
அமுத தாரையாய்த்,
தண்ணளியால் அவந்தியாய்ச்,
சகவிசையை எனலாய்,
நீலவிழி புடைபரந்து
நெடுநகரப் பெயர்கவர்ந்து,
நீண்டுசேந்து அரிபரந்து
நிகர்ஒழிக்கும் என்ருல்,
ஆலவிடம் அமுதெனக்கொண்டு
அருந்திய உன்மத்தர்புரம்
அதனில் ஒரு புறம்கவர்தல்
அதிசயமோ தாயே!

—சௌந்தரிய லகரி.

எண்வகைச் சுவைகள்:

(2) இனி வேருெரு முறையிலும், அம்பிகையின் அருட் கண்களின் சிறப்பைக் குறித்துச் சங்கரர் கற்பனை நயந் தோன்றப் பின்வருமாறு பாடுகின்ருர்.

சிறந்த இலக்கியங்கள் பலவகைச் சுவைகள் உடையனவாக விளங்கும். சிறப்பாக, உவகை அழுகை பெருமிதம் வெகுளி நகை அச்சம் இளிவரல் மருட்கை என்னும் எட்டு வகைச் சுவைகள் இலக்கியங்களில் அமைந்திருக்கும். இவற்றை முறையே, சிருங்காரம், கருணம், வீரம், ரவுத்திரம், ஹாஸ்யம், பயானகம், பீபத்ஸம், அற்புதம் எனவும் வழங்குவர். இவ்விலக்கியச் சுவைகள் எட்டும் அம்பிகையின் கண்களிலும் கூட அமைந்திருப்பதாகச் சங்கரர் சிறப்புற ஆராய்ந்து பாடுகின்ருர்.

''அம்பிகையின் கண்கள் சிவபிரானுக்குத் தம் கவர்ச்சியினுலும், காதற் குறிப்பினுலும் பெரிய இன்பச் சுவையை அருளுகின்றன. சிவபிரான் அல்லாத ஏனையோர்பால் அருவருப்புச் சுவையை வெளிப்படுத்துகின்றன; சிவபிரானின் சடைமுடி மேல் உள்ள கங்கை நதியாகிய மாற்ருளை வெகுண்டு சீற்றச் சுவையைக் காட்டுகின்றன; சிவபிரானின் நெற்றியிலுள்ள அழல் விழியைக் கண்டு, முன்னர்ப்பார்த்திராதது போல அதிசயச் சுவையைப் புலப்படுத்துகின்றன; சிவபிரான் அணிந்துள்ள பாம்புகள் வெகுளுதல் கண்டு அதற்குப்பயந்தனபோல ஒடுங்கி அச்சச் சுவையை அறிவிக்கின்றன; தம் அழகினுல் செந்தாமரை மலராகிய பகையை வெற்றி கொண்டு வீரச் சுவையைப் படைத்து ஒளிர்கின்றன; தோழியர்களுக்கு மகிழ்ச்சி பெருக இனிது விளையாடி நகைச் சுவையை நல்குகின்றன; இரவும் பகலும் பரவி வழிபடும் அடியவர்களைக் கண்டு இரங்கி நலம் புரிதலால் அருட்சுவை பெருகப் பிறங்குகின்றன. இங்ஙனம் அம்மையின் இரு விழிகளும், இலக்கியங்களில் மிளிரும் எண்வகைச் சுவைகளையும் கற்றுத் தேறிச் சிறந்து திகழ்கின்றன'' எனச் சங்கரர் நயந் தோன்றப் பாடியுள்ள முறை சுவை மிக்கதாகத் திகழ்கின்றது.

அரனிடத்திற் பேரின்பம் அருளும்;
அவன் அல்லார்பால்
அருவருக்கும்; அவன்முடிமேல்
அணி நதியைச் சீறும்;
பரவுநுதல் விழியழல்முன்
பார்த்திலபோல் அதிசயிக்கும்;
பணியாய பணிவெகுளப்
பயந்தனபோல் ஒடுங்கும்;

விரைமுளரிப் பகைகடிந்து
வீரதம் படைக்கும்;
வினவுதுணைச் சேடியர்க்கு
விருந்துநகை விளைக்கும்;
இரவுபகல் அடிபரவும்
எளியனைக்கண்டு அருள்புரியும்
இத்தனையோ படித்தன? நின்
இணைவிழிகள் தாயே!

—சௌந்தரிய லகரி.

இணைவிழி இமையா நாட்டம்
எய்தியது, அலரத் தோன்றும்
பணைநெடும் புவனம், இந்தப்
பார்வை சற்று இமைக்கும் ஆயின்,
துணைஇழந்து அழிவது எண்ணித்
துணிந்தநின் கருணை என்றால்,
கணையினும் கொடியது என்னக்
கடவதோ? கடவுள் மாதே!

—சௌந்தரிய லகரி.

இமையா நாட்டம் :

(3) அம்பிகையின் அருள் நிறைந்த கண்களைச் சங்கரர் வேறொரு வகையி லும் சிறப்பித்துத் துதிக்கின்றார். அம்பி கையின் கண்கள், நம்முடைய கண் களைப் போல இமைப்பதில்லை. அவை கள் இமையா நாட்டம் உடையன. ஏன் அவைகள் இமைப்பதில்லை தெரி யுமா? அம்பிகையின் கண்கள் அரு ளால் திறந்து மலர்ந்திருப்பதனால்தான் இவ்வுலகம் தோன்றி நிலைபெற்று இருந்து வருகின்றது. அவள் தன் கண்களைச் சற்றே மூடி இமைப்பாளா யின், அவ்வளவிற்குள் இவ்வுலகம்அழிந் தொழிதலும் கூடும். அங்ஙனம் எது வும் நேராமையின் பொருட்டே, அம்மை தன் கண்களைச் சிறிதும் இமை யாமல் இருக்கின்றாள். மேலும், இவ் வுலகிலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் தாயாக விளங்குபவள் அவள். ஆருயிர் கள் ஆகிய குழந்தைகள் அனைத்தையும், எத்தகைய இடரும் நேராதபடி விழிப் பாக இருந்து, பரிவுடன் பாதுகாக்கும் கடமையும் பொறுப்பும் அவளுக்கு உண்டு. அதனால், எந்த ஒரு சிற்றுயிர்க் கும் எத்தகைய சிறு துன்பமும் ஏற் பட்டுவிடக் கூடாதே என்ற பெருங் கருணையினால், தன் கண்களை மூடி இமைக்காமலே, அகல விழித்துக் கருத் தாக இருந்து பார்த்துக்கொண்டு, அம் பிகை இமையா நாட்டம் உடையவ ளாகத் திகழ்கின்றாள். அவளது இரக்க இயல்பின் மாட்சிமைக்கும் ஓர் எல்லை யுண்டோ?

நல்லன எல்லாம் தரும் :

(4) இங்ஙனம் பலவகைச் சிறப்புக் களை யுடையன, அம்பிகையின் அருட் கண்கள்! தன்னை அன்புடன் வழிபடும் அடியவர்களுக்குத் தன் கடைக் கண் களின் அருட் பார்வையினாலேயே, செல்வம் கல்வி இன்பம் அழகு முதலிய எல்லா நலங்களையும் அம்பிகை இனி தளித்துக்காப்பாற்றி யருள்கின்றாள்.

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு
நாளும் தளர் வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும்
தரும்; நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம்
தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம்தரும்; பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே.

—அபிராமி அந்தாதி.

எனத் திருக்கடவூர் அபிராம பட்டர் பாடுவது போல, அவளது அருட் கடைக்கண் நோக்கம் நம்மீது படியப் பெற்றால் நாம் அடையக் கூடாத பேறு எதுவும் இல்லை. எல்லாப் பேறுகளும் நமக்கு எளிதாக வாய்க்கும்.

முடிவுரை :

எனவே, நாம் அனைவரும் அம்பி கையை நம் மன மொழி மெய்கள் ஒன்றிப் பல்லாற்றானும் துதித்து வழி பட்டு, நலங்கள் எல்லாம் பெற்று, நன் கினிது வாழ முயலுவோமாக!

—ஆசிரியர்.

திருச்சந்த விருத்தம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

கடைந்த பாற்கடற் கிடந்து
காலநேமியைக் கடிந்து
உடைந்த வாலி தந்தனுக்கு
உதவ வந்து இராமனாய்
மிடைந்த ஏழ் மரங்களும்
அடங்க எய்து வேங்கடம்
அடைந்த மால பாதமே
அடைந்து நாளும் உய்மினோ.

பொழிப்புரை: கூர்மாவதாரத்தில் கடையப்பட்ட திருப் பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தும், கால நேமி என்னும் அசுரனை வதைத்தும், தோல்வியால் மனமுடைந்த வாலியின் தம்பியான சுக்கிரீவனுக்கு உதவி செய்ய, இராமபிரானாக வந்து தோன்றி, ஒன்றோடொன்றாகப் பிணைந்து கிடந்த ஏழு மராமரங்களை ஒரு சேர அம்பினாலே துளைத்தும், திருவேங்கட மலையிலே எழுந்தருளி விளங்குகின்ற திருமாலினுடைய திருவடிகளையே நாடோறும் புகலிடமாக அடைந்து வழிபட்டுக் கடைத்தேறுங்கள்.

குறிப்புரை: உடைந்த—தளர்ச்சியுற்ற. 'வாலி தன்பின்' எனற்பாலது 'வாலி தந்தன்' என மருவி வந்துள்ளது. 'தன்பின்' என்பதே, 'தம்பி' என இந்நாளில் வழங்கி வருகின்றது. அடங்க—ஒருசேர, முழுவதும். 'மால' —மால் ÷ அ; அகரம் ஆறும் வேற்றுமை உருபு. திருமாலினுடைய என்பது பொருள். (81)

எத்திறத்தும் ஒத்து நின்று
உயர்ந்து உயர்ந்த பெற்றியோய்!
முத்திறத்து மூரி நீர்
அராவணைத் துயின்ற நின்
பத்துறுத்த சிந்தை யோடு
நின்று பாசம் விட்டவர்க்கு
எத்திறத்தும் இன்பம் இங்கும்
அங்கும் எங்கும் ஆகுமே.

பொழிப்புரை: எந்தப் பகுப்பில் வந்து தோன்றினாலும், அவ்வப் பகுப்பைச் சேர்ந்த உயிர்ப் பொருள் உயிரில் பொருள்களோடு ஒப்புமை விளங்கத்திகழ்ந்தாலும், பண்பின் சிறப்பினால் மேன்மேலும் உயர்ந்து ஒளிரும் சிறப்பை உடையவனே! ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று வகைப்பட்ட நீரையுடைய பழம்பெரும் திருப்பாற் கடலிலே ஆதி சேடனாகிய படுக்கையின் மீது பள்ளி கொண்டருளிய நின்பால், பக்தி மிகுந்த நெஞ்சத்துடன் கூடியிருந்து, பிற பொருள்களில் பற்றுக்களை விட்ட மெய்யடியவர்களுக்கு, எல்லா வகையான இன்பங்களும், இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் மற்றும் எவ்வுலகத்திலும் எளிதாகக் கிடைக்கும்.

குறிப்புரை: எத் திறத்தும்—எவ்லாவகையாலும். முத்திறம்—மூன்று வகை. மூரி—பழமை, பெருமை. பத்து உறுத்த சிந்தை—பக்தி மிகுந்த நெஞ்சம். (82)

மட்டு உலாவு தண்துழாய்
அலங்கலாய்! புலன் கழல்
விட்டு வீழ்வு இலாத போகம்
விண்ணில் நண்ணி ஏறினும்,
எட்டி னோடு இரண்டு
எனும் கயிற்றினால் மனன் தனைக்
கட்டி வீடுஇலாது வைத்த
காதல் இன்பம் ஆகுமே?

பொழிப்புரை: தேன் நிறைந்து விளங்குகின்ற குளிர்ந்த துளசி மாலையை அணிந்தவனே! நின்னுடைய சிறந்த திருவடிகளை இவ்வுலகத்திலேயே அநுபவிப்பதைத் தவிர்ந்து, பரம பதத்தில் சென்று அழிவு இல்லாத

இன்ப நுகர்ச்சியை அடையப் பெற்றாலும், பக்தி என்ற கயிற்றால் மனத்தைக் கட்டுப் படுத்தி, விடுதல் இல்லாதபடி அமைக்கப்பட்ட காதலினால் விளையக் கூடிய இன்பத்திற்கு ஈடாகுமோ?

குறிப்புரை: இறைவனை மனம் ஒருப்பட்டுப் பக்தி செய்தலினால் அடையும் இன்பத்திற்குப் பரம பத இன்பமும் ஈடாகாது என்பது கருத்து. புலன் கழல்—நுகர்ச்சிப் பொருளாதலில் சிறப்புடைய திருவடிகள். பக்தியை 'எட்டினோடு இரண்டு எனும் கயிறு' என்று குறிப்பிட்டிருப்பதின் நுட்பம் பெரிதும் சுவைத்து மகிழ்தற் குரியது. 'பத்துடை அடியவர்க்கு எளியவன்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்திருத்தலும் காணலாம். (83)

பின் பிறக்க வைத்தனன்கொல்?
அன்றி நின்று தன்கழற்கு
அன்பு உறைக்க வைத்தநாள்
அறிந்தனன் கொல் ஆழியான்?
தன், திறத்து ஓர் அன்புஇலா
அறிவு இலாத நாயினேன்
என் திறத்தில் என்கொல்?
எம்பிரான் குறிப்பில் வைத்ததே!

பொழிப்புரை: கையில் திருவாழியை உடையவனான எம்பெருமான், யான் இன்னும் சில பிறவிகள் பிறக்கும்படியாகத் திருவுள்ளம் கொண்டிருக்கின்றானோ? அல்லது தன் திருவடிகளிலே நிலைத்து நின்று எனக்கு அன்பு உறுதியாகும்படி செய்து, பரம பதத்திலே சென்று யான் இன்புறும் நாளைத் திருவுள்ளம் பற்றி யிருக்கின்றானோ? தன்னிடத்தில் அன்பு சிறிதும் இல்லாதவனும் அறிவு இல்லாதவனும் நாய் போன்றவனும் ஆகிய என்னைக் குறித்து, எம்பெருமான் தன் திருவுள்ளக் குறிப்பில் வைத்திருப்பது எதுவோ? எனக்குத் தெரிகின்றிலது!

குறிப்புரை: தம்மைப் பற்றி இறைவனின் திருவுள்ளக் கருத்து எவ்வாறு உளதோ? என்று நினைந்து ஆழ்வார் இப்பாடலில் அலமருகின்றார். ''பின் பிறக்க வைத்தனன் கொல்'' என்பதனையே, ''பின்பு இறக்க வைத்தனன் கொல்'' எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இறைவனை மறந்திருத்தல் இறப்புக்குச் சமானமாகும். ஆதலின் அம் மறப்பினையே ஈண்டு இறப்பு என ஆழ்வார் குறித்தருளினார் எனலாம். தன்பால் எனக்கு ஞானம் பிறந்த பின்பும், தன்னை யான்மறக்கும் படியாக இறைவன் செய்தருள்கின்றானோ? என ஆழ்வார் மனம் வருந்துகின்றார். (84)

நச்சு அராவணைக் கிடந்த
நாத! பாத போதினில்
வைத்த சிந்தை வாங்குவித்து
நீங்கு விக்க நீஇனம்
மெய்த்தன் வல்லை ஆதலால்
அறிந்தனன் நின் மாயமே
உய்த்து நின் மயக்கினில்
மயக்கல் என்னை மாயனே.

பொழிப்புரை: கொடியவர்களின் மீது நஞ்சைக் கக்குகின்ற ஆதி சேடனாகிய படுக்கையில் பள்ளி கொள்கின்ற பெருந் தலைவனே! நின்னுடைய திருவடித் தாமரைகளில் வைக்கப்பட்டுள்ள என்னுடைய மனத்தை அவற்றினின்றும் வேறு செய்திகளில் போகும்படி செய்ய, எல்லா ஆற்றலுமிக்க நீ, இன்னமும் உண்மையாகவே வல்லவனாக விளங்குகின்றாய் என்பதை நானறிந்திருக்கின்றேன். வியக்கத் தக்க பண்புகள் உடையவனே! எளியேனை நின்னுடைய மாயைச் செயலையேசெலுத்தி உலகியல் மயக்கச் செய்திகளில் விடுத்து மயக்குதல் வேண்டா.

குறிப்புரை: 'உலகியல் வாழ்க்கையாகிய மயக்கத்தில் தள்ளித் தம்மை மயங்கிவருந்தும்படிசெய்தல்வேண்டா' என்று இறைவனை வேண்டிக் கொள்ளுகின்றார் ஆழ்வார். மயக்கல்—மயக்காதே. (85)

சாடு சாடு பாதனே!
நலம் கலந்த பொய்கைவாய்
ஆடு அரவின் பிடர்
நடம் பயின்ற நாதனே!
கோடு நீடு கைய! செய்ய
பாதம் நாளும் உள்ளினல்
வீடன் ஆக மெய்செயாத
வண்ணம் என்கொல்? கண்ணனே.

பொழிப்புரை: சகடாசுரனை உதைத்து ஒழித்த பாதங்களை உடையவனே! நஞ்சு கலந்த பொய்கையின் கண் படமெடுத்து ஆடிக் கொண்டிருந்த காளியன் என்னும் நாகத்தினுடைய வலிமை மிக்க கழுத்தின் மீது நடனம் செய்த தலைவனே! பாஞ்சசன்யம் என்னும் சங்கு விளங்குகின்ற திருக்கையை யுடையவனே! கண்ண பிரானே! நின் சிவந்த திருவடிகளை நாடோறும் தியானித்துக் கொண்டிருந்தாலும், என்னை உண்மையிலேயே விடுதலை பெற்றவனாகச் செய்யாத தன்மை ஏனோ?

குறிப்புரை: 'சாடு சாடு பாதன்' என்பதில் முன்னையது பெயர்ச் சொல். பின்னையது வினைச் சொல். அவை முறையே, சகடு (சக்கரம், வண்டி) எனவும்; சாடு—அழிக்கின்ற, அழித்த எனவும் பொருள்படும். 'சலம் கலந்த பொய்கை' என்பது இரட்டுற மொழிதல்; இதன்கண் 'சலம்' என்பது நீரையும், நஞ்சையும் குறித்து நின்றது. 'பிடர்' என்பது இங்கே தலையைக்குறித்தது. கோடு—சங்கு. உள்ளினல்—நினைத்தால், தியானித்தால். 'உள்ளினும்' என்பது உம்மை தொக்கு 'உள்ளினல்'என வந்தது. வீடன்—வீட்டை அடைந்தவன், விடுதலை பெற்றவன் (முக்தன்). (86)

நெற்றி பெற்ற கண்ணன், விண்ணின்
நாத னோடு, போதின்மேல்
நற்ற வத்து நாத னோடு
மற்றும் உள்ள வானவர்,
கற்ற பெற்றியால் வணங்கு பாத!
நாத! வேத! நின்
பற்று அலால்ஓர் பற்று மற்று
அது உற்றிலேன் உரைக்கிலே.

பொழிப்புரை: நெற்றியிலே கண்ணைப் பெற்ற உருத்திரனும், வானுலகத்திற்குத் தலைவனானதேவேந்திரனும், தாமரை மலரின் மேல் நல்ல தவத்தைப் புரியும் தலைவனாகிய பிரமனும், மற்றுமுள்ள தேவர்களும் தாங்கள் தாங்கள் அறிந்த முறைமைக்கு ஏற்ப வந்து வணங்குகின்ற திருவடிகளையுடையவனே! தலைவனே! வேதப் பொருளாக விளங்குபவனே! உண்மையைச் சொல்லின் நின்னுடைய துணையைத் தவிர வேறொரு துணையையும்,யான் நெஞ்சாலும் நினைப்பதில்லை.

குறிப்புரை: இறைவனைத் தவிர வேறொரு பற்றும் புகலிடமும் இல்லை என்பது கருத்து. ''களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. (87)

வெள்ளை வேலை வெற்பு நாட்டி
வெள் எயிற்று அரா அளாய்
அள்ளலாக் கடைந்த அன்று
அருவரைக்கு ஓர் ஆமையாய்
உள்ள நோய்கள் தீர் மருந்து
வானவர்க்கு அளித்த எம்
வள்ள லாரை அன்றி மற்றுஓர்
தெய்வம் நான் மதிப்பனே.

பொழிப்புரை: வெண்ணிறமுடைய திருப் பாற்கடலிலே மந்தர மலையை நிலைபெறுவித்து, வெண்மையான பற்களை யுடைய வாசுகி என்னும் பாம்பினைக் கடை கயிறாகச் சுற்றி, அலைகள் எழும்படி கடைந்தருளிய காலத்தில், தாங்க முடியாத அம்மலையை ஒப்பற்ற ஒரு ஆமையாகித் தாங்கி, தேவர்களுக்கு ஏற்பட்டிருந்த நோய்களைத் தீர்க்கவல்ல அமிர்தமாகிய மருந்தை உண்டாக்கிக் கொடுத்தருளிய வள்ளலாகிய எங்கள் திருமாலை அல்லது வேறு எந்த தெய்வத்தையும் நான் ஒரு பொருளாக மதிக்க மாட்டேன்.

குறிப்புரை: 'உள்ள நோய்கள்' எனும் தொடர் பெயரெச்சமாகவும், ஏழாம் வேற்றுமைத் தொகையாகவும்

பொருள்கொள்ளப்படும். 'இருக்கின்ற எனப் பொருள் கொள்ளின் பெயரெச்சமாம்; 'உள்ளத்தின் கண் உள்ள' எனப் பொருள் கொள்ளின் ஏழாம் வேற்றுமைத் தொகையாம். 'மதிப்பனே' என்பதில் ஏகாரம் வினு; மதிக்க மாட்டேன் என்பது கருத்து. (88)

ரதர் என்ருர். மகாரதர் என்பது மாரதர் என வந்தது. போரில் இறக்கும்படி செய்ததை நயமாக, 'வான் கொடுத்து' என்ருர்; இது மங்கல வழக்கு எனப்படும். ஐவர்—பஞ்ச பாண்டவர்கள். 'வென்றிசேர் மாரதர்' என்றது இகழ்ச்சிக் குறிப்பு.(88)

பார் மிகுத்த பாரம் முன்
ஒழிச்சுவான் அருச்சுனன்
தேர் மிகுத்து மாயம் ஆக்கி
நின்று கொன்று வென்றிசேர்
மாரதர்க்கு வான் கொடுத்து
வையம் ஐவர் பாலதாம்
நீர் மிகுத்த நின் அலால்ஓர்
தெய்வம் நான் மதிப்பனே.

பொழிப்புரை : முற் காலத்தில் உலகத்தில் மிகுதிப்பட்ட சுமையாகிய தீயவர்களின் கூட்டத்தை அழிப்பதற்காக, அருச்சுனனுடைய தேரை நன்ருகச் செலுத்தி, வியத்தகு செயல்கள் பலவற்றைச் செய்து பகைவர்களைக் கொல்வித்து, வெற்றி பெறலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்த மாரதர்கள் ஆன துரியோதனன் முதலியவர்களுக்கு வீர சுவர்க்கத்தைக் கொடுத்து, உலகத்தைப் பஞ்ச பாண்டவர்களுடையதாகச் செய்தருளிய புகழ் மிகுந்த உன்னைத் தவிர மற்ருெரு தெய்வத்தை நான் சிறிதும் மதிக்க மாட்டேன்.

குறிப்புரை: தீயவர்களின் கூட்டத்தைப் 'பார் மிகுந்த பாரம்' என்ருர். 'ஒழிச்சுவான்' என்பது ஒழிப்பதற்காக என்னும் பொருளில் வந்த வானீற்று வினையெச்சம். அதிரதர் மகாரதர் சமரதர் அர்த்தரதர் எனத் தேர் வீரர்கள் நால் வகைப்படுவர். துரியோதனன் முதலிய கவுரவர்களை ஈண்டு மகாரதர் என்ருர்.

குலங்கள் ஆய ஈர் இரண்டில்
ஒன்றினும் பிறந்திலேன்;
நலங்கள் ஆய நற்கலைகள்
நாலிலும் நவின்றிலேன்;
புலன்கள் ஐந்தும் வென்றிலேன்;
பொறியிலேன்; புனித நின்
இலங்கு பாதம் அன்றி மற்றுஓர்
பற்றிலேன் எம் ஈசனே.

பொழிப்புரை : தூய்மை வடிவினனே! எங்கள் பெருமானே! அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு குலங்களுள் ஒரு குலத்திலும் நான் பிறக்கப் பெற்றிலேன். நன்மைகளைத் தருகின்ற சிறந்த கலைகளாகிய நான்கு வேதங்களிலும் மிக்க பயிற்சி பெற்றிலேன். ஐம்பொறிகளையும் அடக்கி வெற்றி கொண்டிலேன். இங்ஙனம் அறிவில்லாதவனுகிய நான் உன்னுடைய ஒளிமிக்க திருவடிகளைத் தவிர வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லாதவன் ஆவேன்.

குறிப்புரை : வேறு பற்றுக்கோடு எதுவும் இல்லாத எனக்கு நீயே பற்றுக்கோடும் துணையுமாக இருந்து அருள் புரிதல் வேண்டும் என்பது கருத்து. முன் பாட்டில் தான் வேறு கதியற்றவர் என்ருர். இப்பாட்டில் தமக்கு வேறு உபாயம் ஒன்றும் இல்லை என்கின்ருர். (90)

—ஆசிரியர்

தொடரும்.

சைவ வைணவ சமரசம்

(கவியோகி மகரிஷி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், சென்னை - 20.)

1. உள்ளாராய்ச்சி :

மனிதன் சிந்திக்கின்றான்: நான் யார்? என் உள்ளத்தில் ஏதோ துடிக்கிறதே;அந்தத்துடிப்பு நின்றால் நான் வாழ முடியாதே; என் மூக்கில் ஏதோ உயிர்க்கிறதே; அந்த உயிர்ப்பு என் உயிரியில் புகுந்து வெளி வருகிறதே; இந்தப் போக்குவரவை யார் நடத்துவது? நான் விழித்திருக்கும்போது கேட்கிறேன், காண்கிறேன்; உணர்கிறேன். உறங்கும்போது காணவில்லை, கேட்கவில்லை, உணரவில்லை; ஆனால் உயிர் உயிர்க்கிறது; உள்ளம் துடிக்கிறது. எதனால்? யார் என்னுள் உயிர்ப்பது? இவ்வாறே மாணிக்கவாசகர் ஆத்ம விசாரணை செய்தார்; சங்கரர் செய்தார்; வேத ரிஷிகளும் ஆகமச் சித்தரும் உள்ளாராய்ச்சி செய்தனர்.

2. உள்ள பொருள் :

வேத ரிஷிகள் சொல்லுகிறார்கள், ''உள்ளத்தில் உள்ளது உண்மைப் பொருள்; அதுவே பிரமன், அதுவே சிவன்; அதுவே விஷ்ணு; உலகில் உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் அதுவே''.

அப்பர் பெருமான் அழகாக விளக்குகின்றார்:

என்னில்யாரும் எனக்கினி யாரில்லை
    என்னினும் இனியான்ஒருவன்உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப்
    புறம்போந்து, புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர்ஈசனே.

என்னுள்ளே உயிர்ப்பது எது? அந்தஉயிர்ப்பு உள்ளே போகும்போது உயிர்க் காற்று நிரம்பியுள்ளது; அஃது என் உயிரியிற் சுழன்று வெளியே போகும்போதும் வரும்போதும், அதை என்னுள் இருந்து நடத்துவது எது? யார்? என்றொரு கேள்வியைப் போடுகிறார் அப்பர். அதற்கு அவரே பதில் சொல்லுகிறார்.

என்னுளே நிற்கும்
    இன்னம்ப ரீசனே.

3. கடவுள் என்றால் ?

இந்த ஈசனே உயிரை இயக்குகிறான். பொறி புலன் மனமிறந்து நான் துயிலும்போதும் என்னுள் உயிர்த் துடிப்பாயிருக்கிறான்.

துஞ்சும்போதும்
    சுடர்விடும் சோதியை
நெஞ்சுள் நின்று
    நினைப்பிக்கும் நீதியை.

என்கிறார் அப்பர். உள்ளே மனச் சாட்சியாயிருந்து ''இது நீதி, இது அநீதி, இது அறம், இது மறம், இதைச் செய், இதைச் செய்யாதே' என்றுணர்த்தும் அறிவே கடவுள். மனங் கடந்து உள்ளே அறிவது. அந்த அறிவுக்குச் சாதி மத பேதமில்லை. அதையே சைவர் சிவன் என்பர், வைணவர் விஷ்ணு என்பர், வேதாந்திகள் பிரம்மம் என்பர். பொருள் ஒன்றே. அதையே அவரவர் மனப்பான்மை வெவ்வேறாகக் கருதுகிறது. நம்மாழ்வார் ஆழ்ந்த கருத்துடன் சொல்லுகின்றார்:

யானும் தானாய் ஒழிந்தானை
யாதும் யவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும்
அமுதுமாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை யுணர்ந்தேனே!

4. நானும் தானும் :

இங்கே நான் என்ற ஒரு தத்துவம், தான் என்றதத்துவம்—ஆகிய இரண்டுள்ளன. நான் என்பது மனஞ் சூழ்ந்த ஆத்மா. அது ஆணவம் மாயை கன்மம் ஆகிய மாசு படிந்தது. அது மாசு நீங்கிச் சுத்தான்மாவாகி அன்பால் உருகி, அருள் மெருகேறியதும் இன்பமேயான ''தான்'' என்றெழும் இறைவனுடன் கலக்கிறது. அந்தக் கலப்பு எத்தகையது?

5. இறையியல் :

தேனும் பாலும் கன்னலும் சேர்ந்ததுபோல் இனிக்கும் இன்பம். அந்த இன்பம் உள்ளே ஊறி, உயிராக ஓடி ஊனுடல் வாழ்விலும் பாய்வது. அதுவே பிரமானந்தம் அல்லது இறையின்பம் ஆகும். அந்த இன்ப நுகர்ச்சியில் பிரமா, சிவன், விஷ்ணு என்ற பேதமில்லாமல் தனி முதற் கடவுள் உணர்வாகும். இதுதான் கடவுள் விளக்கம். இந்தக் கடவுளின்பத்தை நுகர்ந்த அப்பர், ''நாமார்க்கும் குடியல்லோம், இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று மார்தட்டிப் பேசினர். இந்த இன்பத்தை நுகர்ந்த நம்மாழ்வார்:

தானும் யானும் எல்லாம்
 தன்னுளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் கன்னலும்
 அமுது மொத்தே

என்று பரவசப்படுகிறர்.

6. தொழில் விளக்கம் :

சிவன், விஷ்ணு, பிரம்மா என்பன எல்லாம் ஒரே பரம்பொருளின் தொழில் விளக்கப் பொருள்களே.

ஆக்கும் போதயனுவான்
காக்கும் போதரியாவான்
நீக்கும் போதரனுவான்
யார்க்கும் ஓர்இறை தானே!

என்ற திருவாக்கை உணர்வோம்.

தண்ணீர் ஒன்றே; அதையே கடல், ஆறு, ஏரி, ஊருணி, கிணறு, வாய்க்கால், ஊற்று, பனிக்கட்டி, ஆவி—என்கிறோம். அதுபோல ஒரே கடவுளையே ஆயிரம் பேர் சொல்லி அழைக்கிறோம்.

7. கொடிநிலை :

சங்க காலம் முதல் அரனும் மாலும், அன்பர் அன்பில் நிலவும் கடவுட் பெயர்களாம். தொல் காப்பியர்,

கொடிநிலை கந்தழி
 வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின்
 முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு
 கண்ணிய வருமே

என்கின்றர். கந்தழி என்றல் ஆணவத்தளையை அறுக்கும் அரன்; கொடிநிலை என்றல் இடாபிங்கலா, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளும் கூடும் நிலையில் உள்ள சிவம் என்னலாம். கொடிநிலை என்றல் கதிரவன் என்பர். வள்ளி, சந்திரன் என்பர். சூரிய சந்திர நாடிகளைக் குறிப்பன இச்சொற்கள். வள்ளி என்பது சக்தி நிலையம் என்பது பொருள். கடவுளை வாழ்த்தும்போது கடவுள் விளக்கமான இந்நிலைகளைக் கருதுதல் வேண்டும். கடவுள் யோகக் கொடியின் உச்சநிலையானஸஹஸிராரத்தில் உள்ளான். வள்ளி என்னும் சந்திர நாடியில் சக்தி மயமாக உள்ளான். அவன் ஆன்மாக்களின் தளைகளை அழிக்கும் பசுபதியாக உள்ளான்.

புருஷ சூக்தம் இறைவனை மேகத்தில் ஆடும் மின்னற் கொடிபோல்,இதயத்தில் ஆடும் இறைவன் என்கிறது. இந்த ஒரே பொருளையே அவரவர் உணர்வுக்கும் அறிவுக்கும் தக்கபடி பல பெயர் வடிவங்களில் வணங்குகின்றனர்.

உள்ளுணர்ந்த அறிஞர் ஒன்றெனக் காண்பர்.
 ''ஒன்றெனவும் தோற்றம்
ஒடுக்கம்அதி லேயெனவுங்
 கண்டவனே காட்சிக்கிறை.''

8. ஒருமைப் பொருள் :

இந்த ஒருமையைத் திருமந்திரம் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர்,'மும்மூர்த்திகளில் ஒருமை' காண்கிறர்.

ஆதிப் பிரானும்
 அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்
 தலர்மிசை யாயனும்
சோதிக்கில் மூன்றும்
 தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித்துலகம்
 பிணங்குகின்றரே.

பேத புத்தியை விட்டு நோக்கினல் கடவுள் ஒன்றே; அதுவே உலகைப் படைக்கும்போது அயன், காக்கும்போது அரி, நீக்கும்போது அரன் என்று பெயர் பெறும்.

ஒரே மின்சாரத்தை ஒளிரும்போது விளக்கு என்கிறோம்; வீசும்போது காற்று என்கிறோம்; தண்ணிய நிலையில் குளிர்ச்சி என்கிறோம்; காட்சி நிலையில் திரைப் படம் இயக்கி என்கி

றேம். இதே மாதிரியே சிவனும் விஷ்ணுவும் ஒரே கடவுளின் இரண்டு விளக்கங்களாம். யஜுர்வேத சந்தியாவந்தனம் ''சிவன் விஷ்ணு மயன், விஷ்ணு சிவமயன்; இருவரும் ஒரே மயம், சிவவிஷ்ணு பரமாத்மனுக்கு வணக்கம்'' என்கிறது.

சிவாய விஷ்ணு ரூபாய
சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு:
விஷ்ணுஸ்ய ஹ்ருதயம் சிவ:
யதாசிவமயம் விஷ்ணு:
ஏவம் விஷ்ணு மஹேஸ்வர:

விஷ்ணு பக்தரான ஹரதத்தர் இலிங்கத்தில் திருமாலைக் கண்டார். அதே மாதிரி ஸ்ரீதர ஐயாவாள் இலிங்கத்தில் நாராயணனைக் கண்டார்.

9. இணைப்பு :

இந்த இரண்டு திருவுருவங்களின் முதன்மையைக் கொண்டே முன்னோர் ஹரிஹரன், சங்கர நாராயணன், சிவராமன், சிவநாராயணன் என்று இரண்டு மூர்த்திகளையும் சேர்த்து ஒரே மூர்த்தியாக வணங்கினர். சிவனும் சக்தியும் ஒன்றே என்ற கருத்துடன் அர்த்தநாரீசர், மாதொருபங்கன், உமாபதிசிவம்—என்ற நல் இணைப்பை உருவாக்கினர். எத்தனையோ சிவ பக்தர் தமது குழந்தைகளைக் கண்ணன் ராமன் நாராயணன் என்றழைப்பர். விஷ்ணு பக்தரும் தமது குழந்தைகளைச் சிவம், சங்கரன் என்று அழைக்கும் காலம் வரும்.

10. சிவ-விஷ்ணு பக்தர் :

இப்போது காஞ்சி மகா சந்நிதானத்தின்மகத்தான சேவையால், திருப்பாவை திருவெம்பாவை மகாநாடுகளில் சிவ-விஷ்ணு பக்தர்கள் கலந்து மகிழ்கின்றனர். சமுதாய வாழ்விலும் புரட்டாசி சனிக்கிழமையும் ஏகாதசியும் இருவராலும் கொண்டாடப் படுகிறது. அன்று சிவபக்தரும் திருநாமம் போட்டுக் கொள்வர்.

சிவானந்த லஹரி பாடிய சங்கரர், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கே முதலில் உரைசெய்தார். விஷ்ணு ஸ்தோத்திரங்களை ஏராளமாகப் பாடினார். பஜ கோவிந்தமும் அச்சுதாஷ்டகமும் போதுமே. தாயார் இறுதி எய்தும்போது சங்கரர் சிவஸ்தோத்திரம் பாடி உடனே விஷ்ணுவையும் துதிக்கிறார். பல கோயில்களில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சந்நிதிகள்உள்ளன. சிதம்பரம் நடராஜா கோவிலில், கோவிந்த ராஜப் பெருமாளும் எழுந்தருளியுள்ளார்.

இறைவனை அரன், அரி, அயன், குரு, அருள், சக்தி, ஜோதி, கருணை என்று எவ்வகையிலும் வழிபடலாம்.

11. வாதம் வேண்டாம் :

காலம் ஓடுகிறது; காலன் பின்னே வந்து கொண்டிருக்கிறன்; நோய் நொடி விசனங்கள் மனிதரைச் சோதிக்கின்றன. அற்ப ஆயுளை இதுவா அதுவா என்று வாதிட்டலையாதீர். சுந்தரர் சொல்லுகிறுர்:

நாளார் வந்தணுகி
நலியாமுனம் நின்றனக்கே
ஆளாவந்தடைந்தேன்
அடியேனையும் ஏன்று கொள்நீ

வாளா நாளருளும்
மழபாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னையல்லால்
இனியாரை நினைக்கேனே.

12. அவனருளே :

இந்த அன்புறுதியுடன் எந்த வடிவில் எப்பெயரில் இறைவனை வணங்கினலும் அவன் அருள் எய்தும். அவன் அருளே கண்ணுகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணுது. நம்மாழ்வார் பரந்த உள்ளத்துடன் பாடுகிறுர் கேளுங்கள்:

அவரவர் தமதமது
அறிவறி வகைவகை
அவரவர் இறையவர்
எனஅடி யடைவர்கள்
அவரவர் இறையவர்
குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி
அடைய நின்றனரே.

'யத்பாவம் தத்பவதி'. நினைப்பின் உருவே நிசமாகும். எண்ணிய எண்ணியாங்கு எய்துப என்ற உண்மையை உணருவோம்.

''பேணுங்காற் பேணும் உருவாகும்'' என்கிறுர் நம்மாழ்வார்.

13. ஆறு சமயம் :

இறைவனுக்கு ஆறு பண்புகள் உண்டு;அவையே ஆறு சமயங்களாகக் கருதப்படும்:

சமயம்	கடவுள்	பண்பு
சைவம்	சிவம்	மங்கலம்
வைணவம்	விஷ்ணு	நிறைவு
கௌமாரம்	குமரன்	இளமை
காணபத்யம்	கணபதி	இடர்களைதல்
சாக்தம்	சக்தி	ஆற்றல்
ஸௌர்யம்	சூரியன்	ஒளி

14. முருகன் :

நமது இந்து சமயத்தில் முருகனுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. முருகன் என்றாலே உள்ளம் சிலிர்க்கிறது. முருகன் சமரஸக் கடவுள். முருகன் சிவக்கனல் மைந்தன். திருமால் மருகன். ஆறு சமயங்களும், ஆறு முகங்களாக விளங்குகின்றன. குகன் என்பது சொரூப லட்சணம்; ஆறுமுகன் என்பது தடஸ்தலட்சணம்.

அருவமும் உருவு மாகி
　　அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
　　பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
　　கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
　　உதித்தனன் உலக முய்ய!

என்ற பாட்டின் பொருளை நினையுங்கள்.

15. தஹர நிலையம் :

இதயமே தஹராகாச நிலையம். அது மிக நுட்பமானது. அதில் ஓர்குகையுள்ளது. அதில் ஒளி வடிவாக (ஆறுமுக ஜோதியாக) விளங்கும் பரம்பொருளே குகன், முருகன், கந்தன்.

சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் தொடர்பூட்டுவது முருகன். முருக பக்தரான அருணகிரி நாதர் ''பெருமாளே'' என்று ஒவ்வொரு பாட்டையும் முடிக்கிறார்.

உருவெனலாம் உளமெனலாம்
　　உலகெனலாம் அவனை
அருவெனலாம் அரனெனலாம்
　　அரியெனலாம் அன்பர்
திருவெனலாம் சிவமெனலாம்
　　திகழ்சக்தி யெனலாம்
குருவெனலாம் ஒருவனவன்
　　கோலநிலை பலவாம்!

16. எல்லாம் அவன்:

மனத்தால் பார்த்தால் பல; உள்ளத்தால் உணர்ந்தால் ஒன்று. உள்ளத்தில் உள்ளபடி உள்ள ஒருவன், தனது அருட் சக்தியாலே பலவாக விளையாடுகிறான். அவனை யாரே அளந்து கூற முடியும்?

உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி உணரப்படுவாருடன்ஒட்டி வாழ்வது பரம்பொருள். அவனே ஓசை ஒலியெலாம் ஆனான். உலகுக்கு ஒருவனாய் நின்றான். அல்லி மலர் மணமானான். அன்பர் உளமானான்.

17. இலிங்கம்:

அவனே அருவுருவான லிங்கம் ஆனான். லிம்—லயம்; கம்—தோற்றம். தோற்றமும் லயமும் ஆற்றலும் அருளும் விளங்கும் அற்புதமான லிங்க வடிவம் கடவுளுக்குத் தந்த நமது முனிவர் அறிவுதான் என்னே! இலிங்கத்தின் மூலம் பிரமன், நடு விஷ்ணு, முடி சிவம் என்பது ஆகம வுண்மை.

18. விளக்கொளி:

இவ்வாறு எல்லா மூர்த்திகளையும் ஒருமைப் படுத்தி, உள்ளக் கோயிலில் வைத்து வணங்கச் செய்தனர் நமது முனிவர். அவர்கள் யோக சித்தியால் அமைந்ததை நாமும் யோகத்தால் உள்விழி திறந்தே காணமுடியும். திருமூலர் வாக்குடன் இக்கட்டுரையை முடிப்போம்.

விளக்கினை ஏற்றி
　　வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே
　　வேதனை மாறும்
விளக்கை விளக்கும்
　　விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும்
　　விளக்கவர் தாமே.

பரமகாரணன் பரமசிவனே

(பாலகவி. வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார், தத்புருஷ தேசிகர், தேவகோட்டை)

இந்நிலவுலகத்திற் காணப் பெறுகின்ற எல்லாப் பொருள்களும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத் தொழிற்பாடுகள் அனைத்தும் தோற்றம், நிலை, ஒடுக்கம் ஆகிய மூன்றனுள் அடங்குவனவாகும். அங்ஙனம் தொழிற்படுகின்ற காட்சிப் பொருள்கள் முழுவதும் தாமே தொழிற்பட முடியாத சடப் பொருள்களாகவே உள்ளனவாதலின் அவற்றைத் தொழிற்படுத்துவதற்குச்சித்துப்பொருள்களின் உதவி வேண்டப் பெறுகிறது. சித்துப் பொருள்கள் இரண்டு வகையின. முதல் வகையைச் சேர்ந்தவை பாசச் சேர்க்கையால் சுதந்தரத்தை யிழந்து வாழும் உயிர்த் தொகைகள். இரண்டாவது வகையைச் சேர்ந்தது, இயல்பாகவே பாச நீக்கம் உடைமையால் என்றும் சுதந்திரமாக விளங்கும் சிவபரம்பொருள்.

தொழில் நிகழ்ச்சியாகிய காரியத்திற்கு மூன்றுகாரணங்கள்வேண்டப்பெறும்.அவற்றை முதல் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்று கூறுவர். இவற்றுள் முதற் காரணம் தொழிற்பாட்டுக்கு மூலப் பொருளாயிருக்கும். துணைக்காரணம் கருவிகளாயிருந்து உதவும். நிமித்த காரணம் வினை முதலாகிய தொழிலாளியாக அமையும். இவற்றை விளக்கித் தெளிவு படுத்த நமது நூல்கள் கூறும் எடுத்துக் காட்டுக்கள் முறையே மண், தண்ட சக்கரங்கள், குயவன் என்பவனவாம். குடமாகிய காரியப் பொருள், மண்ணாகிய மூலப் பொருளைக் கொண்டு, தண்ட சக்கரங்களாகிய கருவிகளின் உதவியுடன், குயவனாகிய தொழிலாளியால் வனையப் பெறுகிறதென்பதை நாம் அறிவோம்.

இங்கே முதற் காரணமாகிய மண்ணும் துணைக் காரணமாகிய தண்ட சக்கரங்களும் அவ்வத் தகுதிகளில் ஒன்றொன்றாகவே நின்று விடுவன. நிமித்த காரணம் மட்டும் தொழிலாளியாகிய குயவன் அளவில் ஒன்றேயாக நின்று விடாமல், அதனைச் செய்வித்துச் செய்த பிறகு விலை கொடுத்துப் பெறுபவர்கள் வரை மற்றுஞ் சிலரிடமும் சென்று நிற்பதாகும். இதனால் இந் நிமித்த காரணம் அவாந்தர காரணம், பரமகாரணம் என வகுக்கப் பெற்று, இடைப்பட்டவையும் முடிந்த முடிபானதுமென இரண்டாக உரைக்கப் பெறுகின்றது.

இவ்விரண்டினுள் முடிந்த முடிபான பரம காரணமே எல்லாவற்றுக்கும் மூலமாயிருந்து, தனக்குக் கீழே பல அவாந்தர காரணங்களைக் கொண்டதாய் விளங்கும். அந்தப் பரம காரணப் பொருளாய் நிற்பது சிவபரம் பொருளே என்பதைத் திருமூலதேவ நாயனார் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்தில் பதினோராவது திருப்பாடலில் அறிவுறுத்தியருளுகின்றார். அத்திருப்பாட்டு,

அயலும் புடையுமெம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலின் முடிவுமற் றாங்கே
பெயலும் மழைமுகில் பேர்நந்தி தானே.

என்பதாகும்.

உலகத்திலுள்ள சமயங்களனைத்தையும் தத்துவ அடிப்படையில் வைத்து நோக்குவோமானால், அவைகளெல்லாம் இருபத்து நான்கு என்னும் எண்ணிக்கைக்கு உட்பட்டு, நான்கு வகைக்குள் அடங்கி விடுவதைக் காணலாம். அவ்வகைகளை நமது சமய நூல்கள் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்று கூறும்.

இவற்றுட் புறப்புறச் சமயங்கள் ஆறும் வேதத்தை உடன்படா. புறச் சமயங்கள் ஆறும் வேதத்தை ஒருவாறு உடன்பட்டு அதன் முடிபாகிய ஆகமத்தை உடன்படா. அகப்புறச் சமயங்கள் வேதத்தை உடன்பட்டுஆகமத்திலுள்ள ஞானபாதம் முதலியவற்றின் முடிபுகளை உடன்படா. அகச் சமயங்கள் ஆறும் வேதாகமங்களை உடன்பட்டுச் சுத்தாத்துவித சித்தாந்த முத்தியை உடன்படா.

ஈந்நால் வகைச் சமயங்களுக்கும் மேம்பட்டு, இராசாங்கத்தமர்ந்த சித்தாந்த சைவம், வேதாகமங்களின் முடிந்த முடிபைத் தன்னதாகக் கொண்டு எந்த நாளிலும் யாராலும் அசைக்க முடியாத அடிப்படையை உடையதாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

வேதத்தை உடன்படாத புறப்புறச் சமயவாதிகளில் ''கடவுள் ஒருவர் இல்லை'' என்று சொல்லும் உலோகாயதரும் அடங்குவர். அவர்களில் கடவுள் உண்டு என்று சொல்லுவோர்

அனைவரும் தத்துவ அடிப்படையில் உண்மையை உணரும் அறிவு இல்லாதவர். ஆகையால் கடவுள் தன்மை யில்லாதவரையே தத்தம் கடவுளர் என்று சொல்லி மயங்குவர். வேதத்தை உடன்படும் புறச் சமயவாதிகள் பரம் பொருளாகிய கடவுள் இயங்கியலும் நிலையியலுமாகிய எல்லாவற்றிலும் நிறைந்திருப்பது பற்றி, அவ்வெல்லாவற்றையும் கடவுள் வடிவங்கள் என்று சொல்லும் வேதத்தின் இடைப்பட்ட முடிபுகளையே முடிந்த முடிபுகளாகக்கொண்டு உண்மையான முடிபெல்லையை எட்டாது நிற்பர்.

அகப்புறச் சமயவாதிகள் சிவாகமங்களிற் கூறப்பெறும் சிவபரம் பொருளின் தடத்த வடிவங்களே முடிந்த முடிவானவை எனக்கொண்டு, அவ்வடிவங்களில் ஒவ்வொன்றை மட்டும் தமக்குரியனவாக வைத்து வழிபாடு செய்வர். அகச் சமயவாதிகள் சிவ பரம் பொருளின் சொரூப தடத்த நிலைகளை ஏற்றுக் கொள்வார்களாயினும், முத்தியில் சிவத்துடன் உயிர் ஒன்றும் நிலையைச் சிவாகம சித்தாந்தத்துக்கு முரண்பட்டுக் கூறுவர். இவ்வெல்லாச் சமய வாதிகளும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டு தத்தம் கடவுளர்களைக் குறிப்பார்களாயினும், அவையனைத்தும் முதற் கடவுளாகிய சிவபெருமானைக் குறிப்பதாகவே அமையும். இதனை இத் திருப்பாடலின் முதலிரண்டு வரிகளில் வைத்து ஆசிரியர் உணர்த்தியருளினார்.

''அயல்'' என்பது அடுத்த இரண்டு பக்கங்களிலும் இருப்பவைகளையும் ''புடை'' என்பது அவ்வயலை அடுத்த இரண்டு பக்கங்களிலும் இருப்பவைகளையும் குறிப்பனவாகும். இங்கே, அகம், அகப்புறமாகிய இருவகைச் சமயங்களையும் அயல் என்றும், புறம் புறப்புறம் ஆகிய இருவகைச் சமயங்களையும் புடை என்றும் ஆசிரியர் குறித்தார்.

சிவபெருமானுக்குள்ள எண் குணங்களுள் சர்வ வியாபகம் என்னும் எங்கு நிறைந்திருத்தலும் ஒன்று. இதனை ''அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாக அருளொடு நிறைந்தது'' என்று இத் திருமூல தேவர் பரம்பரையில் வந்த தாயுமான சுவாமிகள் தமது முதல் திருப்பாடலின் தொடக்கத்திலேயே அறிவுறுத்தி யருளுகின்றார். ஒரு நாமமும் ஓர் உருவமும் இல்லாத பேரொளிப் பிழம்பாகிய சிவபரம்பொருள், பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்து இருப்பதை உணருகின்ற மெய்ஞ்ஞானிகள் எல்லாவற்றையும் அச்சிவ பரம்பொருளாகவே காணுவார்கள். அதனாலேயே அயற் சமயங்களிலும் புடைச் சமயங்களிலும் இயலும் பெருந்தெய்வங்களை நோக்கிக் காணும்பொழுது எம் ஆதித் தெய்வமாகிய சிவத்தையன்றி வேறு ஒன்றும் காணப் பெறவில்லை யென்று ஆசிரியர் அருளிச் செய்தார்.

உயிர்த் தொகுதிகளெல்லாம் பயனை எதிர் பார்த்துப் பலவகையான முயற்சிகளை மேற் கொள்ளுகின்றன. ஆனால் முயற்சிக்கு ஒரு சிறிது கூடப் பயன் கிடைக்காது போவதும், பெரு முயற்சிக்குச் சிறு பயனே கிட்டுவதும், சிறு முயற்சிக்குப் பெரும் பயன் விளைவதும் இங்கே நிகழ்ந்து வருகின்றன. முயற்சியே பயன் பெறுவதற்குச் சாதனமாய் இருப்பதென் பதை அறிந்தவர்களுங்கூட அம் முயற்சியை மேற்கொள்ளாது சோம்பி யிருப்பதையும் இங்கே நாம் பார்க்கின்றோம். இவற்றுக்கெல்லாம் காரணம் யாது என்பதைச் சிந்தித்து உணரவேண்டும்.

ஒருவன் முயற்சியை மேற் கொள்ளுவதற்கும், அங்ஙனமின்றிச் சோம்பியிருப்பதற்கும், முயற்சியின் பயனைப் பெறுவது முதலியவற்றிற்கும், காரணமாய் இருப்பது அவனது வினையே யாகும். அந்த வினையைக் காலம் இடம் முதலியவற்றை அறிந்து ஊட்டுபவன் இறைவனே. முயற்சிக்கும் பயனுக்கும் வினை அவாந்தர காரணமாயிருக்க, அவ்வினையை ஊட்டும் சிவபெருமான் பரம காரணனாயிருக்கின்றானென்பது ஊகித்து உணரத் தக்கதாயிருக்கின்றது. இதனை ''முயலும் முயலின் முடிவும்மற் றாங்கே, பேர் நந்தி தானே'' என்று ஆசிரியர் அறிவிக்கின்றார்.

வானத்திலிருந்து மழை பொழிவதைப் பார்க்கிறோம். மழைப் பெயலாற் கிடைக்கும் நீருக்குக் காரணமாயிருப்பது மழை. அம் மழைக்குக் காரணமாயிருப்பது மேகம். இங்கே நீருக்கு மழை அவாந்தர காரணமாயிருப்பது. மேகம் பரம காரணம் என்பதை அறியவேண்டும். எந்தக் காரியமும் ஒரு காரியத்தை உடையதாயிருக்கும் என்பதும், அந்தக் காரணங்களனைத்தும் ஒரு பரம காரணனிடத்திலிருந்து உண்டாவன என்பதும், அந்தப் பரம காரணன் பரமசிவனே என்பதும், பாடலின் பின்னிரண்டு வரிகளில் கூறப்பெற்ற எடுத்துக் காட்டாலும் முடிபாலும் அறியப் பெறுவனவாம்.

"ஞான சித்தர்களும் சித்த மருந்தும்"

(திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ., பி.எல்.,
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8)

சருவ அண்டபிண்ட சராசரங்கட்கும் ஆதி முதல்வனே ஈசன். அவனே பராபரம்; பரமான்மா; பிரமன். இவன் தூய்மையுடைய கண்ணாடிபோல் விளங்குகின்றான். ஆயினும் அனந்தமான சீவன்கள் இக்கண்ணாடியிலுள்ள பிரதி பிம்பத்தை நோக்க வல்லமையற்றுள்ளன. ஒரு கண்ணாடியை வெளிச்சத்தில்வைத்து விட்டு ஒருவன் இருளில் நின்று கொண்டு அக் கண்ணாடியை நோக்கினானால் தன் உருவம் தோற்றாது. கண்ணாடி யென்னமோ ஒளியில் தான் உள்ளது. ஆயினும் அவனுக்கு அக்கண்ணாடி அப்பிரயோசனமே யாயிற்று. கண்ணாடியை இருளில் வைத்து விட்டுத் தான் வெளிச்சத்தில் நின்று கொண்டு பார்க்குமளவில் தன் பிரதி பிம்பத்தைத் தெள்ளெனக் காண்கிறோம். அது போல ஆண்டவனுடைய தெரிசனம் கிட்ட வேண்டுமாயின் தன்னிடத்தில் ஒளி தேவை. ஆகவே கடவுள் சொரூபத்தைத் தரிசித்தல் தன்னைத் தரிசித்தாலன்றிக் கூடாததாம்.

சீவன் இவ்விதம் இருளிலிருக்க வேண்டிய நிமித்தம் பிராரத்த வினைகளும்ஆகாமியமாகிய புதிய வினைகளுமே காரணங்களாக உள்ளன. இவ்வினைகள் சன்ம சன்மாந்திரங்களுக்கு சீவனை தொடர்ந்து சென்று கொண்டிருக்கும். பிறவிக்கடல் பெருகுந் தன்மையுடையனவாய் நிற்கும். இதை உணர்ந்த விவேகியானவன் பிராரத்த வினையைத் தேவ கட்டளையென்று திருப்தியாய் அனுபவித்துக் கொண்டு ஆகாமியமாகிய புதிய வினைகளைச் செய்யாது இருப்பன்.

இவ்வினைகள் சிவ சிருட்டியல்ல. சீவ சிருட்டியேயாம். இவைகளுக்கு மூலமாயுள்ள சித்த விருத்திகள் பதினான்காவன. அவைகளின் விவரம்:

1. காமம்: இச்சை; தன தானியாதிகளை மேன்மேலும் தேடுந் தன்மை.
2. குரோதம்: சினம்; பூசல்.
3. உலோபம்: ஈயாமை.
4. மோகம்: தான் தேடிய பொருள் மீதுள்ள அதிவிருப்பம்.
5. மதம்: செருக்கு; கருவம்.
6. மாற்சரியம்: பொறாமை.
7. இடும்பை: அவமதிப்பு; உதாசீனம்.
8. வேட்கை: பலதிறத்த நசையென்னும் ஆசை
9. ஈரிடை: நமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரல் வேண்டுமென்று எண்ணும் ஒருவகைப் பொறாமை
10. தர்ப்பம்: தன்னையே உயர்த்திப் பேசுமியல்பு.
11. இராகம்: பரதார கமன விருப்பம்.
12. துவேஷம்: பிறர் செய்த தீமை கருதி அது போன்றதை அவர்க்குத் தானும் செய்யொரு தன்மை.
13. இடம்பம்: பிறர் கண்டு புகழுமாறு பொருந்தாது அளிக்கும் தானம் முதலியன.
14. அகங்காரம்: தானென்னும் அகந்தை.

இந்த பதினான்கும் நசித்தாற் பிறப் பிறப்பும் நசிக்கும்.

பிறப் பிறப்பு நீங்க நான்கு வழிகள்: ஞான சித்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சுருங்கக் கூறினர். சரியை யென்பது மன்னுயிரைத் தன்னுயிரைப் போலெண்ணுவது. குருமொழி தப்பா திருப்பது கிரியை. அலையும் மனம் ஒடுங்குவதே யோகம். எப்போதும் தற்பரமாய் நின்றதுவே ஞானம். முதல் மூன்றைப் பற்றினவன் ஞானமெய்துவனெனப்படுகிறது.

பலனை உத்தேசித்துச் செய்யும் சற் கருமங்கள், அவைகளை அனுபவிக்கப் பிறவியை நல்

கும். பாவம் செய்வார் அதனை மறைவாகச் செய்து அதன் பலனை அனுபவிப்பதுபோல சற்கரும புண்ணியஞ் செய்வார்களும் அதனை மறைவாகச் செய்தல் வேண்டும். அவ்வாறன்றிப் புண்ணியத்தைப் புகழ்ந்து கூறிக் கொள்வாரேல் அதனை அழிப்பவராவர்.

ஒருவனுடைய சீவன் மறை பொருளாயிருப்பது போல, பாவ புண்ணியங்களும் மறை பொருளாயிருத்தலினல், மனிதர் மனம் போன போக்கில் நடக்கின்றனர். தெய்வ முண்டென்று ஒருவன் நிச்சயித்தவனுயின் இரகசியமாகவும் எவ்வித பாப கிருத்தியத்தையும் செய்யான். ஒருவன் பாவஞ் செய்து மேன்மையாய் உயிர் வாழ்வதைவிட, இழி தொழிலாளர்க்கு ஊழியஞ் செய்து உண்ணுதல் மிகவும் நன்று.

வைத்து மறந்து விட்ட பொருளை ஞாபகத்தாற் கண்டு பிடிப்பதன்றிக் கருமத்தாற் கண்டு பிடிப்பதில்லை. அதுபோல் அஞ்ஞானமாகிய இருளைப்பரமான்மாவின் சிந்தனையாலே அகற்றி ஞானத்தை யடைதல் வேண்டும். இப்படிப் பட்ட ஞானி தன் முற்பிறப்புக்களை யெல்லாம் அறிதல் கூடும். இஞ்ஞானம் கருமத்தாற் கூடுவதன்று. புத்தருக்கு ஞானேதயம் கிடைத்தவுடன் தன்னுடைய ஐந்நூறு முன் பிறப்புக்களைக் கண்டாரென்பது மரபு. இவ்வித சித்தியைக் கருமத்தாற் காணற்பாலதல்ல.

நிட்காம கருமங்களும் முக்திக்குச் சாதனங்களாம். இவற்றுள் சிவ பூசை செய்வதைக் காட்டிலும் அணுவுக் கணுவாய் ஈசுவரன் லயித்திருக்கும் பசிப்பிணி, உடற்பிணியால் வருந்தும் வெற்றருக்குச் சேவை செய்வதே உயர்ந்த சாதனையாகும்.

(தொடரும்).

மதிப்புரைகள்

1. சமய விளக்கம்:

இந்நூல், மகரிஷி கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றியது. சமய சம்பந்தமான உண்மைகளை எளிய முறையில் பாமர மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் எழுதப் பெற்றுள்ள பயன்மிக்க சிறந்த நூல். சிங்கப்பூர் அன்பு வள்ளல் திரு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் நன்கொடையால் வெளியிடப்பெற்றது. எளிய இனிய முறையில் தெளிவுற அமைந்துள்ளது. விலை: 30 காசு. கிடைக்குமிடம்: சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், சென்னை-20.

2. சைவ சித்தாந்தச் சிறு நூல்கள்:

சைவ சித்தாந்தம் பற்றிய நூல்கள் பலவற்றின் பெயர்கள், அவற்றின் பாடற்றெகை, பதிப்பு, பதிப்பித்தோர் பெயர் முதலிய பட்டியல் விவரங்களுடன் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றது. அச்சில் இலாத பல சிறு சிறு நூல்களைப் பற்றிய பெயர்களைத் தெரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும். சைவ சித்தாந்த மகா சமாஜ செயலாளர் திரு தி.கு. நாராயண சாமி நாயுடு அவர்களின் மணி விழா மலர் வெளியீடு. விலை குறிப்பிடப் பெறவில்லை. கிடைக்குமிடம்: சைவ சித்தாந்த மகா சமாஜம், 12, கிழக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை-4.

3. தடைகளும் விடைகளும்:

மலேயா-புலவர் மாமணி, சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள், கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலை அடிகள் மன்றத்தைச் சேர்ந்த சைவத் தமிழ் இளைஞர்கள் நிகழ்த்திய ஐய வினுக்களுக்குத் தந்த விடைகள் இந்நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. 69 ஐய வினுக்களும் அதற்குரிய விடைகளும் இதன்கண் உள்ளன. இந்நூலின் முயற்சியும் பாராட்டத்தக்கன. விலை ரூ. 1-50. கிடைக்குமிடம்: மறைமலை அடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி, கோவை மாவட்டம்.

—ஆசிரியர்.



ஸ்ரீ சண்டேசாநுக்கிரகமூர்த்தி, கங்கைகொண்ட சோழபுரம்

வைஷ்ணவ சமயாசிரியர்களின் விசேஷ நூல்கள்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

ஸ்ரீ வைஷ்ணவ பூருவாசாரியர்களில் மண வாள மா முனிகள் ஈருகவுள்ள பரி கணிதர் களான ஆசாரியர்கள் பதினெண்மர்தாம் க்ரந் தங்களை யருளிச் செய்து உபகாரம் செய்தருளி னவர்கள் என்று நிருபிக்கப் படுகிறது.

1. ஆளவந்தார்:—முதன்மையான ஆசா ரியர் ஸ்ரீமத் நாதமுனிகளானாலும், அவர் தாமும் நியாய தத்வமென்கிற க்ரந்தமருளிச் செய்ததாகப் பிரஸித்தியிருந்தாலும் அந்த திவ்ய க்ரந்தம் லுப்தமாயிற் றென்று தெரிவ தனல் ஆளவந்தாரையே முந்துற முன்னம் கொள்ளுகிறேன். இவரருளிச் செய்த க்ரந் தங்களுள் ஒன்றிரண்டு லுப்தங்களெனப் படு கிறது. இப்போது பிரசாரத்திலுள்ள க்ரந்தங் களாவன—ஸ்தோத்ர ரத்னம், சதுச் ச்லோகி, ஸித்தித்ரயம், ஆகமப் ராமாண்யம், கீதார்த்த ஸங்க்ரஹம் இவையே. புருஷ நிர்ணயமென் கிற ஒரு க்ரந்தம் லுப்தமென்று தெரிகிறது, ஸித்தித்ரயத்தை கத்யத்ரயம்போலே மூன்று க்ரந்தமாகக் கணக்கிடுவர் பெரியார். (குரு பரம்பராஸாரம் காண்க).

2. எம்பெருமானர்:—ஸ்ரீ ராமாநுஜர்க்கு எம்பெருமானரென்பது சிறப்புப் பெயர். இவர் அருளிச் செய்த க்ரந்தங்களில் ஒன்றுகூட லுப்த மானதாகத் தெரியவில்லை. 'நவரத்னம்' அல்லது 'நவநிதி' என்னும்படியாக ஸ்வாமி ஸாதித்தருளின க்ரந்தங்கள் ஒன்பது. கீதா பாஷ்யம், ஸ்ரீ பாஷ்யம்,வேதாந்த தீபம், வேதாந்தஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், சர ணுகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீ வைகுண்ட கத்யம், நித்யம்—என்னுமிவை ஒன்பது க்ரந்த ரத்னங்களாம். வேதாந்த தீப வேதாந்த ஸாரங்களுக்குத் தவிர மற்ற ஏழு க்ரந்தங் களுக்கும், வியாக்கியானங்கள் அவதரித்துள் ளன. வேதாந்த தேசிகனருளிச் செய்த ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷையில் மூன்றுமதிகாரத்திற்கு நித்யவ்யாக்கியானதிகாரமென்று பெயரிட்டி ருப்பதால் நித்யத்திற்கும் வியாக்கியான முள்ள தாகக் கொண்டோம்.

3. திருக் குருகைப்பிரான் பிள்ளான்:— 'தெள்ளாரும் ஞானத் திருக் குருகைப்பிரான் பிள்ளான், எதிராசர் பேரருளால்—உள்ளா ருமன்புடனே மாறன்மறைப் 'பொருளை அன் றுரைத்தது, இன்ப மிகு மாறுயிரம்' என்கிற உபதேச ரத்தின மாலைப் பாசுரப்படியே எம் பெருமானர் திருவாணையின்படி திருவாய் மொழிக்கு முதன் முதலாக ஆறுயிரப்படி யென்கிற ஸங்க்ரஹ வியாக்கியானம் இட்ட ருளினவர் திரு குருகைப்பிரான் பிள்ளான். ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் முதன்முதலாகத் திருவவதரித்த மணி ப்ரவாள க்ரந்தம் (அதா வது ஸம்ஸ்க்ருத த்ராவிட மிச்ரமான க்ரந்தம்) இதுவேயாகும்.

4. கூரத்தாழ்வான்:—ஸ்ரீ வைகுண்ட ஸ்த வம், அதிமாநுஷஸ்தவம், ஸுந்தரபாஹு ஸ்த வம்,வரதராஜஸ்தவம்,ஸ்ரீஸ்தவம் என்னுமிந்த பஞ்சஸ்தவங்கள் ஆழ்வானருளிச் செய்தவை. வியாக்கியானத்தோடு கூடிய யமகரத்நாகரம் ஆழ்வானருளிச் செய்ததாகச் சொல்லப் படுவது விவாத க்ரஸ்தம். கூரேச விஜயம் பின்புள்ளார் பணித்ததென்று ஆதியி லேயே வ்யக்தமாகியது. சரமச்லோக வியாக் கியானமும் நித்யமுமருளிச் செய்திருந்ததாக தேசிகன் உதாஹரிக்கிருர்; அவை லுப்தங்கள். கூரத்தாழ்வான் திருவடியான கூரநாராயண ஜீயர் ஸுதர்சநசதகம் பணித்தார். ஆனல் இவர் ஆசார்ய பரம்பரையில் சேர்ந்தவரல்லர். மந்த்ர சாஸ்த்ரத்தில் மஹா நிபுணர்.

5. பட்டர்:—(ஸ்ரீ பராசரபட்டார்யரென் பது இவரையே). இவரருளிச் செய்த க்ரந்தங் கள்—ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவம், ஸ்ரீ குணரத்ந கோசம், ஸ்ரீ ரங்கநாத ஸ்தோத்ரம் (ஸப்தப்ரா காரமத்யே இத்யாதி) அஷ்டச்லோகி. பக வத் குண தர்ப்பணமென்று மறு பெயருடைய ஸஹஸ்ரநாம பாஷ்யம். க்ரியாதீப மென்கிற நித்ய க்ரந்தம். கைசிக புராண வியாக்கியா னம். நம் பெருமாள் திரு மஞ்சன ச்லோக ரத்னங்கள். லக்ஷ்மீ கல்யாண நாடகமும்,

தத்வரத் நாகரமும் லுப்தங்கள். பட்டருடைய திருத் தம்பியாரான சிராமப் பிள்ளையின் திருக் குமாரரான வேதாச்சார்யர் க்ஷமா ஷோடசி யருளிச் செய்தார்.

6. நஞ்சீயர்:—பட்டர் திருவடிகளிலேஆச் ரயித்த நஞ்சீய ரருளிச் செய்த க்ரந்தங்களா வன—திருவாய்மொழிக்கு வியாக்கியானமான ஒன்பதினாயிரப்படி உலகப் பிரசித்தமானது. திருப்பாவை வியாக்கியானம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம். நித்யமும் ஸ்ரீ ஸூக்த பாஷ்யமும் லுப்தங்கள்.

7. எங்களாழ்வான்:—ஸ்ரீ விஷ்ணு சித் தார்ய ரென்கிற எங்களாழ்வான் மஹாஜ்ஞா நாதிகராய் விளங்கினவர். ஸ்ரீ பாஷ்யத்தில் அப்ரதிம பாண்டித்யம் பெற்றவர். ஸ்ரீ விஷ்ணு சித்தீய மென்கிற ஸ்ரீ விஷ்ணு புராண வியாக்கியான மொன்றுதா னருளிச் செய்த தாகத் தெரிய வருகிறது.

8. நடாதூ ரம்மாள்:—வாத்ஸ்ய வதா சார்ய ரென்னுமிவர் எங்களாழ்வான் திருவடி களிலாச்ரயித்து மஹாஜ்ஞாதாவா யிருந்தவர் அருளிச் செய்தவை—தத்வ ஸார மென்கிற ஸ்ரீ பார்ஷ்யார்த்த ஸாரஸங்க்ரஹ ரூபமான க்ரந் தம், ப்ரபந்த பாரிஜாதம், ப்ராதர நுஸந்தேயச் லோகமாலா, பரத்வாதி பஞ்சகம்..

9. நம்பிள்ளை:—இவரருளிச் செய்தவை திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப் பத்தாறாயிரப்படி. திருவ்ருத்த வியாக்கியமான ஈடு. இவற்றை வடக்குத் திருவீதிப் பிள்ளையின் க்ருதிகளாவுங் கொள்ளலாம். நம்பிள்ளை கங் காப்ரவாஹமாக அருளிச் செய்தவைகளை ஏடு படுத்தினவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை. ஆகவே இவற்றை இருவருடையவும் க்ருதியா கக் கொள்ளத் தட்டில்லை.

10. வடக்குத் திருவீதிப் பிள்ளை:—இவர் திவ்யப்ரபந்த வியாக்கியானமாக வல்லாமல் வேறு சில க்ரந்தங்களு மருளிச் செய்திருப்ப தாகக் காண்கிறது. குன்றத்து ரய்யன் திருக் குமாரரான அப்பன் ஸ்ரீநிவாஸாசார்யர் பணித்ததாக (1913ஆம்வருஷத்தில்)தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டுள்ள அஷ்டா க்ஷர தீ பிகை யென்றொரு க்ரந்தம் அருளிச் செய்திருப் பதாக உதாஹரிக்கப்பட்டுள்ளது. அது லுப்த மென்றே சொல்லவேணும்.

11. பெரியவாச்சான் பிள்ளை—இவரரு ளிச் செய்த க்ரந்தங்கள்—நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்கியானங்கள், அதிலும் பெரி யாழ்வார் திருமொழி வியாக்கியானம் நானூறு பாசுரங்களுக்கு லுப்தம். ஸ்தோத்ர ரத்ன வியாக்கியானம், ஜிதந்தா வியாக்கியானம், நிகமனப்படி யென்கிற மிகச் சிறியதொரு ரஹஸ்ய க்ரந்தம், ஸ்ரீ ராமாயணுதி தனி ச்லோகம்.

12. பிள்ளை லோகாசாரியர்:—இவரரு ளிச் செய்த க்ரந்தங்கள், அஷ்டாதச ரஹஸ் யம். அவையாவன—ஸ்ரீவசந பூஷணம், தத் வத்ரயம், அர்த்த பஞ்சகம், அர்ச்சிராதி, ப்ர மேய சேகரம், ப்ரபந்ந பரித்ராணம், ஸாரஸங் க்ரஹம், ஸம்ஸார ஸாம்ராஜ்யம், நவரத்ன மாலை, நவ வித ஸம்பந்தம், யாத்ருச்சிகப்படி. பரந்தபடி, ச்ரிய பதிப்படி தத்வ சேகரம், தனி ப்ரணவம், தனி த்வயம், தனி சரமம், முமுக்ஷுப்படி. இந்த ரஹஸ்ய க்ரந்தங்கள் தவிர வேறு சில க்ரந்தங்களும் இவரருளிச் செய்திருந்ததாகத் தெரிய வருகிறது. கத்யத் ரயத்திற்கு ஒரு வியாக்கியான மருளிச் செய் திருந்ததாக மணவாள மா முனிகளெடுத்துக் காட்டியருளுகிறார்.—தத்வத்ரயத்தில் ஈச்வர ப்ரகரணத்தில் (6) ''ஜ்ஞாநா நந்தைக ஸ்வரூ பனைகையாவது ஆநந்த ரூபஞ்ஞாநனயிருக்கை'' என்ற விடத்து மாமுனிகளின் வியாக்கியானத் தில் ''அநுகூலஜ்ஞானமே ஸ்வரூபமாயிருக்க ஜ்ஞாநானந்தங்களென்று பிரித்துச் சொல்லு கிறது இரண்டும் உண்டாகைக்காக, என்றிறே இவர் தாமிட்டருளின கத்ய வ்யாக்யானத் திலே அருளிச் செய்தது'' என்கிற ஸ்ரீ ஸூக்தி காண்கிறது. அந்த வியாக்கியானம் லுப்தம்.

13. அழகிய மணவாளப் பெருமாள் நாய னார்:—இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் இளைய திருக் குமாரர்; பிள்ளை லோகாசார்ய ருடைய திருத் தம்பியார். இவரருளிச் செய்த க்ரந்தங்கள்—ஆசார்ய ஹ்ருதயம், அருளிச் செயல் ரஹஸ்யம், திருப்பாவைக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம். கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், அமலனாதிபிரான் வியாக்கியானம். (பெரிய திருமடல் வியாக்கி யானம்), ஆசார்ய இருதயத்திற்கு மூலமான பட்டோலை (இது லுப்தம்).

14. ஸ்ரீ ஸுதர்சன பட்டர்:—ச்ருதப்ரகாசிகாசார்ய ரென்பது இவரையே. இவர் நடாதூர ம்மாள் திருவடிகளிலே யாச்ரயித்து தீபாதுத்பந்த ப்ரதீபம் போலே மிக விளங்கினவர். இவரருளிச் செய்த க்ரந்தங்கள்—ஸ்ரீ பாஷ்யத்திற்கு விபுல வியாக்கியானமான ச்ருதப்ரகாசிகையும், அதிஸம் க்ஷிப்த வியாக்கியானமான ச்ருதப்ர தீபிகையும், வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானமான தாத்பர்ய தீபிகையும், சரணுகதிகத்ய வ்யாக்யானமும், ஸுபாலோபநிஷத் பாஷ்யமும்.

15. ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன்:— ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அதிக ஸங்க்யையான க்ரந்தங்கள் அருளிச் செய்தவர் இவ்வாசிரியர். அந்த க்ரந்தங்கள் ஸ்தோத்ராவளீ விபாகம், காவ்ய நாடக விபாகம், வேதாந்த விபாகம், வ்யாக்யான விபாகம், ஸம்ப்ரதாய விபாகம் என்று ஐந்து தொகுதிகளாக அடியேனுல் வகுத்து அச்சிடப் பட்டுள்ளது. உலகமெல்லாம் பரவியுள்ளது.

16. ஆச்சான் பிள்ளை—இவர் பெரியவாச்சான் பிள்ளையின் திருக் குமாரரும் திருவடியுமாவர். இவர், பரந்த ரஹஸ்யம், மாணிக்க மாலை, சதுச்ச்லோகீ வியாக்கியானம், தத்வ ஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களை யருளிச் செய்தவர்.

17. வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர்—இவர் ஆச்சான் பிள்ளை திருவடிகள். இவரருளிய க்ரந்தங்கள்—திருவாய் மொழிக்குப் பன்னீராயிரப்படியுரை, திரு விருத்தத்திற்கு ஸ்வாபதேசவுரை, திருப்பாவைக்கொரு ஸங்க்ரஹ வியாக்கியானம். தத்வ தீபம், தீப ப்ரகாசம், தத்வ நிருபணம், ரஹஸ்யத்ரய காரிகாவளீ, தீபஸங்க்ரஹம்.

18. மணவாள மாமுனிகள்:—ஸ்வாமி எம்பெருமானுரான பூர்வாவதாரத்திலருளிச் செய்தவை ஒன்பது திவ்ய க்ரந்தங்கள்; அவற்றுக்கிரட்டிப்பாகப் பதினெட்டு க்ரந்தங்கள் இவ்வவதாரத்திலருளிச் செய்தவை.— 1. முமுக்ஷுப்படி வியாக்கியானம், 2. தத்வத்ரய வியாக்கியானம், 3. ஸ்ரீ வசந பூஷண வியாக்கியானம், 4. ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானம், 5. பெரியாழ்வார் திருமொழிவியாக்யானம் (நானூறு பாசுரங்களுக்கு), 6. இராமாநுச நூற்றந்தாதியுரை, 7. உபதேச ரத்தின மாலை, 8. திருவாய்மொழி நூற்றந்தாதி, 9. ஆர்த்திப் பிரபந்தம், 10. ஞானஸார ப்ரமாணயோஜனை, 11. ப்ரமேய ஸாரப்ரமாணயோஜனை (இது லுப்தம்), 12. யதிராஜவிம்சதி, 13. தேவராஜ மங்களம், 13. கீதாதாத்பர்ய தீபம் (லுப்தம்), 14. திருவாராதன ப்ரயோகம், 16. ஈட்டு ப்ரமாண ஸங்க்ரஹம், (இப்போது அச்சிடப்பட்டிருப்பதல்ல). 17 ரஹஸ்ய ப்ரமாண ஸங்க்ரஹம், 18. திவ்ய தேச மங்களா சாஸன மாலிகை.

செய்திச் சுருக்கம்

இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாத சுவாமி கோயிலுக்கு, மத்ரா-சம்ஸ்கிருத பவனத்தின் தலைவர் ஸ்ரீ பிரபுதத்த பிரம்மசாரி அவர்கள் 700 பக்தர்கள் அடங்கிய திருக்கூட்டத்துடன் வருகை தந்து 3 நாட்கள் தங்கியிருந்து பற்பல பூசைகளையும் நாம சங்கீர்த்தனம் பஜனை ஆகியவற்றையும் செய்து தரிசித்து வழிபட்டார்கள். ஸ்ரீ சுவாமிகளின் வருகை, பக்தி இயக்கத்தை வளர்க்கும் முறையில் சிறப்புற அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது. நிர்வாக அதிகாரி திரு. என். இராஜ கோபாலன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுத் தக்கபடி உபசரித்தார்கள்,

திருவாசகத்தில் ஒரு பெருவாசகம்

முன்னுரை :

திருவாசகம் தமிழிலுள்ள தலை சிறந்த சமய நூல் என்பதனை அனைவரும் அறிவர். ஓதுபவர் உள்ளத்தை யெல்லாம் கொள்ளை கொண்டு, கருங்கல் மனத்தையும் கரைந்து கசிந்து உருகும்படி செய்வதில், திருவாசகம் ஈடு இணையற்றது என்பதனை வாழையடி வாழையாக வந்த சான்றோர்கள் அனைவருமே, தத்தம் அனுபவத்தில் கண்டுணர்ந்து போற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அண்மைக் காலத்து அருட்பெருஞ் சான்றோராகிய இராமலிங்க அடிகளார், "சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம், தோத்திரங்களில் தலைசிறந்தது திருவாசகம்'' எனப் பலகாலும் அன்பர்களுக்கு அறிவுறுத்துவாராம். இதனால் திருவாசகத்தின் சிறப்பு எத்தகையது என்பதை, நாம் ஒருவாறு நன்கினிது தெளியலாம்.

சிறந்த திருப்பாடல் :

அத்தகைய அரும் பெரும் சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில் பல சிறந்த அரிய பாடல்கள் உள்ளன. அவற்றுள்,

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

எனவரும் அழகிய இனிய பாடல், திருவாசகப் பாடல்களிலேயே மிகமிக முதன்மையான, விழுமிய முழுமணி போன்ற பெருநலம் சான்றதாகும். இதனைத் திருவாசகத்தின் 'இருதய சுலோகம்' என்றும் கூறலாம். தொட்டனைத்தூறும் மணற் கேணி போலக் கற்றனைத் தூறும் பற்பல சிறந்த நுண்பொருள்களைத் தன்னகத்தே பொதிந்து கொண்டு, பொலிந்து விளங்குகின்றது இவ்வரிய சிறந்த திருப்பாடல்!

பாடலின் பொருள் :

திருவாசகத்தில் 'கோயிற்றிருப்பதிகம்' என்னும் பகுதியில், 'அநுபோக இலக்கணம்' கூறும் பாடல்களுள் ஒன்றாக, இப்பாடல் அமைந்துள்ளது. இதன் கண் மாணிக்க வாசகப் பெருமான், இறைவன் தமக்கு அருள் செய்ததனையும்; மலத்தைப் போக்கித் தம் அறியாமையை நீக்கியதனையும்; தம்முடைய உள்ளத்தில் ஞான ஒளியைப் பரப்பும் சூரியனாகத் தோன்றி நிலைபெற்ற இயல்பினையும்; அத்தகைய இறைவனின் அருட்பெரும் இயல்புகளைத் தாம்நினைப்பற நினைந்து போற்றி வருதலையும் குறிப்பிட்டருளிகின்றார். இறைவன் அணுவினும் மிகமிக நுண்ணியனாய் எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று இயக்கி வரும் அத்துவித இயல்பும்; உலகிலுள்ள உயிர்ப் பொருள் உயிரில் பொருள்கள் (சத்து, சடம்) என்பவை இறைவன் இயக்கினால் அன்றி இயங்க மாட்டாமையும்; அங்ஙனம் யாவற்றையும் இயக்கும் இறைவன் அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட அதீத நிலையில் விளங்கும் தன்மையும்; அத்தகைய இறைவனை உயிர்கள் தம்முடைய முயற்சியினால் சுட்டறிவு கொண்டு அறிதல் இயலாது என்னும் உண்மையும்; இப்பாடலின்கண் நன்கினிது விளக்கப்பட்டு இருக்கின்றன. இப் பாடலின் ஒவ்வொரு சொல்லும் மிகமிக ஆழ்ந்து ஆராய்ந்து நுனித்து உணர்தற்கு உரியதாக அமைந்துள்ளது.

''இந்நாளில் எனக்கு அருள் புரிந்து, என்னுடைய அறியாமையாகிய இருளைப் போக்கி, மனத்தின்கண் வெளிப்படுகின்ற சூரியனைப் போல வெளிப்பட்டு நிலைபெற்ற

நின்னுடைய சிறந்த இயல்புகளை இடைவிடாமல் எப்பொழுதும் நினைந்து துதிக்கும் பேற்றை யான் பெற்றேன். உன்னை யல்லாமல் வேறொரு பொருளும் இல்லாதபடி, எல்லாப் பொருள்களிலும் கலந்து கலந்து அணுத்தன்மைப் பட்டு நுணுகி நுணுகி, எங்கும் ஒரு தன்மையாய் விரவி நிற்கும் ஒப்பற்ற பொருளாகத் திருப்பெருந்துறையின்கண் உறைகின்ற சிவபெருமானே! காணப்படும் பொருள்களுள், நீ ஒரு பொருளும் ஆகமாட்டாய். ஆயினும் உன்னை அல்லாமல் ஒரு பொருளும் இயங்குவதில்லை. இத்தகைய நின்னை அறியும் வல்லமை உடையவர்கள் உலகில் யாவர் உளர்? ஒருவரும் இலர்''.

என்பது இப்பாடலின் திரண்ட பொருள்.

(1) 'இன்று' என்றது, சிவபிரான் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் ஆட்கொண்டருளிய புனித நாளை உணர்த்துகின்றது எனக் கொள்ளலாம். மாணிக்க வாசகப் பெருமான் ''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்''; ''பெருந்துறையின் மேய பெருமான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று''; ''இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி''; ''களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே'' என, இன்று என்னும் சொல்லைப் பல இடங்களில் வழங்கி அருளிச் செய்திருத்தல் காணலாம்.

(2) 'எனக்கு அருளி' என்னும் தொடரில், 'எனக்கும்' என்ற இழிவு சிறப்பு உம்மை மறைந்து நின்றது. 'எனக்கு' என்னும் சொல், தம்முடைய சிறுமைகளை எல்லாம் தொகுத்துச் சுருக்கி உணர்த்தும் வகையில் அருளிச் செய்யப்பட்டதாகலின், அஃது 'இசை எச்சம்' எனக் கொள்ளப் பெறும்.

(3) 'இருள் கடிந்து' என்றது, இறைவன் தமக்கு ஞானோபதேசம் செய்து அறியாமையைப் போக்கி யருளிய பேருதவியை வியந்தவாறு. 'குற்றங் கடிதல்' என்றாற்போல 'இருள் கடிதல்' என்று குறிப்பிட்ட திறம் உணர்ந்து இன்புறற் பாலது.

(4) அருளைப் போக்குதலும், ஒளியைப் பரப்புதலும் ஞாயிற்றின் செயல். அம்முறையில் தமது அறியாமை இருளைப் போக்கித் தமக்கு ஞான ஒளியைக் கொடுத்தருளியமை பற்றி, அடிகளார் இறைவனை ஞாயிறு என வியந்து போற்றினர். நக்கீரர் பெருமானும், முருகனை ஞாயிறு என விளக்கி யிருத்தல் இங்குக் கருதற் பாலது. மாலையில் மறையும் சூரியனை விலக்கி, ஒளி மிகுந்த அழகிய காலைக் கதிரவனை உணர்த்துவதற்காக 'எழுகின்ற ஞாயிறு' என்றார். 'ஞாயிறே போன்று' என்பதில் ஏகாரம் பிரிநிலை; சந்திரன் விண்மீன்கள் ஆகிய பிற ஒளிப் பொருள்களை விலக்கியது.

(5) சூரியன் கிழக்குக் கடலில் அல்லது உதய மலையில் தோன்றுவதாகக் கூறுவது கவி மரபு. அந்தப் பௌதிக சூரியனை விலக்கி ஞான சூரியனாகிய இறைவனையே சுட்டி உணர்த்த 'உள்ளத்து எழுகின்ற ஞாயிறு' என விதந்து கூறினர். இனி, 'உள்ளத்து' என்பதனை 'எழுகின்ற' என்னும் சொல்லோடு சேர்த்துக் கொள்ளாமல், 'உள்ளத்து நின்ற நின் தன்மை' எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளலாம். இறைவன் உலகமெங்கும் வியாபித்திருந்தாலும் அன்பர்களாகிய ஞானிகளின் உள்ளத்திலேயே நிலை பெற்றுத் தங்கி வீற்றிருக்கின்றான் என்பது வேதாகமங்களின் முடிபு. அஃது இங்கே குறிப்பிடப் பட்டதாகக் கொள்ளலாம். ''பெருந்துறையின் மேய பெருமான் பிரியாது இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று'' எனவும், "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' எனவும் மணிவாசகர் கூறுதல் காண்க.

(6) 'நின்ற' என்னும் சொல் காலவழுவமைதி. 'நிற்கின்ற' எனும்பொருளில் வந்தது. ''முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தானே'' என்பது நன்னூற் சூத்திரம். 'மலர்மிசை ஏகினான்' எனத்

திருவள்ளுவர் இறந்த காலத்திற் குறிப்பிட்டதும், ஆசிரியர் பரிமேலழகர் அதனைக் காலவழுவமைதி என்று விளக்கி யிருப்பதும், இங்கே சிந்தித்து இன்புறுதற்குரியன.

(7) 'நின் தன்மை' என்பது இறைவனின் உயர்வற உயர்ந்த பெரு நலங்களையும், அத்தகைய இறைவன் தம் பொருட்டு எளி வந்து இரங்கிப் புரிந்தருளிய எல்லையற்ற பேரருள் உதவிகளையும், தொகுத்து உணர்த்தும்.

(8) 'நினைப்பற நினைந்தேன்' என்னும் தொடர், இப்பாடலில் மாணிக்க வாசகரால் முதன் முதலிற் புதிதாகப் படைத்து வழங்கப் பெற்ற அருமை மிக்க—ஓர் அழகிய இனிய—பொருள் பொதிந்த சொற்றொடர் எனலாம். 'நினைப்பு' என்பது மறப்பின் பின் நிகழ்வது. மறந்ததை நினைப்பதும், நினைந்ததை மறப்பதும் நம்மனோர்க்கு இயல்பு. மாறி மாறி அடுத்தடுத்து நிகழும் நினைப்பு மறப்புக்கள் இல்லாதபடி, எப்பொழுதும் இடைவிடாமல் நினைந்து இறைவனைத் தியானித்துக் கொண்டு, அவனோடு ஒன்றி யிருக்கும் திருவருட் பேற்றினை எய்தப் பெற்றமையினால், 'நினைப்பற நினைந்தேன்' என்று அருளிச் செய்தார். இதனைச் 'சாக்கிர அதீத நிலை' எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

பொற்புறு கருவி யாவும்
புணராமே அறிவு இலாமைச்
சொற்பெறும் அதீதம் வந்து
தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல்
சாக்கிர அதீதம் தானே.

எனச் சாக்கிர அதீத நிலையின் இயல்பை, உமாபதி சிவாசாரியார் தாம் இயற்றிய சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த நூலில், விளக்கி யிருத்தல் காணலாம்.

'நினைப்பற நினைந்தேன்' என்னும் இவ்வரிய தொடரின் அருமைப் பாட்டை மிகவும் வியந்து, கவிஞர்கள் பலரும் தத்தம் கவிதைகளில் தழுவிப் போற்றிக் கொண்டுள்ளனர். தென்முகக்கடவுள் பற்றிய துதியில், அவர் 'சொல்லாமல் சொன்னவர்' என்றும், அவரை 'நினையாமல் நினைந்து' நாம் தொழுதல் வேண்டும் என்றும், பரஞ்சோதிமுனிவர் குறிப்பிட்டிருத்தல்காணலாம். இவ்வாறே கவிஞர் ஏறு ஆகிய கம்பரும், மண்டோதரியைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், அவள் இராவணனை 'நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்' எனச் சுட்டியிருத்தலும் கருதுதற்குரியது. மாணிக்க வாசகர் இத்தொடரை அருளிச் செய்ததற்கு,

உள்ளுவன் மன்யான் மறப்பின்;
மறப்பறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம்

உள்ளினேன் என்றேன்; மற்று
என்மறந்தீர்? என்று என்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

என்பன போன்ற அரிய திருக்குறள்களே அடிப்படையாகும் என்பது, ஆராய்ந்து உணர்ந்து சுவைக்கத் தகுவதாகும்.

(9) 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்னும் தொடர், இறைவன் இவ்வுலகப் பொருள்கள் எல்லாமாகவும் விளங்கும் தன்மையை உணர்த்துகின்றது. 'எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஞானிகள் இவ்வுலகப் பொருள்களை எல்லாம் சிவ மயமாகவே காண்பர். எவ்விடத்திலும் எல்லாப் பொருள்களிலும் சிவத்தைக் காண்பதும், எல்லாவற்றையும் சிவ மயமாகவும் சிவச் செயலாகவும் கொள்ளுவதும் ஞானிகளின் இயல்பு. இந்நிலையினை எய்தும் தன்மையே ஞானப்பேற்றிற்கு அறிகுறியாகும்.

பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர்;
பதார்த்தங்கள் பாரார்.....;
சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளுக்கு ஏற்ப, மாணிக்க வாசகர் எல்லாம் சிவமயமாகக் காணும் நல்லாராக விளங்கப் பெற்றதனை 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்னும் தொடர், தெளிவுறப் புலப்படுத்துகின்றது.

(10) 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து' என்னும் தொடர், இப்பாடலில் மிக முதன்மை வாய்ந்த ஒரு சிறந்த தொடராகும். இந்நாளைய அணு ஆராய்ச்சி (Atomism) பற்றிய அறிவியல் உண்மைகளை, இத்தொடர் குறிப்பிடுவதாகக் கொண்டு நாம் மகிழ்தல் கூடும். கவிஞர்கள் தம்முடைய தொலை முன்னோக்கு உணர்வு (Prophetic Vision) கொண்டு, இத்தகைய உண்மைகளை முன்கூட்டியே உணர்ந்து நமக்கு அறிவுறுத்துதல் உண்டு. ஷேக்ஸ்பியர் தம்முடைய 'பெரும்புயல்' (The Tempest) என்னும் நாடகத்தில்வரும் 'ஏரியல்' (Ariel) என்னும் ஏவலனுக, இந்நாளைய மின்னுற்றல் (Electricity) என்பதனையே முன்னராக உணர்ந்து குறிப்பிட்டிருக்கின்றார் என்றெல்லாம், மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் விளக்குவது இங்கு நாம் இயைபு பற்றிக் கருதி உணரத் தகும்.

(11) இத் தொடரின்கண் வரும் 'அணு' என்னும் சொல் ஆன்மாவைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். ஆணவ மலத்தின் சேர்க்கையால் உயிர் தன்னுடைய வியாபகத் தன்மை குன்றி அணுவைப் போன்று குறுகிய தன்மையை அடைதலில், உயிர்களுக்கு 'அணு' என்றும் ஒரு பெயர் வழங்கும்.

(12) 'சென்று சென்று தேய்ந்து தேய்ந்து' எனவரும் தொடர்களுக்குப் பலவகையில் பொருள்கள் கொள்ள வாய்ப்புண்டு. அவைகள் இறைவன் மிகமிக நுண்ணியனுதலை உணர்த்துகின்றன என்பது ஒரு கருத்து.

ஆன்மாக்கள் படிப்படியாக வெவ்வேறு பிறவிகளையும் நிலைகளையும் அடைந்து முடிவில் இறைவனை அடைகின்றன என்பதனை உணர்த்துகின்றன என்பது பிறிதொரு கருத்து.

'சென்று சென்று' என்பது உயிர்களின் உலகப் பற்று நிலையையும், 'தேய்ந்து தேய்ந்து' என்பது உயிர்களின் இறையருட் பற்று நிலையையும் குறிப்பதாகவும், இவற்றைக் கொள்ளுதல் கூடும்.

இனி, மலப் பிணிப்பு நிலையில் இறைவன் உயிர்களின் பின்னே சென்று சென்று 'புறம் புறம் திரிந்த செல்வமே' என்றாற்போல ஆட்கொள்ளுகின்றான்; அருட்பற்று நிலையில் உயிர்கள் இறைவன் பின்னே செல்லத் தலைப்பட்டுத் தம்முடைய குற்றங்கள் எல்லாம் தேய்ந்து தேய்ந்து ஒழிய உய்தியும் உயர்வும் பெறுகின்றன என்னும் உண்மையையும், இத் தொடர்கள் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

> உற்கைதரும் பொற்கை யுடையவர்போல், உண்மைப்பின்
> நிற்கை அருளார் நிலை.

எனவரும் திருவருட் பயன் செய்யுளும், ஈண்டுச் சிந்தித்து உணர்தற்கு உரியது.

தூல தேகம் சூக்கும தேகம் காரண தேகம் என்பனவற்றிலெல்லாம் சென்று சென்று அணுத் தன்மை இத்தகையதென்று அறிந்து அழுந்தி, சீவபோதமும் கன்ம நுகர்ச்சியும் ஆகியவை தேய்ந்து தேய்ந்து குறைந்தொழிய, உயிரானது சிவபரம் பொருளோடு ஒன்று சேரும் நிலையை இத்தொடர்கள் குறிப்பிடுகின்றன எனவும், நாம் கொள்ளுதல் அமையும்.

கானல் நீர் கண்டு மயங்கி இங்குமங்கும் எங்கும் ஓடி அலையும் மான் கணம் போல, உயிர்கள் இன்பம் என்று எவ்வெவற்றையோ பிறழ உணர்ந்து பெரு மயக்குற்று அலைந்து திரியும்இயல்பினைச் 'சென்று சென்று' என்றும்; பின்னர் அவைகளே தாம் இன்பமெனக் கருதிய பொருள்கள் துன்பமாதலை

அநுபவித்து உணர்ந்து தாம் அவற்றின் பாற்கொண்ட அவாவும் பற்றும்முறை முறையே கழியப் பெறுதலைத் 'தேய்ந்து தேய்ந்து' என்றும் குறிப்பிட்டதாகக் கொள்ளுதலும் பொருந்தும். சென்று சென்று திரிதல் 'ஆரா இயற்கை அவா'; தேய்ந்து தேய்ந்து கழிதல் 'அவா நீத்தல்'; அந்நிலையே பேரா இயற்கை பெறுதல் 'ஒன்றுதல்'. (குறள் 370).

(13) 'ஒன்றும்' என்னும் சொல், சிவனே என்னும் விளிச் சொல்லுடன் இயையும். இங்கு ஒன்றுதல், ஒப்பற்ற பொருளாதலையும், இரண்டறக் கலந்து அத்து விதமாதலையும் உணர்த்தும். 'ஒன்றலா ஒன்றால் உளதாகி' என வரும் சிவஞான போதத்தால் ஒன்று என்பது கடவுளுக்கே உரிய சிறப்புப் பெயராதல் அறியலாம்.

(14) 'திருப்பெருந்துறை' என்பது இங்கு அப்பெயர் கொண்ட தலத்தை மட்டும் குறியாமல், 'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்றபடி, சைவ சமயம் அல்லது சைவ சித்தாந்தம் ஆகிய அருள் நெறிப் பெருந்துறையினைக் குறிப்பதாகக் கொள்வதும் உண்டு. இப்பாடலைக் கொண்ட திருப்பதிகம், திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பெறாமல் தில்லையிலேயே அருளிச் செய்யப் பெற்றதாகக் கொண்டு, 'கோயிற் றிருப்பதிகம்' எனப் பெரியோர்களால் வழங்கப்பட்டு வருவதும், இங்கு நாம் நினைவு கூரத் தக்கது.

(15) 'ஒன்றும் நீ அல்லை' என்னும் தொடர், இறைவன் உயிர்ப்பொருள் உயிரில்பொருள்களில் எல்லாம் கலந்து நிற்பினும், அவற்றினுள் ஒன்றாகாமல் அவற்றை யெல்லாம் கடந்த அதீத நிலையனாய் அப்பாற்பட்டு நிற்பன் என்பதனை உணர்த்திற்று.

(16) 'நீ அன்றி ஒன்று(ம்) இல்லை' என்னும் தொடர், உடலுக்கு உயிர் போல நின்று இறைவன் இயக்கினால் ஒழிய, உயிர்ப்பொருள் உயிரில் பொருளாகிய எவையும், தாமே இயங்கும் ஆற்றல் உடையன அல்லாமையைப் புலப்படுத்திற்று. 'அல்லை' 'இல்லை' என்ற சொற்களின் குறிப்பு மிக நுட்பமானதாகத் திகழ்கின்றது. 'அல்லை ஈது அல்லை ஈது' என மறைகளும் இறைவனை அன்மைச் சொல்லினாலேயே துதிக்கும். 'இன்மை' என்னும் சொல் இல்லாமையை (Non-existence) உணர்த்தாமல், முனைத்து நில்லாமை அல்லது விளங்கித் தோன்றாமையை உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். 'யாவையும் சூனியம் சத்தெதிர்' என்னும் சிவஞான போதவுரை காண்க.

(17) 'ஆர்உன்னை அறியகிற்பார்?' என்றது, உயிர்கள் தம்முடைய சுட்டறிவினால் இறைவனை அறிதல் இயலாது என்பதும், யானையின் துணைகொண்டே யானையின் மீது ஏறவேண்டுவதுபோல, இறைவனை அறிதற்கு அவனுடைய அருளையே துணையாகப் பற்றல் வேண்டும் என்பதும் உணர்த்திற்று. 'தன்னறிவு அதனாற்காணும் தகைமையன் அல்லன் ஈசன்' என்பது சிவப்பிரகாசம்.

சான்றோர் போற்றுரை :

இங்ஙனம் எண்ணி எண்ணி உணருந்தோறும் நுண்ணிய பல பொருள்களை உணர்த்தி நிற்பதனால், இவ்வரிய இனிய இணையற்ற பாடலின் சிறப்பைச் சான்றோர்கள் பலரும் உவந்து போற்றியுள்ளனர். சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோராகிய உமாபதி சிவம்,

பதிபசு பாச முதிரறி வுகளுடன்
ஆறு முன்னர்க் கூறுப் பின்னர்
இருபொருள் நீத்துமற் றொருநால் வகையும்
ஈனமில் ஞாதிரு ஞான ஞேயம் என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி யென்றவற்று
இரண்டா யிரண்டு மொன்றி னென்றாகத்
திரண்டாம் பயனெனுந் திருவருள் தெளியில்,
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
என்றிறை யியற்கை யியம்புதல் தகுமே.

எனத் தாம் இயற்றிய சங்கற்ப நிரா கரணம் என்னும் தத்துவப்பெருநூலில், இத் திருவாசகச் செய்யுளை மேற் கோளாக, இற்றைக்கு 600 ஆண்டு களுக்கு முன்னரே எடுத்துக் காட்டிப் போற்றி யிருத்தல் காணலாம். அவ் வாறே வேதாந்த சித்தாந்த சமரச ஞானப் பெருஞ் செல்வராகிய தாயு மான சுவாமிகள்,

நினைப்பறவே தான்நினைந்தேன்
என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில்
ஆகும்நாள் எந்நாளோ?

சென்றுசென் றணுவாய்த்
தேய்ந்துதேய்ந் தொன்றாகி
நின்றுவிடும் என்றநெறி
நிற்கும்நாள் எந்நாளோ?

என்று தம்முடைய திருப்பாடல்களில் விதந்து வியந்து புகழ்ந்து போற்றியிருத் தலும், இங்கு நாம் உணர்ந்து மகிழ்தற் குரியது.

இங்ஙனம் சான்றோர்கள் எல்லாரும் போற்றி ஓதி மகிழ்ந்திருத்தல் ஒன்றே, திருவாசகத்தின் தன்னிகரற்ற பெருஞ் சிறப்பை உணர்த்துதற்குப் போதிய சான்றாகும். ஆயினும் இத்தகைய சிறந்த திருவாசகத்தையும் ஒரு சிலர் எளிதாக எண்ணிப் பேசுவர். அதனால் திருவாசகத்திற்கு ஓர் இழுக்கும்இல்லை. திருவாசகத்தை ஓதியும் ஒரு சிறிதும் உருக்கம் அடையாத நெஞ்சம் உடைய வர்கள் இருக்க நேருமாயின், அது திரு வாசகத்தின் குறையாகாமல், அவர்க ளின் பண்படாத மன இயல்பினையே உணர்த்துவதாகும் (1). ஏனெனில்,

மலரினும் மென்மை கவிதை; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

—திருக்குறள் தழுவல்

என்பது அறிஞர்கள் அனைவரும் கண் டறிந்த உண்மை (2). திருவாசகத்தினை இராமலிங்கர் சிவப்பிரகாசர் சிவஞான முனிவர் தாயுமானவர் போன்ற, எத் துணையோ பல்லாயிரக் கணக்கான மாபெரும்சான்றோர்களும்அருளாளர்க ளும் போற்றி ஓதி உய்ந்துள்ளனர் என் னும் உண்மையினை, நாம் நூல்கள் வாயிலாக அறிகின்றோம். எனவே, அத் தகைய அருட் பெருஞ் சான்றோர்கள் பலரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி, நாமும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை இடையறாது ஓதி, இறை யருள் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.

(1) "Modern works have to pass before the bar of taste of successive generations; whereas, with classics, which have been through the ordeal, almost the reverse is the case.

Your taste has to pass before the bar of the classics. That is the point. If you differ with a classic, it is you who are wrong, aud not the book............"

—Arnold Bennett,
"Literary Taste, How to Form it."

(2) "The millions are awake enough for physical labour; but only one in a million is awake for effective intellectual exertion, only one of a hundred millions to a poetic rapture or divine life".

—Thereau,
"Where I Lived and What I Lived for."

திருவாசகச் சிறப்பு

உள்ளம் உருக்கி உணர்வைச் சிவமாக்கும்
தெள்ளு தமிழ்த்திரு **வாசகம்**தான் — மெள்ளமிக
நம்மை மலம்கெடுத்து நன்மைஎலாம் எய்துவித்துச்
செம்மையுறு விக்கும் தெளி.

—ஆசிரியர்

விடை தெரியுமா?

1. சிவாலயங்களின் அமைப்பு (பிரஸ்தாரம்) எத்தனை வகைப்படும்? அவற்றின் இயல்பைப் புலப்படுத்துக.

2. விநாயகப் பெருமானின் திருவுருவ அமைப்பினுல் அறிவுறுத்தப் பெறும் தத்துவ நுண் பொருள்கள் சிலவற்றைத் தெளிவுறுத்துக.

3. ''சின் முத்திரை'' என்பது யாது? அதனுல் குறிக்கப் பெறும் நுண் பொருள்கள் யாவை? விவரிக்க.

4. ''உப புராணங்கள்'' என வழங்கப்படுவன எவை எவை ?

5. ''கீதை'' என்னும் பெயரால் வழங்கப்பெறும் நூல்கள் சிலவ்ற்றைக் குறிப்பிடுக.

6. இந்து சமய தத்துவ நூல்களில் ''மாயை'' என்னும் சொல் எவ்வெப் பொருள்களைக் குறித்து வருகின்றது?

7. முருகனின் திருக்கைகளில் உள்ள படைக்கலங்கள் என்னென்ன? அவற்றுற் குறிக்கப் பெறும் இயல்புகள் யாவை ?

8. ''ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி
மகனுய் ஒளித்து வளர......'' எனவரும் திருப்பாவைப் பகுதிக்கு விளக்கப் பெற்றுள்ள சிறப்புரை யாது?

9. ஒரு வைஷ்ணவனுக்கு இன்றியமையாமல் விரும்பத் தக்கனவாக அமைய வேண்டிய இயல்புகள் என்னென்ன?

10. ஆசாரியர்களுக்கும் மேகத்திற்கும் உள்ள ஒப்புமைகள் சிலவற்றை விவரிக்க.

—(விடை மறுபுறம் காண்க).

விடை விளக்கம்

(1) சிவாலயங்களின் அமைப்பு சரீர பிரஸ்தாரம் என்றும், இருதய பிரஸ்தாரம் என்றும் இரு வகைப்படும். சரீர பிரஸ்தாரமாவது, மனித உடலின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது. சிவாலயங்களில் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைந்திருக்கும். அவைகள் மனித உடலின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவைகள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். மற்றொரு வகையில் நோக்கினால், கர்ப்பக் கிருகம் தலையும், அர்த்த மண்டபம் கழுத்தும், மகா மண்டபம் மார்பும் போல விளங்குகின்றன. யாக சாலை நாபியாகவும், கோபுரம் பாதமாகவும் திகழ்கின்றது. உடம்பிலுள்ள வாய் நாக்கு அண்ணுக்கு ஐம்பொறிகள் இருதயம் உயிர் என்பனவற்றைப் போல, சிவாலய அமைப்பிலும் பல பகுதிகள் உள்ளன. சிவாலயம் உடல். கோபுரம் வாய். நந்தி நாக்கு. துவஜ ஸ்தம்பம் அண்ணுக்கு. விளக்குகள் ஐம்பொறிகள். கர்ப்பக் கிருகம் இருதயம். சிவலிங்கம் உயிர். மனித உடல் தோல் இரத்தம் இறைச்சி எலும்பு மச்சை மேதை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களால் இயன்றுள்ளது; அதுபோலவே, சிவாலயங்களும், செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணம், மணல், நீர், காரம் என்னும் எழுவகைப் பொருள்களால் அமைக்கப்படுகின்றன.

இனி, இருதய பிரஸ்தாரம் என்பது, சிவபிரானைப் புறத்தே பூசிப்பது போல, அகத்தே பூசிப்பதற்கு முப்பத்தாறு தத்துவ சொரூபமான இருதய கமல அமைப்பைக் கற்பிப்பது. ஆத்ம தத்துவம் இருபத்து நான்கும் தாமரையின் நாளம். வித்தியா தத்துவம் ஏழும் சுத்த வித்தையும் ஆகிய எட்டும், தாமரை மலரின் எட்டு இதழ்கள். ஈஸ்வரம் சதாசிவம் என்பவை கேசரங்கள். சக்தி தத்துவம் தாமரையின் பொகுட்டு. சிவ தத்துவம் அப் பொகுட்டினுள் காணப்படும் பீஜ வடிவங்கள் என்று, இங்ஙனம் இருதயத்தில் தாமரை வடிவமாய்த் தியானம் செய்து இறைவனை வழிபடும் முறை, இருதய பிரஸ்தாரம் எனப்படும்.

மண்முதல் நாளம்; மலர் வித்தை கலாரூபம்;
எண்ணிய ஈசர் சதாசிவமாம்;—நண்ணில்
கலைஉருவாம்; நாதமாம் சத்தி அதன்கண்ணும்;
நிலை அதிலாம் அச்சிவன்தாள் நேர்.

எனவரும் சிவஞான போத வெண்பாவினால் இதன் இயல்பினை உணர்ந்து கொள்ளலாம்.

(2) விநாயகப் பெருமானின் திருவுருவ அமைப்பு பல தத்துவ நுண் பொருள்களை உள்ளடக்கிக் கொண்டு தெள்ளிதின் விளக்குவதாகத் திகழ்கின்றது. அவை வருமாறு:

(1) ஒப்புயர்வற்றவர் என்பதை விநாயகரென்ற பெயரால் அறிகிறோம்; விநாயகர் தமக்குமேல் ஒருவர் இல்லாதவர்.

(2) ஆண் பெண் அலியல்லாதவர் என்பதை ஒற்றைக் கொம்பு உணர்த்துகின்றது; ஆணென்றால் இருகொம்பு வேண்டும்; பெண்ணென்றால் கொம்பில்லா திருத்தல் வேண்டும்; அலி என்றால் மதமில்லாதிருத்தல் வேண்டும். விநாயகருக்கு ஞானமதே உளதெனச் சைவ நூல் கூறும்.

(3) பரை முதலிய பஞ்ச சத்திகளை உடையவரென்பதை அவரது ஐங்கரங்கள் குறிக்கும். அவ்வைங் கரங்களாலும் ஐந்து மலங்களையும் அழித்தலால் அவைகளைச் சத்தியென்றது.

(4) பேரருளுடையவர் என்பதைத் துதிக்கை உணர்த்தும்; கொடுத்தற்காக எவரிடத்துமில்லாத நீண்ட கரமுடையவராய் இருத்தலால்.

(5) பரந்த நோக்கம் உடையவர் என்பதை அவரது சிறிய கண்கள் குறிக்கும். பரந்த நோக்கம் எங்கும் நோக்கும் நோக்கம். குறுகிய கண் மிகத் தூரமாக நோக்குமென்பதைத் தொலை நோக்கிக் கண்ணாடிகளால் அறியலாம்.

(6) எங்கும் நிறைந்தவர் என்பதை அவருடைய பெருவயிறும், பெருங்காதும் குறிக்கும். பெருவயிறு எல்லா உலகங்களையும் தன்னகத் தடக்கியது. பெருங்காது எந்த உலகத்தி லிருந்து குறையிரந்தாலுங் கேட்கவல்லது.

(7) மாயையைத் தம் விருப்பத்துக்கு ஏற்ப இயக்குபவர் என்பதை அவரது அரவக் கச்சு உணர்த்தும். அரவம் மாயையைக் குறிக்கும்.

(8) என்றும் உள்ள நித்தியர் என்பதை அவருடைய குறுந்தாள் உணர்த்தும். குறுந் தாள்—சிறுதாள், குட்டைக்கால். அதனல் அவருக்குப் பிள்ளையாரென்ற திருநாமமுண்டு. பிள்ளையார், என்றும் பிள்ளையாராதலின் நித்தியரானர்.

(9) இன்ப அன்பு வடிவர் என்பதை அவரது பிரணவமுதம் குறிக்கும். முகம் பிரணவம் போன்றிருத்தலை ஆழ்ந்து நோக்கி யுணரலாம். பிரணவமானது சிவபீஜ சத்தி பீஜாக்கரங்கள் சேர்ந்த எழுத்தாதலாலும், சிவம் இன்பமும் சத்தி அன்பும் ஆதலாலும், பிரணவ முகம் சிவசத்தி சொரூபத்தைக் குறிக்கும் இன்ப அன்பு வடிவாகும்.

(10) வரம்பிலின்பம் உடையவர் என்பதை அவரது பிறைச் சந்திரன் குறிக்கும். சந்திரன் அமுத கலையோடு கூடியதாதலாலும், விநாயகர் திருமுடியில் விளங்குவது ஞானசந்திர கலையாத லாலும், பிறைச் சந்திரன் இன்பந் தரும் பொருளாதலை அறிக.

(11) ஒளி வடிவினர் என்பதை சந்திரன், சூரியன், அக்கினி என்னும் அவரது மூன்று கண்களும், செம்மேனியும் குறிக்கும். சந்திரன் இடக்கண், சூரியன் வலக் கண், அக்கினி நெற்றிக்கண்.

(12) அளவிலாற்றலுடையவர் என்பதை அவரது பாசம், அங்குசம் என்னும் படைகள் குறிக்கும். அவைகள் தமது ஆணை வழி நில்லாதவரைக் கட்டி அடக்கி நிறுத்தும்.

(13) அறியாமை ஆகிய அடக்குபவர் என்பதை அவரது பெருச்சாளி என்னும் வாகனம் உணர்த்தும். மூஷிகத்தைத் தமது திருவடியின் கீழ் வைத்து, அதன் வலியை அழித்து, நிற்றலால், அது துணியப் பெறும். அஞ்ஞானத்தைச் செய்யும் ஆணவமலமானது, முத்தியில் முதல் அழியாது தனது வலி யழிந்து நிற்குமென்ற சிறந்த சைவ சித்தாந்தக் கொள்கையை இது வலியுறுத்தலைக் காண்க.

(3) ''சின் முத்திரை'' என்னும் சொற்றொடர், ஞான அடையாளம் எனப் பொருள் படும். சித்—ஞானம். முத்திரை—அடையாளம். எனவே ஞானப் பொருளின்அடையாளக் குறிப்பாகத் திகழ்வது சின்முத்திரை யெனலாம். தென் முகக் கடவுளாகிய தட்சிணா மூர்த்தி, தம் திருக்கையால் சின் முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கின்றார். வலது கைக் கட்டை விர லும் சுட்டு விரலும் ஒன்றை யொன்று வளைந்து சார்ந்து நிற்க, ஏனைய மூன்று விரல்களும் விலகித் தனித்துச் சேர்ந்து நின்று கொண்டிருக்கும் நிலை 'சின் முத்திரை' யாகும். நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல் என்னும் மூன்றும் முறையே, ஆணவம் மாயை கன்மம் என்னும் மும் மலங்களைக் குறிப்பனவாகும். நடு விரல் நீண்டு முனைந்து நிற்பதனல் ஆணவ மலத்தைக் குறிப்பதாக உள்ளது. அதற்கு அடுத்த விரல் மாயா மலத்தைக் குறிப்பது என்பதனைப் புலப் படுத்தவே, மாயா மல சம்பந்தமான பொன் முதலியவற்றால் இயன்ற மோதிரத்தினை அதன் கண் நாம் அணிந்து கொள்கின்றோம். ஏனைய மலங்களைக் காட்டிலும் அநுபவித்துத் தீர்ப்பத ஞல் விரைவில் அழிந்தொழிந்து போகும் தன்மையது கன்ம மலமாதலின், அது சுண்டு விரலால் குறிக்கப் படுவதாயிற்று. ஆணவ மலம் நெல்லுக்கு உமியும், செம்பிற் களிம்பும் போல, உயிருள்ள அன்றே தொன்று தொட்டு இருந்து வருவது ஆதலின், அது சகச மலம் எனப்படும். ஏனைய மாயா கன்ம மலங்கள் உயிர்க்கு இடையில் வந்து சேர்வனவாதலின் ஆகந்துக மலம் எனப்படும். இவ்வுண்மையினையும், இவ்விரல்களின் வரிசை முறை தெரிவிப்பதாக உள்ளது.

பெருவிரலின் உதவி யின்றி நாம் எதனையும் எடுத்தல் பிடித்தல் முதலியன செய்தல் இயலாது. ஆதலின் அது சின் முத்திரையில் பதியினைக் குறிக்கின்றது. சுட்டு விரல், தன்னியல்பில் ஏனைய மூன்று விரல்களோடு சேர்ந்து பெருவிரலைப் பிரிந்து நிற்கின்றது; அது பசு எனப்படும் உயிரானது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும் மலங்களின் சேர்க்கையால் பதியாகிய கடவுளின் தொடர்பைப் பெறுமல், பிறப்பு இறப்புத் துன்பத்துட் பட்டு உழலுதலை உணர்த்தும். உயிர் சுட்டறிவு ஒன்றே உடையதாகலின், அதனைக் குறிக்கும் விரலும் பொருள்களைச் சுட்டி உணர்த்தும் விரலாகச் சுட்டு விரல் எனப் பெயர் பெற்றமை பொருத்தமாக வுள்ளது.

கட்டை விரலின் அடியில் சுட்டு விரல் சென்று சேர்ந்து படிந்து நிற்பது, முத்தி நிலையில் உயிர்கள் சிவத்தின் திருவடிகளில் சென்று ஒன்றி நிற்றலைப் புலப்படுத்துகின்றது. உயிர்கள் பிறப்பு இறப்புத் துன்பங்களினின்று விடுபடுதல் வேண்டுமாயின், மும்மலங்களின் தொடர்பை விட்டுப் பதிப் பொருளின் திருவடிகளை அடையப் பெறுதல் வேண்டும். அதனை விளக்கவே -சின் முத்திரையில்' சுட்டு விரலானது, தான் சேர்ந்துள்ள ஏனைய மூன்று விரல்களைப் பிரிந்து, கட்டை விரலின் அடியில் சென்று வளைந்து பணிந்து தொட்டுக் கொண்டிருக்கிறது. 'சின் முத்திரை' விளக்கும் இந் நுண் பொருள்களைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துதல் காணலாம்:

பதிபசு பாசம் என்னப்
    படும்ஒரு மூன்றுள், சுத்தம்
பதிநிலை; ஒன்றற் கொன்று
    பயில்வியாப் பியாம்; இன்னும்
பதியொடு பசுக் கலக்கும்
    பண்பும்இன்று என்றுஓர் செங்கைப்
பதிவிரல் அளவிற் சேர்ப்பிற்
    பகர்வற்கு அடிமை செய்வாம். —திருநாகைக் காரோணப் புராணம்.

செம்மலர்நோன் தாள்சேர ஒட்டாமல்
    உயிரைஎலாம் தியக்கம் செய்யும்
அம்மலங்கள் கழீஇ, மிகுநல் அன்பரோடு
    மருவிநீர் அடையும் முத்தி
இம்முறையாம் எனநால்வர்க்கு இருவிரற்சின்
    முத்திரையால் இயம்பி ஆல்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண்நிறீஇ வீற்றிருந்த
    குருபரனை வணக்கம் செய்வாம். —திருவாவடுதுறைப் புராணம்.

(4) உப புராணங்கள் என்பன, புராணங்கள் பதினெட்டாதல் போலப் பதினெட்டாக விளங்கும் எனப் பெரியோர்கள் கூறுவர். கூர்ம புராணம், பிரமாண்ட புராணம் என்பனவற்றில் உப புராணங்களின் பெயர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. குப்தர்களின் காலம் (கி.பி.650—800) முதல் தொட்டே உப புராணங்கள் என்பன நிலவி வருவதாகத் தெரிகின்றது. உப புராணங்களின் பெயர்களை ஒவ்வொரு விதமாகக் குறிப்பிடக் காண்கின்றேம். பின்வருவன கூர்ம புராணம் கூறும் உப புராணங்களாகும்:

1. சனற்குமாரம்
2. நரசிம்மம்
3. ஸ்காந்தம்
4. சிவதருமம்
5. தூருவாசம்
6. நாரதீயம்
7. கபிலம்
8. வாமனம்
9. உசநசம்
10. பிரம்மாண்டம்
11. வாருணம்
12. காளிகம்
13. மகேஸ்வரம்
14. சாம்பவம்
15. சவுரவம்
16. பராசரம்
17. மாரீசம்
18. பார்க்கவம்.

(5) 'கீதை' என்றதும் நாம் அனைவரும் பெரும்பாலும் நினைவு கூர்வது, கண்ணபிரான் அருளிச் செய்த பகவத் கீதையே யாகும். ஆயினும் கீதை என்னும் பெயரால் மற்றும் எத்தனை யோ பல நூல்கள் நிலவி வருவதாகத் தெரிகின்றது. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் வருமாறு:

1. உதத்ய கீதை
2. வாமதேவ கீதை
3. ரிஷப கீதை
4. ஷடாஜ கீதை
5. சம்பக கீதை
6. மங்கி கீதை
7. போத்ய கீதை
8. ஹாரித கீதை
7. விருத்திர கீதை
10. பராசர கீதை
11. ஹம்ஸ கீதை
12. கபில கீதை
13. பிட்சு கீதை
14. தேவி கீதை
15. சிவ கீதை
16. ரிபு கீதை
17. இராம கீதை
18. சூர்ய கீதை
19. வசிஷ்ட கீதை
20. அஷ்டவக்ர கீதை
21. அவதூத கீதை
22. உத்தர கீதை
23. ஈசுவர கீதை
24. பாண்டவ கீதை
25. வியாச கீதை
26. பிரம கீதை
27. உருத்திர கீதை

(6) இந்து சமய தத்துவ நூல்களில் 'மாயை' என்னும் சொல் பலவகைகளில் வெவ் வேறு வகையான பொருள்களைக் குறிக்கும் நிலையில் வழங்கப்பட்டு வருகின்றது. அச்சொல் எவ்விடத்தில் எப்பொருளில் வழங்கப் பட்டுள்ளது என்பதனை நன்கு ஆராய்ந்து உய்த்துணர்ந்து கொள்ளாமையினால், பலர் பெரிதும் குழப்பம் அடைகின்றனர். 'மாயை' என்னும் சொல்லானது, சமய தத்துவ நூல்களில் அவ்வவ்விடங்களுக்கு ஏற்ப வெவ்வேறு பொருள்களைக் குறிப்பதாகத் திகழ்கின்றது. அவற்றுள் சில வருமாறு:

1. சார்பு பொருள் (The dependent being)
2. கனவு (Dream)
3. பொய்த் தோற்றம் (Illusion)
4. இல்லாமை (Non-cxistence)
5. நிலையற்ற தன்மை (Transitoriness)
6. வெளிப்படும் தன்மை (The power manifestation)
7. இறைவனின் வியத்தகு செயல் (The mysterious working of God's will)
8. பிரக்ருதி (The primal matter)
9. அவித்தை (Ignorance, nescience)
10. உண்மையும் பொய்யும் ஆனது (Real as well as unreal)
11. உண்மையும் பொய்யும் ஆகியவற்றினின்று வேறுபட்டது (Different from real and unreal)

12. 'மா' என்பது ஒடுங்குதல், 'யா' என்பது வருதல்; ஆகலின், எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்று தோன்றுதற்கும் காரணமாய் நின்றது 'மாயை' எனப்படும்; ஆகலான் ஒன்றற் கொன்று நுண்ணிதிற் செல்லும் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாது, அதனை மாயை என்றலே பொருத்தம் என்பர் மாதவச் சிவஞான யோகிகள்.

(7) முருகப் பெருமானை நினைக்கும் போதெல்லாம், அவனுக்கே உரிய படையாகிய வேலாயுதத்தை மட்டுமே நினைவு கூர்வது நம்மனோர் வழக்கம். வேற்படையானது அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தை வழங்கும் தன்மையுடையது. ஆதலின் அதனை ஞானவேல் என்றும், வெற்றி வேல் என்றும் பிறவாறும் பெரியோர்கள் சிறப்பித்துக் கூறுவர். முருகனுக்கு வேற்

படை மட்டுமே யல்லாமல், வேறு பிற படைகளும் உண்டு என நூல்கள் கூறுகின்றன. முருகன் வீரர்களுக்கெல்லாம் வீரன்; வீரத்தைப் பெற விரும்புவோர் அனைவராலும் வழிபடத் தக்கவன். கண்ணபிரான் கீதையில், ''வீரர்களுக்குள் நான் கந்தனாக விளங்குகின்றேன்'' என்று கூறி யிருப்பதும் இங்குக் கருதத் தக்கது.

முருகன் தன் பன்னிரண்டு திருக்கைகளிலும் பன்னிரண்டு படைகளை ஏந்தியிருக்கின்றான். உருத்திரர் பதினொருவரும் அருட்சத்தியும் ஆகிய பன்னிருவர், பன்னிரண்டு படைகளாக முருகனின் திருக்கைகளில் விளங்குகின்றனர். அப்படைகள் ஒவ்வொன்றும் முருகனின் ஒவ்வொரு சிறந்த இயல்பினைக் குறிக்கின்றது.

1. தோமரம்—சுத்த தத்துவங்களைப் படைக்கும் ஆற்றல்.
2. துவசம் (கொடி)—பிரபஞ்ச வெற்றிப்பாடு.
3. வாள்—பிறப்பு இறப்பு அறுக்கும் பெருமை.
4. வச்சிராயுதம்
5. பிராசம் (ஈட்டி) }—ஒருவராலும் வெல்லப்படாத உயர்வு.
6. கோதண்டம் (வில்)
7. அம்பு (கணை) }—உயிர்களின் மூலமல ஒழிப்பு.
8. அங்குசம்—முக்குணங்களையும் இயக்குதல்.
9. கண்டை—பரநாதத்தை நடாத்தும் பண்பு.
10. கமலம்—உலகைத் தோற்றி ஒடுக்கும் உரன்.
11. பரசு (மழு)—உயிர்களின் இடர்களை களைந்தொழிக்கும் இயல்பு.
12. வேல்—அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தை யருளும் தன்மை.

(8) தசரதச் சக்கரவர்த்தி ஆகிய ஒருவன் சாதன அனுஷ்டானங்களைப் பண்ணி, மாணிக்கம் போல நாலு பிள்ளைகளைப் பெற்றான். வசுதேவர் தேவகி நந்தகோபர் யசோதை என்னும் நால்வரும் சேர்ந்து தவம் புரிந்து கண்ணபிரானாகிய ஒரு மகனைப் பெற்றெடுத்தனர். எல்லா உலகங்களுக்கும் நியாமகன் ஆனவனையும் கூட நியமிக்கும் அவளாய் நாட்டில் தனக்கு ஒப்பற்று இருப்பவள் தேவகி. ஆதலின் அவள் 'ஒருத்தி' எனச் சிறப்பிக்கப் பெற்றனள். அனைத்துலகங்களுக்கும் தந்தையாக இருப்பவன் ஒருத்திக்குப் புதல்வன் ஆவதே என்ற வியப்பை 'மகன்' எனும் சொல் புலப்படுத்துகின்றது. தாய் தந்தையர் ஏவியதைச் செய்வது புதல்வர்க்குக் கடமை. அம்முறையில் தேவகியின் குறிப்பறிந்து தன்னுடைய நான்கு கைகளை இரண்டாகக் குறைத்தும், அவற்றில் பற்றி யிருந்த சங்கு சக்கரங்களை மறைத்தும், எளிய குழந்தை போல விளங்கிய சிறப்பையும் 'மகன்' என்ற சொல் உணர்த்துகின்றது. சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன் பாலப் பருவத்தனாய்ப் பக்குவனான பின்னரே தந்தையின் கட்டளையைக் கடைப் பிடித்து நின்றான். ஆனால் கண்ணபிரானோ பிறந்த அளவிலேயே சங்கு சக்கரங்களையும் தோள்களையும் மறைத்துத் தாயின் கருத்தை நிறைவேற்றினான். இவ்வருமைப் பாட்டினை 'பிறந்து' என்னும் சொல் குறிக்கின்றது. வினை வயத்தால் உயிர்கள் படுவனவற்றை யெல்லாம், அருள் வயத்தால் கண்ணபிரான் பட்டான் என்றபடி! ஏனைய மனிதர்களைப் போலப் பத்து மாதம் அல்லாமல், அவன் பன்னிரண்டு மாதம் வயிற்றிலே இருந்து கருணையால் பிறந்தான் என்பதும் உணர்த்தியவாறு! காலதத்துவம் கடந்த அவன் காலத்துக்கு உட்பட்டுப் பிறந்தருளினான். அவன் பிறந்தருளிய அவ்விரவை ஒக்கும் இரவு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. ஆதலின் 'ஓர் இரவு' என்றார். தேவகி இவனை மகவாகப் பெறவேண்டும் என்று ஆச்ரயித்தாள். ஆதலின் அவளுக்கு அவதார ரஸத்தைக் கொடுத்தான்; யசோதைக்கு லீலா ரஸத்தை அநு

பவிப்பித்தான். ஓர் அவதாரத்திலேயே யாதவ சஜாதியனுமாய் கோப ஜாதியனும் ஆனான். தேவகியின்பாற் பிறந்து பிறப்பில் புரையில்லாமை போலவே, யசோதையின்பால் வளர்ந்த இடத்திலும் புரையற்று இருந்தான். இதனை 'ஒருத்தி மகனாய் வளர்ந்தான்' என்பது உணர்த்திற்று. கம்ஸனுடைய தீய விஷப் பார்வை படாதபடி 'ஒளித்து வளர' நாட்டார் செய்வன செய்யப் பெறாமல் கள்ளர் பட்டது தான் பட்டான். ''அத்தத்தின் பத்தாம் நாள்'' என்ற பெரியாழ்வார் மகள் ஆனதனால், தேவகி யசோதை என்று பேர் சொல்லாமல் 'ஒருத்தி' என்று குறிப்பாற் கூறியபடி. பெற்றெடுத்த தேவகியைக் காட்டிலும், வளர்த்துப் போற்றிய யசோதை சிறப்புடையவள் ஆயினாள். எங்ஙனமெனில் முதலில்கோயில் கட்டியவர்களைக் காட்டிலும் பின்னர் அது பழுதுற்றபோது திருப்பணி செய்து போற்றிப் பாதுகாப்பவரே சிறப்பும் புண்ணியமும் உடையவராவர், அதுபோல என்பது.

''திருப்ரதிஷ்டை பண்ணினவர்களிலுங் காட்டில்
ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களே முக்யர்''

இப்பாடலில் கண்ணபிரான் இரவில் பிறந்ததும் கம்ஸனின் பொருட்டு ஒளித்து வளர்ந்ததுமாகிய செய்திகள் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருஅவதாரம் பற்றிய வரலாறு மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவி யிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் ஒப்புமை உடையதாக விளங்குகின்றது. இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்ஸன் பொருட்டு ஒளித்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைந்து வளர்க்கப் பெற்றார். கம்ஸனைப் போலவே ஏரோது அரசனும் தன் உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்ஸனுக்குக் கண்ணபிரான் அவதாரம் பற்றிய அறிவிப்பு முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான்சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்தில் பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good Shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரான் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாக விளங்கினான். இயேசு மலைச் சொற்பொழிவு (Sermon on the Mount) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த் தட்டில் கீதை உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.*

(9) ஒரு சிறந்த ஸ்ரீ வைஷ்ணவனுக்கு இன்றியமையாமல் இருக்க வேண்டிய இயல்புகள் பத்து ஆகும். (1) இறைவனைத் தவிர்ந்த வேறு புறப் பொருள்களில் கொண்டுள்ள பற்றுக்கள் முழுவதையும் அவற்றின் வாசனையும் இல்லாதபடி விடுத்தொழித்தல். (2) இறைவன் ஒருவனையே அடைக்கலமும் புகலிடமுமாகச் சரணாகதி அடைந்து பற்றிக் கொள்ளுதல். (3) இறைவனருளால் கிடைத்தற்கரிய பேறு தப்பாமல் கிடைக்கும் என்று உறுதியாகத் துணிந்திருத்தல். (4) இறைவன் அருளைப் பெறுதலில் மிக்க வேட்கையும் விரைவும் உடையவனாதல். (5) இவ்வுலகில் உடம்போடு கூடி வாழ்ந்துவரும் நாட்களில் இறைவன் விரும்பி எழுந்தருளும் திவ்விய தேசங்களுக்குச் சென்று, இறைவனுடைய கல்யாண குணங்களை அறிந்து அநுபவித்து அவனுக்குத் தொண்டு செய்தலிலேயே வாழ்நாளைக் கழித்தல். (6) இத்தகைய சிறந்த இயல்புகளை உடைய ஸ்ரீவைஷ்ணவப் பெருமக்களை அறிந்து, அவர்களின் பெருமையினைப் போற்றி வியந்து கொண்

---

* "The birth stories of Buddha, Krishna and Jesus have certain striking resemblances suggestive of mutual borrowing.

The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have lead some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study.

The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion.........".

—*Dr. S. Radhakrishnan.*

டாடி மகிழ்ந்திருத்தல். (7) பிற மந்திரங்களின் அருகே மறந்தும் செல்லாமல் திருமந்திரத்திலும் அதன் பொருளை விளக்குகின்ற த்வயத்திலும் ஈடுபட்டு ஒழுகுதல். (8) தன்னுடைய ஆசாரியனிடத்தில் அளவில்லாத பக்தியும் பிரேமமும் உடையவனாக விளங்குதல். (9) ஆசாரியனிடத்திலும் இறைவனிடத்திலும் அவர்கள் செய்து வரும் பெரும் உதவிகளுக்காக இடையறாது நன்றி உணர்வு கொண்டவனாகத் திகழ்தல். (10) மெய்யுணர்வு பற்றின்மை அமைதி உடைமை என்னும் பண்புகள் உடைய மிக மேலான நல்லியல்பு வாய்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்களோடு நட்பும் தொடர்பும் கொண்டு வாழ்ந்து வருதல். இப்பத்துக் குணங்களும் ஒரு சிறந்த ஸ்ரீ வைஷ்ணவனுக்கு மிக மிக இன்றியமையாதனவாகும்.

(10) ஆசாரியர்களை மேகத்திற்கு ஒப்பிட்டுச் சொல்வது தொன்று தொட்டு வழங்கி வரும் ஒரு பெரும் மரபு ஆகும். மாணிக்கவாசகர் தம்மைத் திருப்பெருந்துறையில் குரு வடிவில் வந்து ஆட்கொண்டருளிய இறைவனை, 'அண்டத்து அரும்பெறல் மேகன்' என்றே சிறப்பித்து உருவகம் செய்து போற்றியுள்ளார். மாணிக்க வாசகராகிய ஞானாசாரியரைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மேகமாக உருவகித்துப் புகழ்ந்து பின்வருமாறு துதிக்கின்றார்.

''கங்கை நதியானது தலையிற் சேர்ந்த சிவபிரானாகிய கருணைக் கடலில், மாணிக்கவாசகர் ஆகிய மேகமானது முகந்து பொழிந்த அருள் மழையினால், திருவாசகம் என்னும் ஞான வெள்ளமானது பெருக்கெடுத்தது. அவ்வெள்ளம் ஓதுபவர்களின் மனமாகிய குளத்திற் புகுந்து, நாவெனும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையில் சென்று, உள்ளமாகிய நிலத்தில் ஊன்றப் பெற்ற அன்பு எனும் விதையினின்று, சிவமாகிய மென் முளை தோன்றி வளர்ந்து, கருணையாகிய பூ மலர்ந்து, முத்தியாகிய பயன் விளையும்படி செய்தது'' எனவரும் அவர்தம் நால்வர் நான்மணி மாலைச் செய்யுளில், மாணிக்க வாசகரை மேகமாக உருவகம் செய்திருத்தல் காணலாம்.

(அ) மேகமானது, கடல் நீரை முகந்து அதன் உவர்ப்பை நீக்கி மிக்க சுவையுடையதாகும் படி செய்து, உலக உயிர்களுக்குப் பயன்படும்படி பெய்கின்றது. அதுபோல ஆசாரியர்கள் வேதாகமங்களாகிய கடலினின்று ஞானப் பொருள்களை முகந்து, விளங்காதனவற்றையும் விளக்கி, எல்லோர்க்கும் சுவையும் பயனும் விளையும்படி பரப்பி யருளுகின்றனர்.

(ஆ) மேகமானது, உலக நலத்தின் பொருட்டுப் பல இடங்களிலும் சென்று மழையைப் பொழிந்து நலம் விளைக்கும்; அதுபோல, ஆசாரியர்களும் பல இடங்களுக்கும் எழுந்தருளிச் சென்று, தமது ஞானோபதேசங்களைச் செய்து உலக மக்களைத் திருத்தி உய்யக்கொள்வர்.

(இ) மேகமானது, மேடு பள்ளங்களாகிய வேறுபாட்டை நோக்காமல் எல்லாவிடத்திலும் ஒக்கப் பெய்யும்; அதுபோல, ஞானாசிரியர்களும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள் நோக்காமல், மக்கள் அனைவரையும் ஒக்க நோக்கி இரக்கம் காட்டி ஆட்கொண்டு அருள் புரிவர்.

(ஈ) மேகமானது, பருவம் நோக்கி, அவ்வக் காலங்களில் மழையைப் பொழியும்; அதுபோல, ஆசாரியர்களும் மாணவர்களின் பக்குவம் அறிந்து அவரவர்களின் நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப அருள் புரிந்து ஆட்கொள்வர்.

(உ) மேகமானது, உரிய காலங்களில் பெய்யா தொழியுமாயின், உலகில் பஞ்சமும், பசியும், பிணியும் உண்டாகும்; அதுபோல, ஆசாரியர்கள் வழிகாட்டி அருளுபதேசம் புரிய முற்படாவிடில், உலக மக்கள்பால் அறியாமையும் மயக்கமும் தீயொழுக்கமும் பிறவும் ஆகிய குற்றங்கள் மலிந்து கெட நேரும்.

(ஊ) மேகமானது, கைம்மாறு கருதாமல் நிரம்பப் பொழியும்; அதுபோல, ஆசாரியர்களும் தமக்கு ஒரு கைம்மாறும் கருதாமல் உலக நலம் கருதியே தமது ஞானச்செய்திகளை இடைவிடாமல் பரப்பிக் கொண்டிருப்பர்.

(எ) மேகம் சில சமயங்களில் சிறு தூறல்கள் மட்டும் இட்டு நின்று விடும்; மற்றும் சில சமயங்களிலோ போதும் போதும் என்னும்படி நிரம்பப் பொழியும்; அவ்வாறே ஆசாரியர்களும் சில சமயங்களில் மந்திரோபதேசம் என்று சில எழுத்துக்களை மாத்திரம் உபதேசிப்பர்; சில சமயங்களில் வேதாகமக் கலைகள் அனைத்தின் உட்பொருள்களையும் மிக விரிவாக எடுத்துப் பெரிதும் விளக்கி யருள்வர்.

(ஏ) மேகம் பெய்கின்ற மழை சில சமயங்களில் வீணுவதும் உண்டு; அங்ஙனமின்றிச் சிப்பி களின் வாயில் விழுந்து முத்துக்களாக மாறி மிக வுயர்ந்த அணிகலன்களுக்குப் பயன் படுவதும் உண்டு; அம் முறையில் ஆசாரியரின் அரிய அருள் உபதேசங்கள் எளிய மக்களால் போற்றப் பெருமல் புறக்கணிக்கப்படுவதும் உண்டு; அங்ஙனமின்றி மிகச்சிறந்த பக்குவான்மாக்கள் பலரை உருவாக்கி, அவர்களின் வாயிலாக உலகிற்குப் பெருந் தொண்டு ஆற்றுவிப்பதும் உண்டு.

(ஐ) உலகம் வாழ்வதற்கு மேகம் பொழியும் மழைநீர் இன்றியமையாதது; அதுபோல, உலக மக்களின் ஈடேற்றத்திற்கு ஆசாரியர்களின் ஞானேபதேசம் மிக மிக இன்றியமையாத தாகத் திகழ்கின்றது.

—ஆசிரியர்.



சென்னை திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் கோயில் கல்யாண மண்டபத்தில், இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலையத்தினை, நமது தமிழக முதலமைச்சர் திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைத்தல் — *(6—10—1966)*.

ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

(திரு. கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல். திருநெல்வேலி)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(98) ஆட்கொண்டம்மாள் (99) அம்மங்கியம்மாள் (100) முடும்பையம்பாள் (101) பருத்திக் கொல்லையம்மாள்) (102) உக்கலம்மாள் (103) சொட்டையம்மாள் (104) ஆசூரிப்பெருமாள் (105) கிடாம்பிப் பெருமாள் (106) அம்மங்கிப் பெருமாள் (107) முனிப் பெருமாள் (108) பட்டிஎப் பெருமாள் (109) திருமலை நல்லான் (110) எம்பார் (111) காராஞ்சி ஸோமயாஜி யார் (112) பெரிய கோயில் வள்ளலார் (113) அலங்கார் வேங்கடவர் (114) திருக்குருகைப் பிரான் பிள்ளான் (115) ஆற்காடுப் பிள்ளான் (116) கோமண்டூர்ப் பிள்ளான் (117) இராமா நுசப் பிள்ளான் (118) திருநகரிப் பிள்ளான் (119) கோமடத்தையன் (120) வைத்தமா நிதிச் சிறியப்பன் (121)சிறுவையர் (122) பெருமையர் (123)அணியரங்கத்தமுதனுர் (124)கருந்தேவர் (125) கொமாண்டூர் இளையவல்லி (126) நம்பி (127) கருந்தேவர் (128) ஐம்பத்திருவர் (129) எம்பெருமானுர் செல்வப் பிள்ளை சத்தா முதலிகள் (பூணூல் அணியாத அடியார்) (130) குலசேகரப் பெருமாள் (131) பட்டர்பிரான் தாஸர் (132) பகைவில்லி தாசர் (133) ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாஸர் (134) ஸ்ரீ நாராயண தாஸர் (135) ஸ்ரீ கோவர்த்தன தாஸர் (136) திருவழுதி வளநாடு தாஸர் (137) ஸ்ரீ ராமாநுச தாஸர் (138) பிள்ளையுறங்கா வில்லி தாஸர் (139) வண்டர் (140) சுண்டர் (141) இராமாநுச வேலைக்காரர் (142) திருவரங்க தாஸர் (143) திருமாலிருஞ்சோலை தாஸர் (144) வானமாமலை தாஸர் (142, 143, 144 இவர் நத்தத்து முதலிகளெனப்படுவர்) கொங்கில் முதலிகள் (145) திருவேங்கட தாஸர் (146) அழகியமணவாள தாஸர் (147) பேரருளாள தாஸர் (மழமலைக்கூர் நத்தத்து முதலிகள்) (148) யதிவர சூடாமணி தாஸர் (149) எதிராஜ தாஸர் இளையாழ்வார் தாஸர் (150) பாண்டி நாட்டு முதலிகள் (151) மகிழலங்கார தாஸர் (152) ஸ்ரீ சடகோப தாஸர் (153) பிள்ளை திருவாய்மொழி தாஸர் ஸ்தானத்தாரில் (154) சேனுநாதப்பிரம்மராயர் (155) வீரசுந்தர பிரம்ம ராயர் (156) ஜகந்நாத பிரம்ம ராயர் (157) வீரராகவ ப்ரம்ம ராயர் (158) பிள்ளை தேவராஜர் (159) பிள்ளை யுறந்தையுடையார் (160) திருமஞ்சன மெடுக்கும் தூயமுனிவேழம் (161) ஸ்ரீ பண்டாரங்காவல் திருவரங்கத்து மாளிகையார் (162) ஆண்டவர் (163) அரியவர் அம்மைமார்களில் (164) திருவநந்தபுரத்தம்மை (165) திருவாட்டாற்றம்மை (166) திருவண் பரிசாரத்தம்மை (167) மன்னனுர் கோவில் பேரேறம்மை (168) திருக்கண்ணபுரத் தம்மை (169) திருநறையூரம்மை (170) திருப்பதி ஸ்ரீகார்யம் செய்யுமம்மை (171) ஆண்டாளம்மை (172) நாயகத் தேவியார் (173) தூய பெருந்தேவியார் (174) பெரிய பெருந்தேவியார் (175) சிறிய பெருந்தேவியார் (176) பெரும்பூதூர்த் திருவரங்கம் (177) திருக்குடந்தை துய்ய வாயிரம் (178) கொங்கில் பிராட்டியார் (179) அத்துழாயம்மை (180) அம்மங்கியம்மை (181) கூரத்தாழ்வான் (182) தேவகி பிராட்டியார் (183) எதிராஜ வல்லியார் (184) பங்கயச் செல்வியார் (185) பொன்னுச்சியார் (186) இன்னிளவஞ்சியார் (187) சூடிக்கொடுத்தாள் (188) திருப்பாவை பாடினுள் என்னுமிவர்.

உடையவர் நியமித்த எழுபத்து நான்கு சிம்மாஸனுதிபதிகளாவார் (ஆசார்ய புருஷர்களா வார்)? வருமாறு: (1) ஸ்ரீ ஆளவந்தாரின் கொள்ளுப் பேரனுன என்னுச்சான் (2) பெரிய நம்பி குமாரர் புண்டரீகர் (3) திருக்கோட்டியூர் நம்பி குமாரர் தெற்காழ்வான் (4) திருமாலையாண் டான் குமாரர் சுந்தரத் தோளுடையார் (5) பெரிய திருமலை நம்பி குமாரர் இராமாநுசம் பிள்ளையும் திருமலை நம்பியும் (6) கூரத்தாழ்வான் குமாரர் பட்டரும் சீராமப் பிள்ளையும் (7) முதலியாண்டான் குமாரர் கந்தாடையாண்டான் (8) நடுவிலாழ்வான் (9) கோமடத்தாழ்வான்

(10) திருக்கோவலூ ராழ்வான் (11) திருமோகூராழ்வான் (12) பிள்ளைப் பிள்ளையாழ்வான் (13) நடாதூ ராழ்வான் (14) எங்களாழ்வான் (15) அனந்தாழ்வான் (16) மிளகாழ்வான் (17) நெய்யுண்டாழ்வான் (18) சேட்லூர்ச் சிறியாழ்வான் (19) வேதாந்தி யாழ்வான் (20) கோயி லாழ்வான் (21) உக்கலாழ்வான் (22) அரணபுரத்தாழ்வான் (23) எம்பார் (24) கிடாம்பியாச்சான் (25) கனியனூர்ச் சிறியாச்சான் (26) ஈச்சம்பாடியாச்சான் (27) கொங்கிலாச்சான் (28) ஈச்சம்பாடி ஜீயர் (29) திருமலை நல்லான் (30) சட்டம்பள்ளி ஜீயர் (33) திருநகரிப் பிள்ளை (34) காராஞ்சி ஸோமாயாசியார் (35) அலங்கார வேங்கடவர் (36) நம்பி கருந்தேவர் (37) சிறுபள்ளி தேவராஜ பட்டர் (38) பிள்ளையுறந்தையுடையார் (39) திருக்குகைப்பிரான் பிள்ளான் (40) பெரிய கோயில் வள்ளலார் (41) திருக்கண்ணபுரத்தரையர் (42) ஆசூரிப் பெருமாள் (43) முனிப் பெருமாள் (44) அம்மங்கிப் பெருமாள் (45) மாருதிப் பெரியாண்டான் (46) மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான் (47) சோமாயாஜி யாண் டான் (48) சீயராண்டான் (49) ஈச்வராண்டான் (50) ஈயுண்ணிப் பிள்ளையாண்டான் (51) பெரியாண்டான் (52) சிறியாண்டான் (53) குறிஞ்சிபுரச் சிறியாண்டான் (54) அம்மங்கி யாண் டான் (55) ஆளவந்தாராண்டான் (56) அருளாளப் பெருமாள் எம்பெருமானார் (57) தொண் டனூர் நம்பி (5,8) மருதூர் நம்பி (59) மழுலூர் நம்பி (60) திருக்குறுங்குடி நம்பி (61) குரவை நம்பி (62) முடும்பை நம்பி (63) வடுக நம்பி (64) வங்கிபுரத்து நம்பி (65) ஸ்ரீ பராங்குச நம்பி (66) அம்மங்கியம்மாள் (67) பருத்திக்கொல்லையம்மாள் (68) உக்கலம்மாள் (69) சொட் டையம்மாள் (70) முடும்பையம்மாள் (71) கோமாண்டூர்ப்பிள்ளை (72) கோமாண்டூர் இளைய வல்லி (73) கிடாம்பிப் பெருமாள் (74) ஆற்காட்டுப் பிள்ளான்.

இம்முதலிகள் சிம்மாஸனாதிகளுக்கு ஆசார்யர்கள் தவிர எழுநூறு உத்தம ஆச்ரமிகளும் எண்ணற்ற சாத்தாத அடியார்களாலும் பன்னீராயிரம் ஏகாங்கிகளாலும் ஐந்நூறு கொற்றி யம்மைகளாலும் பல்வேறு அரசர்களாலும் போற்றப் பட்டவராய் உடையவர் ஸ்ரீ ரங்க நாதனை மங்களாசாஸனம் செய்து கொண்டு அரங்கநகரப்பன் கைங்கர்யங்களை நடத்திக் கொண்டு போந்தார். இவர்களிலே கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் நடாதூ ராழ்வானும் உடை யவருக்குப் பட்டவர்க்குமும் ஸ்ரீ பாஷ்யத்துக்கு உசாத்துணையாயுமாயிருப்பார்கள்; அருளாளப் பெருமாளெம் பெருமானார் திருவாராதனஞ் செய்தருளுவர்; கிடாம்பிப் பெருமாளும் கிடாம்பி யாச்சானும் திருமடைப் பள்ளி கைங்கர்யத்துக்குக் கடவராயிருப்பர்; வடுக நம்பி எண்ணெய்க் காப்பு சாத்தியருள்வர்; கோமடத்துச் சிறியாழ்வான் கலசப்பானையும் திருவடி நிலையுமெடுப்பர்; பிள்ளையுறங்காவில்லி தாஸர் கருவூலத்தை நோக்கிக் கொள்வர்; அம்மங்கி பாலமுது காய்ச்சுவர்; உக்கலாழ்வான் பிரஸாதகலமெடுப்பர்; உக்கலம்மாள் திருவாலவட்டம் பரிமாறுவர்; மாருதிப் பெரியாண்டான் திருக்கைச் செம்பு பிடிப்பர்; மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான் மடத் துக்கு அமுதுபடி; பருப்பமுது, பாலமுது, நெய்யமுது முதலியவை தட்டின்றி நடத்திப் போரு வர்; துய்ய முனிவேழம் திருமஞ்சனமெடுப்பர்; திருவரங்க மாளிகையார் ஸ்ரீ பண்டாரம் நோக் குவர்; வண்டரும் சுண்டரும் கைக்காயிரம் பொன்னுக்கு ராஜ ஸேவை பண்ணி மடத்துக்குத் திருக்கை வழக்காக்கிப் போவர்; ராமாநுஜ வேலைக்காரர் திருமேனி காவலாயிருப்பர். அகளங்க நாட்டாழ்வான் எதிர் வாதியரைக் களையெடுத்து நிற்பர்.

இவர்களில் வடுக நம்பி உடையவர் திருவடிகளிலே மிக அந்தரங்கமாய் அவர் திருவடிகளே அடையும் வழி, அடைய வேண்டும் பயன் என்று நம்பிக்கை கொண்டவராய் அத்திருவடிகளையே தமக்குத் திருவாராதனப் பெருமாளோடு உடையவர் திருவடிகளையும் ஒன்றாக எழுந்தருளுவித்துக் கொண்டு போனார். இதனைக் கண்ட உடையவர் தம் திருவடிகள் பெருமாளோடு எழுந்தருளப் பண்ணியிருந்தமைக்குப் பதறி வடுக நம்பியை நோக்கி 'வடுகா இதென்ன காரியம் செய்தாய்?' என்று வினவ அவரும் ''உம்முடைய தேவரிற் காட்டில் எம்முடைய தேவருக்கு வந்த குறை என்னவோ'' என்று பெருமிதத்தோடு விடையிறுத்தார். உடையவரோடு அரங்கனை ஸேவிக்கச் செல்லுங்காலத்தும் வடுக நம்பி உடையவரது திருமேனியையே ஸேவித்துக் கொண்டு போவர். ஒருநாள் பெருமாளை நோக்காது தம்மையே ஸேவித்து நிற்கும் வடுக நம்பியை நோக்கி உடைய வர் ''வடுகா பெரிய பெருமாள் திருக்கண்ணழகைப் பாராய்'' என்னலும் வடுக நம்பியும்

அரங்கன் திருக்கண்களை நோக்கி உடனே உடையவர் திருக்கண்களையும் நோக்கிக் கொண்டே 'என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று விண்ணப்பிக்க உடையவரும் அவருடைய குரு பக்தியின் உயரெல்லை கண்டு வியப்புற்றார்.

எம்பெருமானார் அமுது செய்தருளிய மிச்சில் கொடுக்கப் பட்டால் அதை இருகரங்களாலும் ஏற்று அருந்திக் கைகளைத் தம் தலையிலே தடவிப்போவர் வடுக நம்பி. உடையவர் இதைக் கவனித்து ''வடுகா! கையைக் கழுவிக் கொள்'' என நியமித்தார். மறுநாள் பிரஸாதம் கிடைத்ததை அருந்தி வடுக நம்பி தம் கைகளை நீரால் விளக்கிக் கொண்டார். உடையவர் என் செய்தாய் வடுகா எனக்கேட்க அவரும் நேற்று தேவரீர் அருளிச் செய்தபடி செய்தேன் என்ன, உடையவரும் 'வடுகரே! உமக்கு நாம் தோற்றோம் காணும்' என்றருளிச் செய்தார். நம்பி உடையவருக்குப் பால் காய்ச்சுகையில் பெருமாள் திரு வீதியிலே எழுந்தருள உடையவர் புறப் பட்டு வடுகா பெருமாள் சேவிக்க வாரும் என்ன, நம்பியும் உம்முடைய பெருமாளை சேவிக்க வந்தால், அடியேனுடைய பெருமாளுக்குக் காயா நிற்கும் பாலமுது பொங்கிப் போகும் என்று சொல்லிப் போக மறுத்து விட்டார். நம்பி அகத்தே பூர்வ பந்துக்கள் சிலர் வந்து தங்கிப் போக அவர்கள் சென்றதும் வடுக நம்பி தம் அகத்தையெல்லாம் மெழுகிச் சுத்தி பண்ணி, அப்பந்துகள் தொட்டிருந்த பாண்டங்களை யெல்லாம் உடைத்தெறிந்து இதற்கு கழுவாய் யாதென்று வினவி முதலியாண்டான் திருமாளிகைக் கொல்லையில் கழித்துக் கிடந்த பாண்டங்களைத் தமக்கு உப யோகமாகக் கொண்டார். உடையவர் ஸ்ரீ பாத தீர்த்தமல்லது வேறொருவர் ஸ்ரீ பாத தீர்த்தம் கொள்ளார் வடுக நம்பி. உடையவர் திருவடிகளையே திருவாராதனமாகக் கொண்டு வாழ்ந்து தம் சரம தசையிலும் தம் பந்துகளுக்கு அவற்றைத் தஞ்சமாகக் காட்டிக் கொடுத்து ''இது மிகவும் சீர்த்த தனம். எவ்வளவு வருந்தியும் இவற்றைப் பேணிப் போருங்கோள்'' என்று உபதேசம் செய்தவர் வடுக நம்பி. ஆசார்ய பக்தி பராகாஷ்டை (உச்ச நிலை)யின் ஒருசின்னமாக அவர் திகழ்ந்தார்.

—தொடரும்.

செய்திச் சுருக்கம்

திருப்பணித் துவக்க விழா: திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் திருப்பணி, மத்திய அரசாங்க பெட்ரோலியம் அமைச்சர் கனம். திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள் தலைமையில், நமது தமிழக முதலமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அது போது, நமது அறநிலைய ஆணையர் திரு. எம்.எஸ். சாரங்க பாணி முதலியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். ஷை தேவஸ்தானத்தின் தலைமை அறங்காவலர் திரு. ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் வரவேற்புரை அறிக்கை வாசித் தார்கள். சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம், பி.ஏ.,பி.எல். அவர்கள் நன்றி யுரை நவின்றார்கள் (13-11-66). திருப்பணித் துவக்க விழா மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் 'டாக்டர் இராதாகிருஷ்ணன் நூலகத்தில்' செங்கை மாவட்டம் நூலகத் தலைவர் திரு. டி. புருஷோத்தமம் அவர்கள் தலைமை யில், தமிழக முதலமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் திருவுருவப் படம், அறநிலைய ஆணையர் திரு, எம்.எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். கணபதியாப் பிள்ளை அவர்கள், அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார்கள். இவ்விழாவுக்குப் பெருமக்கள் பலர் வந்திருந்து சிறப்பித்து மகிழ்ந்தனர் (13-11-66).

"களேபரம்"

நாம் பேசும்போதும் எழுதும்போதும் பல சொற்களை வழங்குகின்றோம். ஆயினும், அவற்றில் ஒரு சில சொற்களுக்குக்கூட உண்மையான பொருள் இதுவென்று நமக்குத் தெரிவதில்லை. தொழில் செய்வோன் ஒருவன் தன் தொழிற்குப்பயன்படும் கருவிகளின் பல திற அமைப்புக்களையும் நன்குணர்ந்து கொண்டாலன்றி அவற்றினைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டு நலம் பெறுதல் இயலாதவாறு போல, மக்கள் தாங்கள் வழங்கும் சொற்களின் பலதிற அமைப்புக்களையும் நுட்பங்களையும் உணர்ந்து வழங்காமற் போவராயின், அதனால் அவர்களுக்கு விளையும் நலமும் ஓரளவு புரைபடுதல் திண்ணம். அதுபற்றியே,

> திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும்
> பொருளும் அதனினூங் கில்.

எனத் திருவள்ளுவர் கூறினர் போலும்! சொற்களின் அமைப்புகள் பலவற்றையும் ஆராய்ந்துணர்ந்த பேரறிஞர்கள் பலர், சொற்கள் தமக்கென ஒவ்வொரு காரணமும் வரலாறும் உடையன என்றும், இன்று நாம் வழங்கிவரும் சொற்களில் பண்டைய மக்களின் சமய சமூக அரசியல் நிலைகளை விளக்கும் குறிப்புக்கள் பலவும் அமைந்து கிடக்கின்றன என்றும், அவைகளை யெல்லாம் ஆராய்ந்து அறிந்து மகிழ்ந்து தக்கவாறு வழங்கிவருவதே அறிவுடைய மக்களின் கடமையாகும் என்றும் பலபட விரித்துரைப்பர்.*

''களேபரம்'' என்னும் சொல்லினை நாம் பலகாற் கூறியும் கேட்டும் வந்திருக்கின்றோம். ஆயினும் அச்சொல்லைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குத் தெரியாது. எத்துணையோ பலப்பல சொற்களைத் திறனறியாமலும் பொருளுணராமலும் வழங்கி வருதல் போலவே, ''களேபரம்'' என்னும் சொல்லையும் நாம் ஏதோ ஒரு வகையாக வழங்கி வருகின்றோம். இச் சொல்,

> மக்களே மணந்த தாரம் அவ்வயிற்
> றவரை ஓம்பும்
> சிக்குளே அழுந்தி ஈசன் திறம்படேன்
> தவம் தோரேன்
> கொப்புளே போலத் தோன்றி அதனுளே
> மறையக் கண்டும்
> இக்களே பரத்தை ஓம்ப என்செய்வான்
> தோன்றி னேனே
>
> பெருங்கடல் மூடிப் பிரளயங்
> கொண்டு பிரமனும்போய்
> இருங்கடல் மூடி இறக்கும்
> இறந்தான் களேபரமும்
> கருங்கடல் வண்ணன் களேபர
> முங்கொண்டு கங்காளராய்
> வருங்கடல் மீளநின் றெம்மிறை
> நல்வீணை வாசிக்குமே
>
> —அப்பர்.

> ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து;
> நிறைக்க மால் உதிரத்தினை ஏற்றுத்,
> தோன்று தோள்மிசைக் களேபரம் தன்னைச்
> சுமந்த மா விரதத்த கங்காளன்;
> சான்று காட்டுதற்கு அரியவன்; எளியவன்
> தன்னைத் தன்னில் ஆம் மனத்தார்க்கு;
> மான்று சென்று அணையா தவன்தன்னை
> வலிவலம் தன்னில் வந்து கண்டேனே.
>
> —சுந்தரர்.

எனவரும் தேவாரப் பாடல்களில் பயின்று வந்துள்ளது. ''களேபரம்'' என்னும் சொல் உடல், எலும்பு, பிணம்

---

* The teacher ought to note for remark the living memorials, in the words of today, of the social and political conditions of the people in the ages gone by.

The inner life of people is stereotyped in their language and retained there for the instruction of future generations and the teacher will signally fail if he does not evoke from the fossil elements of words much of national history, customs and morals......"

—John Graham, English Word-Book.

என்னும் பொருள்பட இப்பாடல்களில் அமைந்துள்ளது. தாறுமாறு, சிக்கல், ஆரவாரம், குழப்பம் என்னும் இன்னோரன்ன பொருள்களில் பேச்சு வழக்கில் களேபரம் என்னும் சொல் இன்று வழங்கிவருகின்றது.

''சொற்களுக்குக் காரணமும் வரலாறும் உண்டு. அவைகளால் பண்டைய மக்களின் சமய சமூக அரசியல் நிலைகளை உணர்ந்துகொள்ளலாம்'' எனக் கூறும் மொழி நூலாரின் ஆய்வு முறைகொண்டு களேபரம் என்னும் சொல்லை நோக்கினால், இது ''களபரர்'' என்னும் சொல்லினின்று தோன்றியதாகலாம் எனக் கருத வாய்ப்புளது.

ஏனெனில், களபரர் அல்லது களப்பிரர் என்பார் நாடோடிகளாய் ஓரிடத்தும் நிலையாகத் தங்காமல் மக்களைச் சூறையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்து குழப்பம் விளைத்துவந்த கூட்டத்தினராவர். பல்லவர்களுக்கு முன்பே அவர்கள் தமிழகத்திற் புகுந்து சங்க கால வாழ்வைச் சீரழித்தனர். தமிழகத்திற் குழப்பம் விளைத்துத் தமிழர்களின் பொருள் வளங்களைச் சூறையிட்டுக் கலைகளை அழித்து, வாணிகத்தைக்கெடுத்து, அரசியலை அலைக்கழித்துச் சமயநெறியைத் தாக்கிக் கேடு சூழ்ந்தவர்கள் கள்பரர்களே என அறிஞர்கள் கருதுகின்றனர்.

களப்பிரர்கள் தமிழர் அல்லர்; தமிழ் நாட்டவரும் அல்லர். ஓரிடத்தும் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து, கொள்ளையடிப்பதனையே தொழிலாகக் கொண்டிருந்த நாடோடிகள் (Nomads) எனத் தெரிகின்றது. அவர்கள் புகுதற்கு முன்னர்ப் பல துறைகளிலும் சிறந்து, தமிழகம் மேலோங்கி யிருந்தது. களப்பிரர்களின் வருகைக்குப் பின்னரோ, கல்வி வாணிகம் செல்வம் அரசியல் சமயம் முதலிய 'துறைகளில் பெரு வீழ்ச்சி யுற்றது.

மூர்த்தி நாயனார் வரலாற்றிற் சேக்கிழார் குறிப்பிடும் கருநட மன்னன் களபரனே யாதல் வேண்டும்! கலியர்— களவர்— களபரர்— களப்பிரர் என பலவகையில் இவர்கள் வழங்கப்படுவர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதிக்குப் பின்னர்த் தமிழ் நாட்டின் பல பகுதிகளிற்புகுந்துகொலை கொள்ளை முதலியவற்றாற் குழப்பம் விளைத்த குறும்பர்கள்ஆகிய இவர்களைப் பாண்டியன் கடுங்கோனும், சிம்ம விஷ்ணு முதலாம் நரசிம்ம வர்மன் என்னும் பல்லவ மன்னர்களும், விக்கிரமாதித்தன் விசயாதித்தன் என்னும் மேலைச்சளுக்கிய அரசர்களும் வென்று புறங்கண்டனர்.

பாண்டியன் கடுங்கோன் என்பவன் சற்றேறக் குறைய கி.பி. 560-ல் களபரர்களை வென்று, தன் நாட்டைக் கைப்பற்றி மீண்டும் ஆளத் தொடங்கியதாக வேள்விக் குடிச் செப்பேட்டால் அறிகின்றோம்.

இக்களபரர்கள் உண்டாக்கிய குழப்பமே பண்டைய மக்களால் களேபரம் என வழங்கப்பட்டிருத்தல் கூடும். கலவரம் கலாபனை போன்ற சொற்களும் 'களேபரம்' என்பதன் இனமாய சொற்களே யாதல் காணலாம்.*

களபரர்களை அடுத்துப் பின் வந்த பல்லவர்களின் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், களேபரம் என்னும் சொல்லை வழங்கியிருத்தல் இயல்பே யாதலின், அது பண்டைத் தமிழகத்தில் களபரர்கள் விளைத்த குழப்பத்தினை அறிவிக்கும் சான்றாக இன்றும் நின்று நிலவித் தேவாரப் பாடல்களில் விளங்கிக் கொண்டிருப்பது, நம்மனோர்க்கு வியப்பும் விம்மிதமும் விளைவிக்கின்றதன்றோ!

---

* "The Madura Tamil sangams collapsed perhaps on account of dynastic changes and of the disturbances created by the kalabras who conquered the Pandya Coutry in the sixth century. The real cause of their disruption seems to have been the irruption of the kalabras into the Pandyanad. The common word 'Kalebaram' meaning confusion owed its origin to them."

—Prof. *M. S. Purnalingam Pillai.*

செய்திச் சுருக்கம்

கந்தர் சஷ்டி விழா :

சென்னை கோடம்பாக்கம், ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயிலில் கந்தர் சஷ்டி விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது. நாகர்கோயில் மகா வித்துவான் ஸ்ரீ ஆறுமுக நாவலர், சித்தாந்தக் கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. என். ஆர். முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., ஆகிய அறிஞர் பெருமக்கள் முறையே 'கந்தபுராண தத்துவம்', 'முருகன் பெருமை', 'ஆறுபடை வீடுகள்' என்னும் பொருள்கள் பற்றிச் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினர். குமாரி சரஸ்வதி, மதுரை இசைவாணி கீதா ரமணி, குமாரி விசாலாட்சி, திருமதி எம். ஆர். சரோஜா குழுவினர், சங்கீத வித்துவான் திரு. பி. அச்சுதராமன் குழுவினர், திரு. கே. வீரமணி—சோமு குழுவினர் ஆகியவர்களின் இன்னிசை நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெற்றன. நிர்வாக அதிகாரி திரு. எஸ். பால சுப்பிரமணியன், பி.ஏ,, பி.எல். அவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றார்கள்.



சென்னை திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் கோயில் கல்யாண மண்டபத்தில், இந்து சமயப் பரப்புநர்—விளக்குநர் பயிற்சி நிலையத்தினை, நமது தமிழக முதலமைச்சர் திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள் தொடங்கி வைத்தல் — (6—10—1966).